
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

4-24

விலை ரூ. 2.00

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




## தேர்தல் புறக்கணிப்பு ஏன்?-சிறப்பிதழ்!

படிப்பகம்

www.padippakam.com

# ஆராய்ச்சி என்ற பெயரில் பேராசிரியரின் பகற்கொள்ளை!

நாடெங்கும் பல்கலைக் கழகங்களில் துறைத் தலைவர்களும், முதன்மைப் பேராசிரியர்களும் இட்டதே சட்டம் எனும் துரைத்தனமும், ஆராய்ச்சி என்ற பெயரில் அவர்கள் நடத்தும் கொள்ளையும், பட்ட மேற்படிப்பு மாணவர்களைக் கொத்தடிமைகளாக நடத்தும் அவலமும் நாளும் பெருகி வருகிறது. பானை சோற்றைப் பதம் பார்த்தாற் போல, தஞ்சை - பூண்டி புஷ்பம் கல்லூரியின் பேராசிரியர் அப்துல் ரகுமான் நடத்திவரும் கொள்ளையும் அடாவடித்தனங்களும் இதற்குச் சான்றாக உள்ளன.

பூண்டி புஷ்பம் கல்லூரியின் சார்பில், அதிராம்பட்டினத்தை ஒட்டியுள்ள ஏரிப்புறக் கரையில் ஒருங்கிணைந்த உப்பள சிகப்பு பூச்சி திட்டம் (Integrated Artemia Project)★ 12 லட்ச ரூபாய் திட்ட மதிப்பீட்டில் துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு சுற்றுப்புற சூழல் துறையினரால் நிதியுதவி அளிக்கப்படுகிறது. இதன் ஏகபோக பொறுப்புகள் அனைத்தும் புஷ்பம் கல்லூரியின் விலங்கியல் துறை பேராசிரியர் அப்துல் ரகுமான் என்பவரிடம் உள்ளது. இத்திட்டத்திற்கு ஆராய்ச்சி உதவியாளர் ஒருவரும், இளநிலை திட்ட ஆராய்ச்சியாளர் இருவரும், தொழில்நுட்ப உதவியாளர் மூவரும் ஆக மொத்தம் ஆறு பேரை வேலைக்கு அமர்த்த திட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவர்களுக்கு சம்பளம் முறையே ரூ.2050, ரூ.1400, ரூ.950 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடல் உயிரியல் மற்றும் நீரியலில் முதுநிலைபட்டம் பட்டம் பெற்ற சந்திரசேகரன் என்பவர், இறால் வளர்ப்பு மற்றும் சிகப்பு பூச்சி வளர்ப்பில் மூன்றாண்டு அனுபவமுள்ளவர் என்ற அடிப்படையில் இத்திட்டத்தில் தொழில்நுட்ப உதவியாளராக பணியில் அமர்த்தப்பட்டார். இவருக்கு வழங்க வேண்டிய சம்பளம் ரூ.950க்குப் பதில் ரூ.725 மட்டும் கொடுத்துவிட்டு மீதியை அடுத்த மாதம் தருவதாக கூறிய பேராசியர் அப்துல் ரகுமான், பின்னர் இரு மாதங்களாக உரிய சம்பளத்தை வழங்காமல் அடாவடித்தனம் செய்தார். சம்பள பாக்கியைக் கேட்ட சந்திர சேகரனை வேலையைவிட்டு நிறுத்தி விடுவேன் என்று மிரட்டவும் செய்தார். மேலும் இவரின் கீழ் பணியாற்றும் அனைவருக்கும் இதேபோல் உரிய சம்பளத்தை வழங்காமல் அராஜகம் புரிந்து வருகிறார்.

இவர் நினைத்தால் யாரையும் வேலைக்குச் சேர்க்கலாம் அல்லது நீக்கலாம் என்ற அவல நிலை இன்னும் தொடர்கிறது. பல பத்தாயிரங்களைச் செலவு செய்துவிட்டு, இவரால் அவமானப்படுத்தப்பட்ட 7 பட்ட மேற்படிப்பு மாணவர்கள், பாதியிலேயே படிப்பைவிட்டு விலகினர். இவரது அடாவடித்தனத்தால் ஆராய்ச்சிக் கட்டுரைகளை உரிய காலத்தில் சமர்ப்பிக்க முடியாமல் பல்கலைக்கழகப் பதிவு ரத்தாகி 5 மாணவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். ஆராய்ச்சிக் கட்டுரைகளை 'முடிதிருத்தும்' இவர் கையெழுத்துப் போடாததால், தற்போது ஓரிரு மாணவர்கள் பல்கலைக்கழகம் பதிவு ரத்தாகிவிடும் நிலையில் பரிதவித்துக் கொண்டிருக்கின்றனர். இவர் கையெழுத்து போடாததற்குக் காரணம், அவர்கள் தமது உதவித் தொகையை ஏப்பம் விட்ட இவரை எதிர்த்து கேட்டதுதான்! ஆராய்ச்சி மாணவர்களுக்கு அரசாங்கம் வழங்கும் உதவித் தொகை ரூ.800க்குப் பதில் ரூ.400 மட்டும் கொடுப்பதும் அல்லது கொடுக்காமலேயே விழுங்குவதும் இவருக்கு கைவந்த கலை. ஏற்கனவே இவரது பொறுப்பில் இயங்கிய முத்துப்பேட்டை சதுப்பு நில நீர் ஆராய்ச்சித் திட்டத்தில் பணியாற்றிய இருவரது மொத்த ஊதியமான ரூ.24,000ஐக் கொடுக்காமல் இவர் ஏப்பம் விட்டுவிட்டார். இதேபோல் கோடியக் கரையில் துவங்கப்பட்ட கடல் ஆமை ஆராய்ச்சித் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒன்றரை லட்ச ரூபாயில் சில பத்தாயிரங்களை மட்டும் செலவு செய்துவிட்டு மீதியை அமுக்கிவிட்டார்.

ஒரு ஆராய்ச்சித் திட்டத்திற்கு, திட்ட மதிப்பீட்டு நிதியைப் பெற வேண்டும் என்றால் அத்துறையில் நிறைய ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டிருக்க வேண்டும். ஆனால் ''இந்து'' பத்திரிக்கை நிருபர் கணபதி என்பவரிடம் ரூ.5000 லஞ்சம் கொடுத்து இவர் கோடியக் கரையில் ஆராய்ச்சி செய்ததாக ஒரு கட்டுரையை எழுதச் செய்து, அதை அதிகாரிகளிடம் காட்டி திட்டத்திற்கான நிதியைக் கறந்துவிட்டார். இந்த பலே கில்லாடி! இதற்காக ''இந்து'' பத்திரிக்கை நிருபர் கணபதியிடம் மாதாந்திர வேலை அறிக்கைகளை சமர்ப்பிக்கும்படி ஆராய்ச்சி மாணவர்களை நிர்பந்தப்படுத்துகிறார். அறிக்கைகளைத் தராவிட்டால் வேலை இழக்க நேரிடும் என்று இவரது கையாளான நிருபர் கணபதி, ஆராய்ச்சி மாணவர்களை மிரட்டி வருகிறார்.



சிகப்பு பூச்சி திட்டத்திற்கு வாங்கியிருக்கும் நிலம் கூட, மலை முழுங்கி அப்துல் ரகுமானின் பெயரில்தான் வாங்கப்பட்டிருக்கிறது. நிலம் மட்டுமின்றி இத்திட்டத்திற்கான நீர் இறவை எந்திரங்கள் வாங்கியதிலும் கமிஷன் அடித்து பல பத்தாயிரங்களைத் தனது பாக்கெட்டில் திணித்துக் கொண்டுள்ளார். இப்பகற் கொள்ளை பேராசிரியர் மேலும், இந்த நிலம் மற்றும் எந்திரங்கள் அனைத்தும் மூன்றாண்டுகால திட்ட முடிவில் தனக்கே சொந்தமாகும் வகையில் கனகச்சிதமாக ஏற்பாடுகளையும் செய்து கொண்டுள்ளார். இவரது அயோக்கியத்தனங்களை யாரும் தட்டிக் கேட்காததாலும், நிர்வாகமும் இவரைக் கண்டுகொள்ளாததாலும் இந்த ஊழல் பெருச்சாளி தனிக்காட்டு ராஜாவாக வலம் வந்து கொண்டிருக்கிறார்.

இதில் கொடுமை என்னவென்றால், சிகப்பு பூச்சி வளர்ப்பு திட்டத்தில் பல பத்தாயிரக் கணக்கான உப்பளத் தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயத்தில் உள்ளனர். சிகப்பு பூச்சி மற்றும் இறால் வளர்ப்பு பெருமளவில் ஏற்றுமதியைச் சார்ந்த உற்பத்தியாக உள்ளது. கடற்கரைப் பகுதிகளில் பெரும்பாலான உப்பளங்களை குளங்களாக மாற்றி ஒரு சிறு கும்பல் மட்டும் லாபமீட்டக்கூடிய தொழிலாக பரவி வருகிறது. இதன்மூலம் மழைக்காலத்தில் விவசாய உற்பத்தியிலும், கோடையில் உப்பளத்திலும் வேலை செய்து பிழைக்கும் பல்லாயிரக் கணக்கான உப்பளத் தொழிலாளர்கள் வேலை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். குறிப்பாக, அதிராம்பட்டினம்/ஏரிப்புறக்கரை பகுதியில் நான்கு இறால் வளர்ப்புப் பண்ணை மற்றும் மேற்குறிப்பிட்ட சிகப்பு பூச்சி வளர்ப்பு திட்டத்தால் 200க்கும் மேற்பட்ட உப்பளத் தொழிலாளர்கள் வேலை இழந்து தவிக்கின்றனர்.

நமது வரிப்பணத்தை வாரியிறைத்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பு - மேம்பாடு என்ற பெயரில் இறால் பண்ணை முதலாளிகளை கொழுக்க வைத்து உப்பளத் தொழிலாளிகளை வீதியில் வீசியெறியும் நயவஞ்சகத் திட்டம்தான் இது! இறால் முதலாளிகள் மட்டுமல்ல, நாடெங்கும் ஆராய்ச்சி என்ற பெயரில் அப்துல் ரகுமான் போன்ற பல அயோக்கிய சிகாமணிகளும் இதன்மூலம் கொள்ளையடிக்கின்றனர். கொத்தடிமைத்தனத்திற்கு எதிராகக் குமுறும் மாணவர்கள் உப்பளத் தொழிலாளர்களுடனும் உழைக்கும் மக்களுடனும் ஒன்றிணைந்து எரிமலையாகக் கிளர்ந்தெழுந்தால்தான் இம்மோசடித் திட்டத்தையும், அப்துல் ரகுமானின் 'ஆராய்ச்சி' கொள்ளையையும் முறியடிக்க முடியும்.

— தகவல்:
விவசாயிகள் விடுதலை முன்னணி,
பட்டுக்கோட்டை வட்டம்.

---

**★ Artemia என்பது உப்பளங்களில் இறால் போன்று இருக்கும் ஒரு வகை நத்தை இனமாகும். இதனை ''சிகப்பு பூச்சி'' என்று இப்பகுதியில் அழைக்கிறார்கள். ஆங்கிலத்தில் brine - shrimp என்று கூறுகிறார்கள்.**



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

நான்காமாண்டு

**24**

1-15 நவம்பர்'89

உள்நாடு
தனி இதழ்: ரூ.2/-
ஆண்டு சந்தா: ரூ.48/-

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா:US$ 11



படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ்.மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015


# ஓட்டுச்சீட்டுகளைக் கிழித்தெறியுங்கள் அதிகாரத்தைக்கைப்பற்ற அணி திரளுங்கள்

அன்பார்ந்த வாக்காளப் பெருமக்களே!

ஒன்பதாவது முறையாக மீண்டும் ஓட்டுக்கேட்டு உங்களிடம் ஓடிவருகின்றன, அரசியல் கட்சிகள். "ஓட்டுப்போடுவது இந்த நாட்டின் குடிமகன் என்ற முறையில் உங்கள் உரிமை! எனவே நீங்கள் ஓட்டளிக்கத் தவறவே கூடாது! அது உங்களது தேசியக் கடமை!" என்று எல்லோருமே உபதேசிக்கிறார்கள். நீங்களும் இந்த நாட்டின் குடிமகன்; உங்களுக்கும் ஓர் உரிமை உண்டு என்பது அவர்களுக்கு இப்போதுதான் நினைவுக்குவருகிறது. இந்த நாட்டு இளைஞர்களுக்குக் கூட பொறுப்பை உணர்த்தவே 18 வயது வரை ஓட்டளிக்கும் வயதைக்குறைத்து உரிமை வழங்கியுள்ளார்களாம்!

ஓட்டுப்போடுவது மட்டுமல்ல; வேறு எந்தக்கடமையைத் தான் இந்த நாட்டின் மக்கள் நிறைவேற்றத் தவறியிருக்கிறார்கள்? எவ்வளவோ துன்ப துயங்களையும், கொடுமைகளையும் சகித்துக்கொண்டு, சட்டம் - ஒழுங்கு, நீதி - நேர்மை தவறாது கடுமையாக உழைத்து வருகிறார்கள். ஆனால் மக்களிடம் ஓட்டுவாங்கி அதிகாரத்துக்குப்போன அரசியல்வாதிகளும் சரி; ஓட்டுவாங்காமலேயே நேரடியாக அதிகாரம் செலுத்திவரும் அதிகாரவர்க்க அரசு எந்திரத்தினரும் சரி - தங்களின் கடமைப் பொறுப்புகள் - வாக்குறுதிகளில், மக்களின் எதிர்பார்ப்புகள் - தேவைகளில் எதையாவது, எப்போதாவது நிறைவேற்றியிருக்கிறார்களா?

மீண்டும் ஒரு முறை யாருக்கோ ஓட்டுப்போட்டுவிட்டு ஏமாந்து, ஏங்கி நிற்பதற்கு முன்பு பல கோணங்களில் இருந்தும் திரும்பத் திரும்ப இதைப்பற்றி யோசியுங்கள். யாருக்கு ஓட்டுப்போடுவது என்பதைவிட யாருக்கும் ஓட்டுப்போடுவது அவசியந்தானா - சரிதானா? அதனால் இந்த நாட்டுக்கோ, நமக்கோ ஏதாவது பயனுண்டா? ஏதாவது மாற்றத்தைக் கொண்டுவந்துவிட முடியுமா? என்கிற அடிப்படையான கேள்விகளையே எழுப்பி விடைகாணுங்கள்.

முதலாவதாக, தேர்தல்களில் போட்டியிடும் கட்சிகள், நபர்களில் யாருக்குமே மக்கள் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தகுதியோ, திறமையோ, நோக்கமோ, நேர்மையோ கிடையாது. கோடிகோடியாகக் கருப்புப்பணத்தை வாரி இறைத்து தேர்தல்களில் இவர்கள் போட்டியிடுவது மக்களுக்குச் சேவை செய்வதற்காக அல்ல. அடுத்த ஐந்தாண்டுகளுக்கு இன்னும் பல மடங்கு லஞ்சஊழல், அதிகார முறைகேடுகளால் கொள்ளையடிப்பதற்குத்தான். அரசியல் பிழைப்புவாதிகள், பதவிவெறியர்கள், கட்சிமாறிகள், சாதி - மதவெறியர்கள், பாசிஸ்டுகள், கிரிமினல் குற்றவாளிகள் ஆகிய இவர்களில் யாருக்காவது ஓட்டுப்போடுவது சரியானதுதானா?

இரண்டாவதாக, ஜனநாயகத்தின் உயிர் மூச்சென்று சொல்லப்படும் தேர்தல்கள் எங்கேயும் நேர்மையானதாகவோ, மக்களது விருப்பங்களைப் பிரதிபலிப்பதாகவோ, மக்களே தீர்மானிப்பதாகவோ இல்லை. சாதி - மதவெறி மற்றும் பணபலத்தோடு, நாட்டின் பலதொகுதிகளிலும் கிரிமினல் - மஃபியா கும்பல்களைவைத்து பலாத்காரமான முறையில் வாக்காளர்கள் விரட்டப்படுகின்றனர்; வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றிக் கொள்வது, ஓட்டுச்சீட்டுக்களையும், ஓட்டுப்பெட்டிகளையும் பிடுங்கிக் கொள்வது, ஓட்டு எண்ணுமிடங்களில் புகுந்து கலவரம் செய்வது ஆகிய தேர்தல் தில்லுமுல்லுகள் - கிரிமினல் குற்றங்கள் செய்வது வழக்கமாகிவிட்டது.

மூன்றாவதாக, முக்கியமாக - உண்மையில் அனைத்து நிர்வாக அதிகாரமும் உடைய அதிகார வர்க்க - இராணுவ - போலீசு அரசு எந்திரம் எவ்விதக் கட்டுப்பாடுமில்லாத - மூக்கணாங்கயிறு இல்லாத எருமைமாடுபோல மக்கள் மீது பாயும் மிருகம். ஆட்சிக்கு வரும் அரசியல்வாதிகளைவிடப் பன்மடங்கு அதிகமான லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகளில் ஊறித்திளைக்கிறது. அவர்களை இதற்காகப் பயிற்றுவித்து, பங்குபோடுவதோடு, சிக்கிக்கொண்டால் மூடி மறைத்து தப்புவிப்பதற்காக முழு சக்தியையும் பயன்படுத்துகிறது. நீங்கள் யாருக்கு ஓட்டுப்போட்டாலும், எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும், அதிகாரத்திமிர் பிடித்த அதிகாரவர்க்க அரசு எந்திரத்தினரைத் திருத்தவோ, மாற்றவோ முடியாது.

ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகளோ, அதிகாரவர்க்கத்தினரோ, யாராவது நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை செய்வதற்காகத்தான் இவ்வளவு 'பாடுபட்டு' பதவிக்கு வருகிறார்கள் என்று சொன்னால் நீங்கள் நம்புகிறீர்களா? எவ்வளவு நம்பிக்கை வைத்து அதிகாரம் முழுவதையும் அவர்களிடம் விட்டு வைத்திருக்கிறீர்கள். ஆனால் அவர்கள் எவ்வளவு பெரிய நம்பிக்கை துரோகிகளாக இருக்கிறார்கள்! தங்களுடைய சுய நலனுக்காக தேசத்தின் நலனையும், அதன் தற்காப்பு - ராணுவ இரகசியங்களையும் காட்டிக்கொடுக்கிறார்கள். ஆதிக்க வெறிபிடித்து அண்டை நாடுகள் மீது படையெடுத்து அந்நாட்டு மக்களையும், இந்நாட்டு ராணுவத்தினரையும் பலியிடுகிறார்கள். அரசியல் ஆதாயம் கருதி சொந்தச் சகோதரர்களே ஒருவரைஒருவர் படுகொலை செய்து கொள்ளும் சாதி, மதவெறிக் கலவரங்களைத் தூண்டிவிட்டு ரத்தம் குடிக்கிறார்கள். சொந்த நாட்டு மக்கள் வறுமையிலும் பட்டினியிலும் சாகும் போது அவர்கள் ஆடம்பர - ஆபாச வக்கிர வாழ்வு வாழுகிறார்கள்; வெளிநாடுகளிலே கருப்புப்பணத்தைக் குவிக்கிறார்கள். பதவியைப் பிடிப்பதற்காகவும், பதவியைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும் அவர்கள் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் போவார்கள்! என்ன வேண்டுமானாலும் செய்வார்கள்! பாசிச - இராணுவ சர்வாதிகாரத்தைக் கட்டவிழ்த்துவிட்டு நாட்டையே திறந்த வெளிச்சிறையாக - சித்திரவதை முகாமாக மாற்றிவிடுவார்கள்! எந்த ஓட்டுக்கட்சியும் இதற்கு விதிவிலக்கல்ல! ➡

படிப்பகம்

www.padippakam.com

இருந்தபோதும், இந்த நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கும் உரிமை உங்களுக்கு உண்டு; உங்கள் ஓட்டுச்சீட்டுக்கு அந்த வல்லமை இருக்கிறது என்கிறார்களே - அது எவ்வளவு பெரிய பித்தலாட்டம், மோசடி தெரியுமா? எல்லா அவலங்களுக்கும் நீங்கள்தான் காரணம் என்று மீண்டும் மக்கள் மீதே பழிபோடுவதற்கான நயவஞ்சகம்! ஒட்டுமொத்த அரசியல் அமைப்பே இந்த நம்பிக்கை துரோகிகள், நயவஞ்சகர்கள் மற்றும் இவர்களின் எஜமானர்களான தரகு - அதிகார முதலாளிகள், நிலப்பிரபுக்களின் நலன்களுக்கானதாக மட்டுமே உள்ளது. போதும்! இவர்களின் அரசியல் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டு நாம் அனுபவித்த அக்கிரமங்களும், அட்டூழியங்களும் போதும்! இனி இந்த நாட்டு மக்களே அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி நேரடியாக நிர்வகித்து ஆண்டுகொள்ளும் ஒரு புதிய - புதிய ஜனநாயக ஆட்சி முறையை நிறுவிக்கொள்வோம். யாருக்கும் ஓட்டுப்போட வேண்டாம்! யாருடைய தயவையும் எதிர்பார்த்து நிற்க வேண்டாம்!

**போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்!**

**புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிதிரள்வோம்!**

## அறிவிப்பு!

**அன்பார்ந்த வாசகர்களே!**

ஏற்கனவே அறிவித்தபடி, பத்திரிக்கைக் காகித விலையேற்றம் ஆகிய தவிர்க்க இயலாத காரணங்களால் இந்த இதழிலிருந்து "புதிய ஜனநாயகம்" ஏட்டின் விலை ரூ.2/- ஆக உயருகிறது. விலையேற்றத்திற்கு ஏற்ப ஏற்கனவே சந்தா செலுத்திய வாசகர்களுக்கு கணக்கிட்டு பத்திரிக்கை அனுப்பப்படும். "புதிய ஜனநாயகம்" தன் புரட்சிப்பணி தொடர தொடர்ந்து ஆதரவு தரும்படி கோருகிறோம்.

— ஆசிரியர் குழு

# இடது 'கம்யூனிஸ்ட்' கட்சியினரின் காமவெறி பயங்கரவாதம்!

கஸ்தகாரி சங்காதனா என்ற அமைப்பு மகாராஷ்டிரா மாநிலத்தில் செயல்பட்டு வருகிறது; இது ஒரு தன்னார்வ குழுவாகும். இந்த அமைப்பின் தொண்டரான 24 வயதாகும் ஒரு பெண்ணையும் அவருடன் சேர்த்து 20-25 ஆதிவாசிப் பெண்களையும் இடது 'கம்யூனிஸ்ட்' கட்சியைச் சேர்ந்த 500-600 குண்டர்கள் கடத்திச் சென்றுள்ளனர்; கடத்திச் சென்று அவர்களை ஆபாசமாக, கொச்சையாக பேசியும் மானபங்கம் செய்தும் சித்திரவதைக்குள்ளாக்கி இருக்கின்றனர். குறிப்பாக இடது 'கம்யூனிஸ்ட்' கட்சி தொண்டர்களான ஜவஹர் தாலுகாவைச் சேர்ந்த ராம்ஜி தபத் மற்றும் ரானா தபாலி, வடா தாலுக்காவைச் சேர்ந்த மதுக்கர் மற்றும் டட்டு ஆகிய நான்கு பேரும் இன்னும் நான்கு பேரும் சேர்ந்து அந்த பெண் தொண்டரைக் கற்பழித்துள்ளனர். தொடர்ந்து பலவாறும் 48 மணிநேரம் சித்திரவதை செய்து உடலும் உள்ளமும் உடைந்துபோன நிலையில் அப்பெண்களை விடுவித்துள்ளனர். அக்டோபர் மாதம் முதல் தேதி இது நடந்திருக்கிறது.

மேலும், அந்தப் பகுதியிலிருந்து ஓடிப்போகாவிட்டால் மேலும் கொடூரமாக சித்திரவதை செய்வோம் என்று அந்த தொண்டரை இடது 'கம்யூனிஸ்டு' குண்டர்கள் மிரட்டி உள்ளனர்.

கடந்த 10 வருடங்களாகவே சங்காதனா வேலை செய்யும் கிராமங்களில் இடது 'கம்யூனிஸ்ட்' தடியர்கள் புகுந்து தாக்குவது, சூறையாடுவது, பெண்கள் மீது காமவெறி பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விடுவது என்று அட்டகாசம் செய்து வருகிறார்கள். கஸ்தகாரி சங்காதனாவின் அமைப்பின் தலைமையிலும் செயல்பாட்டிலும் பெண்கள் உணர்வுபூர்வமாக பங்கெடுத்து போர்க் குணத்துடன் செயல்பட்டு வருவதை தடுக்கவே இந்த பேடித்தனத்தை செய்து வருகின்றனர்.

கஸ்தகாரி சங்காதனா செயல்பாட்டினால் மக்கள் அவர்கள் பக்கம் அணிதிரண்டு விடுகின்றனர். இது போலிகள் வோட்டுப் பொறுக்குவதில் பாதிப்பு ஏற்படுத்துகிறது என்பதால் தான் இவ்வளவு ஆத்திரம்; அக்கிரமம். கடந்த பத்தாண்டுகளாகவே இவ்வாறு செய்து வருகின்றனர்; பலதடவை எதிர்ப்பு தெரிவித்தும் தொடர்ந்து காமவெறி பயங்கரவாதத்திலும் பலாத்காரத்திலும் இடது 'கம்யூனிஸ்டு' காலிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

தாங்கள் செல்வாக்காக உள்ள பகுதிகளில் தங்கள் கட்சியிலிருந்து யாராவது விலகினால் அவர் மீது ஊர்க்கட்டுப்பாடு போடுவது, புரட்சியாளர்கள் பிரச்சாரம் செய்ய வந்தால், 'இது எங்கள் ஏரியா; பிரச்சாரம் செய்யக்கூடாது' என தடுப்பது, மிரட்டுவது, தாக்குவது என்று செய்து வருகின்றனர்; மகராஷ்டிரத்தில் கிரிமினல் அரசியலுக்கு முன்னேறியுள்ளனர்.

பதவி எச்சில் இலையை வழித்து நக்க வோட்டு பலம் வேண்டும் என்பதற்காக அரசியலே இல்லாமல் எல்லா அயோக்கிய முறைகளையும் கையாண்டு கட்சி கட்டும் இந்த போலிகளை மக்கள் விரட்ட வேண்டும்!

'மார்க்சிஸ்ட்' காலிகளின் காமவெறியாட்டத்தைக் கண்டித்தும், நடவடிக்கை எடுக்கக் கோரியும் பம்பாயில் கல்லூரி மாணவிகள், சமூக சேவகர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்




**போலி ஜனநாயகத்**
**தேர்தலைப் புறக்கணிப்போம்**
**புதிய ஜனநாயகப்**
**புரட்சிக்கு அணி வகுப்போம்**

— மக்கள் விரோத மோசடித் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டிய அவசியத்தை அரசியல் ரீதியாகவும் நடைமுறை உதாரணங்களுடனும் கேலிச் சித்திரங்களுடன் எளிமையாக விளக்கும் 48 பக்கங்களைக் கொண்ட சிறுநூல்.

**புதிய ஜனநாயகம் வெளியீடு**
**(இரண்டாம் பதிப்பு)**
**விலை: ரூ.2/-**
**அஞ்சல் செலவு 0.30 பைசா**

நூலை அஞ்சல் மூலம் பெற விரும்புவோர் ரூ.2.30 பைசா மதிப்புள்ள அஞ்சல் தலைகளை (STAMPS) அனுப்புக.



படிப்பகம்

www.padippakam.com



# கம்யூனிசமே வெல்லும்!

**நவம்பர் 7, 1917**

பூவுலகில் முதல் சோசலிச நாடு தோன்றிய நாள்!

ஏகாதிபத்தியம் காகிதப்புலியே என தோலுரித்துக்காட்டி காலனிய மக்களின் மனங்களில் விடுதலைக் கனலை ஏற்றி வைத்த நாள்! முதலாளித்துவ சகாப்தம் முடிந்து, சோசலிச சகாப்தம் தொடங்கிவிட்டது என்பதை சாற்றிய சரித்திர நாள்!

அந்த நவம்பர் புரட்சி நாளுக்கு இன்று 73வது பிறந்த நாள்!

இன்று முன்னாள் சோசலிச நாடுகளில் முதலாளித்துவ மீட்சி நடந்து அவைகள் முதலாளித்துவ நாடுகளாகிவிட்டன. இதை முதன் முதலில் சுட்டிக்காட்டியவர்கள் உலகெங்கிலும் இருந்த கம்யூனிசப் புரட்சியாளர்களே. சோசலிச சமுதாயம் கம்யூனிச சமுதாயமாக வளர்கின்ற பாதை பின்னடைந்துள்ளது; உலகப் பாட்டாளி வர்க்க இயக்கம் தற்காலிக தோல்வியைத் தழுவியுள்ளது என்ற உண்மையை கம்யூனிசப் புரட்சியாளர்களே எடுத்துரைத்தனர்.

ஆனால், முதலாளித்துவ நாடுகளாக மாறிவிட்ட ரசியா போன்ற நாடுகளை வளர்ந்த சோசலிச நாடுகள் என்றே குருஷ்சேவும் அவருடைய சர்வதேச சிஷ்யகோடிகளும் சித்தரித்து வந்தனர். ஏகாதிபத்திய முதலாளித்துவ அறிஞர்களும் அவர்களுடைய தாசர்களுமோ இன்னும் ஒரு படி மேலே போய் அவைகளை கம்யூனிச நாடுகள் என்றே வர்ணித்தனர்.

இன்று அந்த நாடுகள் யாவருக்கும் புரியும்படியான முதலாளித்துவ வடிவங்களை எடுத்தவுடன், "அதோ பார்த்தீர்களா, நாங்கள் கணித்தபடி கம்யூனிசம் காலாவதியாகி விட்டது" என்ற தீர்ப்பை வழங்கி அகமகிழ்ந்து போகிறார்கள் முதலாளித்துவ அறிஞர்கள்.

பழ மரம் முதல் முதலில் காய்க்கும் போது எல்லா பூக்களும் பழமாகிவிடுவதில்லை. அடுத்தடுத்து காய்ப்புகளில் தான் நிலையான விளைச்சல் இருக்கும்.

மனித வரலாற்றிற்கும் இது பொருந்தும். மனித சமுதாய வரலாற்றில் ஒரு புதிய வரலாற்றுக் கட்டம் தோன்றி அப்படியே நிலைத்துவிடுவதில்லை. பின்னடைவுகள், தோல்விகள் ஏற்பட்டு ஏற்ற இறக்கத்திற்குப் பின்தான் நிலைபெறுகிறது. முதலாளித்துவ கட்டத்திற்குள் மனித வரலாறு நுழைந்தபோதும் இப்படித்தான் நடந்தது. வரலாறு, ரம்பத்தின் பற்கள் போன்று ஏற்ற இறக்கம் கொண்டு ஆனால் அதே சமுதாயத்தில் ஏறுமுகத்தில் முன்னேறுகிறது. வரலாற்றின் விதி இதுவே. முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்திற்கு சமுதாயம் மாறி வளர்ந்து செல்வதிலும் இந்த விதியே இயங்குகிறது. எனவே, கம்யூனிசத்திற்கு தற்காலிக பின்னடைவுகள், தோல்விகள் ஏற்படுவது இயல்பே.

♦ சோசலித்திற்கு முன்வரை, சமுதாயம் ஒரு வரலாற்றுக் கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்திற்கு முன்னேறிய போது, ஒரு சிறு பிரிவினர் பெரும்பான்மையினரை அடக்கி ஒடுக்கிச் சுரண்டுவதை ஒழிக்கவில்லை. மாறாக, ஒரு சுரண்டலாளர்களின் தொகுதியினிடத்தில் இன்னொரு சுரண்டலாளர்களின் தொகுதியையே கொண்டு வந்தது. வரலாறு முன்னேற, முன்னேற அதிக அளவில் உழைக்கும் மக்கள் சுரண்டப்பட்டார்கள். ஆனால் சோசலிச சமுதாயமோ மனிதனை மனிதன் சுரண்டுவதையே முற்றாக ஒழிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு சமுதாய அமைப்பாகும். எனவே, இந்த சமுதாய அமைப்பை நிலைநிறுத்த ஒப்பீட்டு வகையில் நீண்டநாள் பிடிக்கும். அதற்கான போராட்டம் கடுமையானதாக இருக்கும்.

♦ சோசலிசத்திற்கு முன்புவரை, சுரண்டலாளர்களை ஒடுக்க சுரண்டுபவர்கள் வன்முறைக் கருவியான அரசு எந்திரத்தை பிரயோகித்து வந்தனர். சோசலிசப் புரட்சிக்கு முன்பு நடந்த புரட்சிகள் அனைத்தும் இந்த அரசு எந்திரத்தை செழுமைப்படுத்தியே — நவீனப்படுத்தி, பெரிதாக்கியே வந்திருக்கின்றன. ஆனால் சோசலிசப் புரட்சியோ இந்த அரசு எந்திரத்தையே உலர்ந்து உலரச் செய்கின்ற வரலாற்றுப் பணியை நோக்கமாகக் கொண்டதாகும்.

இதுவரை ஒடுக்கப்பட்டு, இருட்டில் வைக்கப்பட்டிருந்த பாட்டாளிகளை ஆளுகின்ற வர்க்கமாக மாற்ற நவீன கல்வி, நிர்வாக முறைகளில் பயிற்றுவிக்க வேண்டிய பிரம்மாண்டமான பணியை எதிர் கொண்டுள்ளது.

♦ சோசலசத்திற்கு முன்பு மாபெரும் சாதனைகளை மனித நாகரிகம் சாதித்துள்ளது; ஆனால் மனிதனின் மிகவும் கீழ்மையான இயல்புணர்வுகளையும், உணர்ச்சி வெறிகளையும் தூண்டிவிட்டுத்தான் நாகரிகம் இச்சாதனைகளைச் சாதித்தது. மனிதனின் மற்ற எல்லாத் திறன்களும் பாதகம் அடையும் வண்ணம் அவற்றை வளர்த்துத்தான் அச்சாதனைகளை வளர்த்தது. ஆனால், சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் பூண்டோடு ஒழிப்பதை தனது நோக்கமாகக் கொண்ட சோசலிச நாகரிகமோ மனிதனின் மேன்மையான, ஆரோக்கியமான, ஆக்கபூர்வமான, உணர்வுகளைத் தூண்டித்தான் இச்சாதனைகளைச் சாதிக்க வேண்டும். ஆயிரக்கணக்கான ஆண்டுகள் இழிந்த குணநலன்களால் தூண்டப்பட்டு வளர்ந்து வந்திருக்கிற கோடிக்கணக்கான மக்களை சமத்துவம், பரஸ்பர உதவி, பொதுமை நலம், உழைத்து உண்ணுதல் போன்ற குணநலன்கள் கொண்ட மனிதர்களாக மாற்றும் சிக்கலும் கவனமும் நிறைந்த பிரம்மாண்டமான பணியை சோசலிசம் எதிர்கொண்டுள்ளது.

எனவே, பொருளாதார சுரண்டல், அரசியல் அடக்குமுறை, இழிந்த குணநலன்களைத் தூண்டிவிடுகிற நாகரிகம் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து சுரண்டலை பூண்டோடு ஒழித்தல், அரசு எந்திரத்தையே ஒழித்தல், பாட்டாளி வர்க்கத்தை ஆளும் வர்க்கமாக வளர்த்தல், உழைப்பு - பொதுமை நலம் என்ற நாகரிகம் ஆகிய கூறுகளைக் கொண்ட கம்யூனிச சமுதாயத்திற்கு மாறுகின்ற ஓர் இடைநிலைக் கட்டமே சோசலிசமாகும்; இறுதிக்கட்டம் தான் கம்யூனிச சமுதாயமாகும்.

எனவே, சோசலிச சமுதாயத்தில் கம்யூனிச அம்சங்கள் முதலாளித்துவ அம்சங்கள் இரண்டும் இருக்கும்; கம்யூனிச அம்சங்கள் ஆதிக்கத்தில் இருக்கும்; ஆனால் இதுவே அதன் இறுதி வெற்றிக்கான உத்திரவாதமாகி விடுவதில்லை. மக்களின் எதிரிகளை ஒழிப்பதிலும் மக்களுக்கிடையிலான முரண்பாடுகளைக் கையாள்வதிலும் தவறுகள் இழைக்கப்பட்டால் அது முதலாளித்துவ அம்சங்கள் மேலோங்கி சமுதாயம் முதலாளித்துவமாக மாறிவிடுவதில்தான் கொண்டுபோய் விடும்.

எனினும் இது வரலாற்றின் போக்கை மாற்றி விடுவதில்லை; ஏனெனில், முதலாளித்துவம் எப்போது ஏகாதிபத்தியமாக மாறியதோ அப்போதே முதலாளித்துவம் அழுகத் தொடங்கிவிட்டது. அதன் விதி முடிந்துவிட்டது.

எனவே ஒரு சோசலிச நாட்டிலோ, அல்லது ஒருசில சோசலிச நாடுகளிலோ முதலாளித்துவம் திரும்பவும் நிலைநாட்டப்படுவது கம்யூனிசத்தின் தற்காலிக தோல்வியே;

கம்யூனிசம் தோற்றுவிட்டது என முதலாளித்துவ அறிஞர்கள் கொக்கரிப்பதும் தற்காலிகமே; அவர்களது மகிழ்ச்சியும் அற்ப மகிழ்ச்சியே.

மீண்டும் நவம்பர்கள் தோன்றும்; ஏகாதிபத்தியம் வீழ்த்தப்படும்; கம்யூனிசம் வெல்லும்!

படிப்பகம்

# ஊழலுக்கு உரிமம் தரும் ஓட்டுச் சீட்டு!



நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பாசிச ராஜீவ் கும்பலுக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் முக்கிய துருப்புச் சீட்டாக இருப்பது, போபர்ஸ் ஊழல் விவகாரம்.

சுவீடன் நாட்டுடனான போபர்ஸ் பீரங்கி பேரத்தில் 155 கோடி ரூபாய் தரகு - லஞ்சம் தருவதாக ஒப்பந்தம் கையெழுத்தாகி, 1987 ஏப்ரல் மாதத்துக்குள் ரூ.64 கோடி கைமாறிவிட்டது. இந்த தரகுத் தொகை மூன்று கம்பெனிகளின் பெயரில் சுவிஸ் வங்கியில் ரகசிய கணக்கில் போடப்பட்டுள்ளது. போபர்ஸ் பேரத்தில் தரகர்களாகச் செயல்பட்ட இந்துஜா, வின்சத்தா ஆகிய ஏஜெண்டுகள் மட்டுமல்ல; ராஜீவின் பினாமிகளுக்கும் அவர்கள் மூலம் "தாமரை" ராஜீவுக்கும் கமிஷன் தொகை கைமாறியுள்ளது.

### பீரங்கித் திருடனின் தகிடுத்தங்கள்

1987 ஏப்ரல் மாதம் போபர்ஸ் பீரங்கி பேரத்தில் லஞ்ச ஊழல் நடந்திருப்பதாக ஸ்வீடன் வானொலி அம்பலப்படுத்தியதும், "இடைத்தரகர்களே கிடையாது; லஞ்ச ஊழலே நடக்கவில்லை; நாட்டைச் சீர்குலைக்க அன்னியச் சதி" என்று எகிறிப் பாய்ந்தது, ராஜீவ் கும்பல். "கமிஷன் தொகை அல்ல; ஒப்பந்த முறிவுத் தொகைதான்! அதுவும் இந்தியர்கள் யாரும் பெறவில்லை" என்று புளுகியது. "தரமானது என்று ராணுவத் தளபதிகள் சிபாரிசு செய்துள்ளதால் ஒப்பந்தத்தை ரத்து செய்ய முடியாது" என்று நியாயப்படுத்தியது. குற்றவாளிகளைக் கண்டு பிடித்து தண்டிக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொண்டிருப்பதாக நியாயவானைப் போல நாடகமாடியது. லஞ்ச ஊழலை மூடி மறைப்பதற்காக ராணுவ மற்றும் நிதி இலாகா அதிகாரிகள், மத்திய புலனாய்வுத் துறை மற்றும் நாடாளுமன்றக் கூட்டுக்கமிட்டி போன்ற நிறுவனங்களை முறைகேடாகப் பயன்படுத்தியது. குற்றவாளிகளைத் தப்புவிக்கவும், காக்கவும், போலியான தடயங்கள், ஆவணங்களை உருவாக்கவும், ஊழலை அம்பலப்படுத்துபவர்களை மிரட்டவும் அரசு எந்திரத்தை ஏவியது.

இவையனைத்தும், "இந்து" நாளேடு வெளியிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட ஆவணங்கள், தில்லுமுல்லுகளை மூடி மறைப்பதைப் பற்றி எக்ஸ்பிரஸ் ஏடு வெளியிட்ட www.padippakam.com [illegible] செய்வதில் நடந்த மோசடிகளை நிரூபிக்கும் வகையில் "இந்தியா டுடே" ஏடு வெளியிட்ட தளபதி மாயாதாஸ், சுந்தர்ஜி ஆகியோரின் பேட்டிகள், முறை கேடுகளைச் சுட்டிக்காட்டிய பொதுத் தணிக்கைக்குழு (CAG) வின் அறிக்கை - முதலான அடுத்தடுத்து வந்த அம்பலப்படுத்தல்கள் மூலம் ராஜீவ் கும்பலின் லஞ்ச ஊழல், கிரிமினல் குற்றங்கள் மறுப்பதற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டு விட்டன.

இவை தவிர ஜெர்மானிய நீர் மூழ்கிக் கப்பல் பேர ஊழல், வெஸ்ட்லாந்து ஹெலிகாப்டர் பேர ஊழல், ஜப்பானிய சுமிடோமோ எண்ணெய் குழாய் பேர ஊழல் முதலானவற்றிலும் பாசிச ராஜீவ் கும்பல் சிக்கிக் கொண்டு அம்பலப்பட்டு சந்தி சிரிக்கிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக, ராஜீவ் கும்பலின் கள்ளக் கூட்டுடன் ஏராளமான அளவு வரிஏய்ப்பு, அந்நியச் செலாவணி மோசடிகள் நடந்துள்ளன. இதன்மூலம் சுவிஸ் வங்கியிலும், வெளிநாடுகளிலும் பல பத்தாயிரக்கணக்கான கோடி ரூபாய் கருப்புப்பணம் குவிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் என்ற பெயரில் அளவில்லாத சலுகைகளோடு அந்தக் கருப்புப்பணம் மீண்டும் இங்கே முதலீடு செய்யப்படுகிறது - இவை போன்ற பல உண்மைகள் போ்ஃபாக்ஸ் விவகாரத்தினால் வெளியே வந்துவிட்டன. சுருக்கமாகக் கூறினால், சொந்த நாட்டைச் சூறையாடிய பாசிஸ்டுகளான மார்க்கோஸ், டுவாலியர் கும்பலின் இந்திய வாரிசுதான் பாசிச ராஜீவ் என்பது நிரூபணமாகி விட்டது.

### பகல்வேஷம் போடும் பரிசுத்தங்கள்

"ராஜீவின் ஊழல் கொள்ளையால் தேசத்தின் கௌரவமே சிறுமைப்பட்டுப் போய் விட்டது. போபர்ஸ் ஊழலை முழுமையாக வெளிக்கொணரவும், குற்றவாளிகளைத் தண்டிக்கவும், கொள்ளையடித்த பணத்தை மீட்டு இந்திய தேசத்திடம் ஒப்படைக்கவும் எங்களுக்கே வாக்களியுங்கள்!" என்று பிரச்சாரம் செய்து எதிர்க்கட்சிகள் ஓட்டு வேட்டையாடுகின்றன. "நீங்கள் மட்டும் யோக்கியமானவர்களா? பரிசுத்தமானவர்களா?" என்று எதிர்கட்சியினரின் லஞ்ச ஊழல்களை அவிழ்த்துவிட்டு எதிர் பிரச்சாரம் செய்கிறது, ராஜீவ் கும்பல்.

"இந்தியன் எக்ஸ்பிரஸ்" கோயங்கா மீது அச்சக இறக்குமதி மற்றும் வரி ஏய்ப்பு குற்றச்சாட்டுகள், அருண் நேருவின் செக் நாட்டு கைத்துப்பாக்கி ஊழல், தென்னிந்திய 'பரிசுத்தம்' ஹெக்டேவின் சாராய மற்றும் வீட்டுமனை ஊழல், தேவிலால் மற்றும் என்.டி.ஆரின் குடும்ப ஆட்சி ஊழல்கள், போலி கம்யூனிஸ்டு ஜோதிபாசுவின் ராவ்டான் சதுக்க ஊழல், பல்பு ஊழல் என்று எதிர்கட்சியினரின் லஞ்ச லாவண்யங்கள் ஏற்கனவே வெளிவந்து நாறுகின்றன.

குழாயடிச் சண்டையிலே பல உண்மைகள் வெளிவருவதைப்போல, தேர்தல் - பதவிச் சண்டையிலே ஓட்டுக் கட்சித் தலைவர்களின் லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் மட்டுமல்ல; அவர்களின் ரகசிய உலகத் தொடர்புகளும் கூட இப்போது தெரிய வந்துள்ளது. ஊழல் புகார்களுக்கான ஆதாரங்களைத் தேடும் ராஜீவ் கும்பலும், எதிர்க்கட்சிகளும் சர்வதேச ஆயுதக் கடத்தல், போதை மருந்து கடத்தல் - கிரிமினல் - மாஃபியா கும்பலுடன் நெருங்கிய தொடர்பு வைத்துள்ளனர்.

### கடத்தல் - மாஃபியா கும்பலுடன் கள்ளக்கூட்டு

போபர்ஸ் மற்றும் பிற ஆயுத பேரங்களில் சம்பந்தப்பட்ட போலி பினாமி கம்பெனிகளில் ஒன்றான ஏ.ஈ.சர்வீசஸ் என்ற பகாமாஸ் தீவுகளில் உள்ள நிறுவனத்தின் இயக்குனரான ஸ்டீபன் சாமோஸ் என்பவன் பிரபல போதை மருந்து மாஃபியா கும்பலைச் சேர்ந்தவன். அதன் இன்னொரு இயக்குனர் மத்திய மந்திரி சிதம்பரத்தின் 'ஸ்பிக்' முதலான சில நிறுவனங்களில் இயக்குனராக உள்ளான். இதே போல இந்துஜா, அம்பாணி போன்ற ராஜீவின்





படிப்பகம்

நெருங்கிய கூட்டாளிகளும் பெரும் தரகு முதலாளிகளும் பகாமாஸ், பனாமா முதலான நாடுகளில் உள்ள ரகசிய வங்கிகள் மற்றும் நபர்களிடமிருந்து முதலீடு பெற்றுள்ளனர்                வி.பி.சிங்கின் மகன் அஜய்சிங்குக்கு செயிண்ட் கிட்டீஸ் எனும் மத்திய அமெரிக்க தீவிலுள்ள வங்கியில் ரகசிய கணக்கு உள்ளதாக ராஜீவ் கும்பல் ஏவிய பொய்க் குற்றச் சாட்டுகூட போதை மருந்து கடத்தல் கும்பலின் உதவி - ஏற்பாட்டுடன் தான் நடந்துள்ளது. இன்னும், ரகசிய உலகப் பேர்வழியான சந்திராசாமி, போதை மருந்து கடத்தல்காரன் நசீர் அலி முதலானோருடனும் ரகசிய உறவு வைத்துள்ளது பாசிச ராஜீவ் கும்பல்.

அதே போல, . எதிர்க்கட்சிக்குள்ளேயே வி.பி.சிங் தலைமைக்குப் போட்டியாக உள்ள சந்திரசேகரும், ராஜீவுக்கு ஐந்தாம் படை வேலை செய்யும் சுப்பிரமணிய சாமியும் கூட சந்திராசாமிக்கு நெருக்கமானவர்கள். போதை மருந்து கடத்தல் பேர்வழி நசீர் அலி கொடுத்த விருந்தில் ஜனதாதள தலைவர் அஜித்சிங்கும் அக்கட்சி எம்.எல்.ஏக்களும் பங்கேற்றனர். அலகாபாத் இடைத்தேர்தலின் போது கடத்தல் பேர்வழி ஹாஜி மஸ்தான், வி.பி.சிங்குக்கு தேர்தல் நிதி அளித்ததாக புகார்கள் வந்தன. ஜனதாதள தலைவர் சந்திரசேகரோ பீகார் - தன்பாத் நிலக்கரி சுரங்க மாஃபியா தலைவன் சூரியதேவ்சிங்கின் கூட்டாளியாக உள்ளார்.

ஆக, பரிசுத்த ராஜீவ் மற்றும் வி.பி.சிங் ஆகிய இரு தரப்பு தலைமையுமே ஊழல் பெருச்சாளிகள்தான்; ரகசிய உலகப் பேர்வழிகள், கிரிமினல் - மாஃபியா கும்பல்களின் நெருங்கிய உறவினர்கள்தான். இருப்பினும் ஓட்டுக்கட்சித் தலைவர்களின் லஞ்சலாவண்யங்கள் விவகாரத்தின் ஒரு அம்சம்தான். அதை விட மொத்த அரசியல் அமைப்பே லஞ்ச ஊழலில் புரையோடிப் போய்விட்டது என்பதுதான் உண்மை.

### லஞ்ச ஊழல் சர்வவியாபகமாகிவிட்டது!

இந்திய தரகு முதலாளிகளும், பெரு வியாபாரிகளும், உயர் அதிகாரிகளும் முக்கிய அரசியல் தலைவர்களும் வெளிநாட்டு வங்கிகளில் கோடி கோடியாய் கருப்புப் பணத்தைக் குவிக்கின்றனர். தினமும் 100 கோடி ரூபாய்க்கும் மேல் வரி ஏய்ப்பு செய்து கருப்புப் பணம் குவிகிறது. ஆயுத பேரங்களிலும் தொழில் ஒப்பந்தங்களிலும் பெறும் லஞ்சம், அந்நியச் செலாவணி மோசடிகள், போதைப்பொருட்கள் கடத்தல் முதலான கிரிமினல் குற்றங்களினால் சேர்த்துள்ள கருப்புப் பணத்தையும் சேர்த்தால், இது ஏறத்தாழ ஆண்டுக்கு 50,000 கோடி ரூபாய்க்கும் மேலாகும்.

ராஜா செல்லையா குழு அறிக்கையின்படி, அரசுத்துறை கொள்முதல் ஒவ்வொன்றுக்கும் 3லிருந்து 7 சதவீதம் வரை கமிஷன் - தரகுத் தொகை கொடுப்பது வாடிக்கையாகிவிட்டது. ''கமிஷன் கொடுப்பதும் வாங்குவதும் எல்லா நாடுகளிலும் வழக்கமாக நடைபெறுவதுதான்; இது ஒரு எழுதப்படாத ஒப்பந்தம்'' என்று முதலாளித்துவ பொருளாதார நிபுணர்களே ஒப்புக் கொள்

www.padippakam.com

அன்பார்ந்த வாசகத் தோழர்களே!

தவிர்க்க இயலாத அமைப்புப் பணிகள் காரணமாக நவம்பர் 15-30 தேதியிட்ட ''புதிய ஜனநாயகம்'' வெளிவராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். சிரமத்திற்கு வருந்துகிறோம். டிசம்பர் முதல் தேதியன்று அடுத்த இதழ் வெளிவரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவண்

தோழமையுடன்,

ஆசிரியர் குழு, புதிய ஜனநாயகம்.

கின்றனர். இந்த லட்சணத்தில் ராஜீவ் கும்பலின் ஊழல்களை மட்டும் எதிர்த்து, ஆட்சி மாற்றம் செய்வதன் மூலம் தேசத்தின் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் காப்பாற்றும்படி எதிர்கட்சிகள் அறைகூவுகின்றன. ஆனால் இக்கட்சிகள் எவையும் கடந்த பல ஆண்டுகளாகத் தெரிந்திருந்தும் தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் தேசத்துரோக லஞ்ச ஊழல், கிரிமினல் குற்றங்களை எதிர்க்கவில்லை. ராஜீவ் கும்பலைப் போலவே இம்முதலாளிகளிடமிருந்து பெருந்தொகையைப் பெற்று தேர்தல் சூதாட்டம் நடத்தி வருகின்றனர்.

### ஊழலின் ஊற்றுக்கண்: இன்றைய அரசியல் அமைப்புதான்

''பாசிச ராஜீவும் காங்கிரசுக் கட்சியும் தான் அயோக்கியர்கள்; தேசிய முன்னணியினர் அந்த அளவுக்கு இல்லை; ஒப்பீட்டு ரீதியில் உத்தமர்கள்'' என்று இனியும் உழைக்கும் மக்கள் நம்பி ஏமாந்துவிட முடியாது. எந்த அரசாங்கமானாலும் எந்த ஓட்டுக்கட்சி அரசியல்வாதியானாலும் போபர்ஸ் மட்டுமின்றி எல்லாவகை பேரங்களிலும் லஞ்ச ஊழல்கள் நிச்சயமாக நடைபெறுகின்றன. ராணுவம் உட்பட அனைத்து துறைகளிலும் லஞ்ச ஊழலும் அதிகார முறைகேடுகளும் புழுத்துப்போயுள்ளது. இதற்கு உடந்தையாய் இருப்பவர்களுக்கு கவர்னர், தூதர் போன்ற கௌரவமிக்க பதவிகள் தாரை வார்க்கப்படுகின்றன.

ஆக, லஞ்ச ஊழல் - கிரிமினல் குற்றவாளியான பாசிச ராஜீவைத் தண்டிப்பது விவகாரத்தின் ஒரு பகுதிதான். ஆனால் அதைவிட முக்கியமானது, நாட்டின் ஓட்டு மொத்த அரசியல் கட்டுமானமே லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகளால் புழுத்து நாறுகிறது என்பதுதான். அடிப்படையான இன்றைய அரசியல் அமைப்பு முறையே லஞ்ச ஊழல் - கிரிமினல் தன்மையுடையது. இப்படிப்பட்ட மக்கள் விரோதிகளின் நலன்களுக்காகவே உருவாக்கப்பட்டது. உழைக்கும் மக்களுக்கு எதிரானது. இதைப் புரிந்துகொள்ளக் கூடாது என்பதற்காகவே ஓட்டுப் பொறுக்கிகள் பெருங்கூச்சல் போடுகின்றனர்.

பாசிச ராஜீவின் போபர்ஸ் ஊழல், அதைவிட முக்கியமாக அதை மூடி மறைக்கும சதிகார முயற்சிகளுக்கு இந்திய அரசியல் அமைப்பே உடந்தையாக இருந்துள்ளது. ராஜீவின் கிரிமினல் குற்றங்கள் அம்பலமாகி இரண்டரை ஆண்டுகள் ஆனபோதி

[illegible]

முடிந்ததற்கும், ஜனநாயக எல்லைக்குள் சட்டபூர்வ வழிகள் மூலம் எதிர்க்கட்சிகளால் ராஜீவ் கும்பலை அசைக்க முடியாததற்கும் இதுவே காரணம். அதாவது, இன்றைய அரசியல் அமைப்பே ஊழல் பெருச்சாளிகளின் நோக்கங்களுக்குப் பயன்படக்கூடியதாக உள்ளது; ராஜீவ் போன்ற கிரிமினல் பேர்வழிகளின் உறைவிடமாக உள்ளது.

நேரு காலத்து டி.டி.கே. - முந்திரா ஊழல்கள் முதல் இன்றைய ராஜீவ் காலத்து ஆயுத பேர லஞ்ச ஊழல்கள் வரை அனைத்தும் ஆதார பூர்வமாக அம்பலமான பின்னரும் இதுவரை எந்த குற்றவாளியும் தண்டிக்கப்படவில்லை. அதிகாரத்தில் உள்ளவர்கள் தமது கிரிமினல் குற்றங்களை மூடி மறைக்கவும், குற்றஞ்சாட்டுபவர்கள் மீது பாய்ந்து குதறவும் தான் இந்த அரசியல் அமைப்பு பயன்படுத்தப்பட்டு வருகிறது. போலீசும், உளவுப்படைகளும், அதிகார வர்க்கமும் குற்றவாளிகளின் கூட்டாளிகளாகவே இருந்து உண்மையை மூடி மறைக்கின்றன. நீதித்துறை அமைப்புகள் விசாரணை என்ற பெயரில் குற்றவாளிகளைத் தப்புவிக்கின்றன.

### ஊழலுக்கான உரிமம்தான் ஓட்டுச்சீட்டு!

திரும்பத் திரும்ப நிரூபிக்கப்பட் பிறகும் மக்களின் பிரதிநிதி என்ற போர்வையில் இருக்கும் ராஜீவ் போன்ற லஞ்ச ஊழல் கிரிமினல் பேர்வழிகளை இந்த நாடாளுமன்ற அமைப்பு நிறுவனங்களால் தண்டிக்க முடியவில்லை. ஐந்தாண்டு காலத்திற்குள் இந்த நாட்டையே சூறையாடினாலும் இந்த அரசியல் அமைப்பு கைகட்டி வேடிக்கைப் பார்க்கத்தான் செய்கிறது. வாக்களித்த மக்களும் இந்த ஐந்தாண்டு காலத்திற்கு வாய்மூடி மவுனியாகத்தான் இருக்க வேண்டும். இதற்கான உரிமம் தான் ஓட்டுச்சீட்டு!

எனவே, ராஜீவ் என்ற ஒரு லஞ்சஊழல் - கிரிமினல் குற்றவாளியை அல்ல: அவ்வாறு ஓராயிரம் ராஜீவ்களை உருவாக்க ஊற்று மூலமாக உள்ள நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பையே தூக்கிஎறிய வேண்டும். ராஜீவுக்கு மாற்று என்ற பெயரில் எதிர்கட்சிகளின் அரசாங்கத்தைத் தேர்ந்தெடுப்பது அல்ல; மாறாக, மக்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும், தவறு செய்தால் திருப்பி அழைக்கவும், தண்டிக்கவும் மக்களின் கரங்களில் அதிகாரத்தைக் குவிக்கக்கூடிய புதிய ஜனநாயக அரசியல் அமைப்பு முறைதான் இன்றைய தேவை. இத்தகைய, உழைக்கும் மக்களின் கூட்டுச் சர்வாதிகாரத்தை, புதிய ஜனநாயகத்தை அரியணையில் ஏற்ற பெரும் புயலாய்க் கிளர்ந்தெழுங்கள்!

**ஊழலுக்கு ஊற்று மூலமாக உள்ள நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தை தூக்கி எறியுங்கள்!**

**ஊழலுக்கு உரிமம் கோரும் போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணியுங்கள்!**

**புதிய ஜனநாயகப் புரட்சியைச் சாதிக்க பெரும் படையாய் திரண்டெழுங்கள்!**



படிப்பகம்

www.padippakam.com



# மக்களைத் தீய்க்க மதவெறித் தீ!

## இருப்பதை உருவிக்கொள்ள வாக்குச்சீட்டு!

மதக்கலவரங்கள் வடநாடு முழுவதும் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. 500க்கும் மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்; லடாக்கில் முஸ்லிம்களும் புத்தர்களும் மோதிக் கொள்கின்றனர்; காஷ்மீரில் முஸ்லிம்களும், இந்துக்களும்; ராமஜென்ம பூமி - பாபரி மசூதி விவகாரத்தையொட்டி உ.பி. ம.பி., பீகார், மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் இந்துக்களும் முஸ்லிம்களும் என்று கலவரம் தொடர்கின்றது. பீகார் மாநிலம் பகல்பூரில் மட்டும் 300க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற பீதி காற்று மண்டலத்திலேயே சூழ்ந்து திரிகிறது. ராமர் கோயில் கட்டும் விழாவை நடத்த பாபர் மசூதிக்கு ஊர்வலம் நடத்தும் திட்டத்தை கைவிடச் சொல்லி பலர் வற்புறுத்தியும், முடியாது. நடத்தியே தீருவோம் என்று விஸ்வ இந்து பரிஷத் கச்சை கட்டி நிற்கிறது. நாடாளுமன்ற தேர்தலைப் பயன்படுத்தி வோட்டுக் கட்சிகளிடம் அதிக பேரம் பெறவும் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ளவும் இந்து, முஸ்லிம் மதவெறி அமைப்புகள் குரூர உள்நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றன.

வகுப்புவாதத்தை, மதவெறிச் சக்திகளை முறியடிப்போம், மதச்சார்பின்மைக்காக போராடுவோம், மத இணக்கம் - தேச ஒற்றுமையை பாதுகாப்போம் என்றே அனைத்து கட்சிகளுமே சொல்கின்றன.

சாதி மதச் சார்பின்மை என்றால் சாதி, மதம் போன்ற பிரிவுகளை தனது குறுகிய கட்சி மற்றும் ஆட்சி நலன்களுக்காக சந்தர்ப்பவாதமாக பயன்படுத்திக் கொள்வது என்பதே இவற்றின் நடைமுறையாகும்.

இ.காங்கிரசின் கடந்த கால வரலாற்றை சற்று புரட்டினாலே ஏராளமான விவரங்கள் கிடைக்கும்.

★ சீக்கிய மதத்தினரின் ஓட்டுக்களை கைப்பற்ற பிந்தரன்வாலே தலைமையிலான சீக்கிய மதவெறி பயங்கர வாதத்திற்கு உறுதுணை நின்று வளர்த்தது; பிறகு இதற்கு எதிராக மிதவாத லோங்கோவால் - பர்னாலா கும்பலை பயன்படுத்திக் கொண்டது.

★ இந்து மதத்தினரின் ஓட்டுக்களைக் கைப்பற்ற மொராதாபாத், பிவாண்டி, மீரட் கலவரங்களில் தாமே முன்னின்று நடத்தியது அல்லது குற்றவாளிகளை தப்பிக்க வைத்தது. பாபரி மசூதியின் ஒரு பகுதியை இந்துக்களுக்கு திறந்து விட்டது. தொலைக் காட்சியில் இராமாயணம் - மகாபாரதத் தொடர்கள், அலகாபாத் இடைத்தேர்தலில் 'இராமராக' நடித்த அருண்கோவில் கொண்டு பிரச்சாரம் செய்தது.

★ முஸ்லிம் மதத்தினரின் ஓட்டுக்களைக் கைப்பற்ற முஸ்லிம் தனிமனிதச் சட்டத்தை, மதவெறி வாதிகள் கோரிக்கைக்கு ஆதரவாக திருத்தியது; உருதுவை அதிகார பூர்வ மொழியாக்கும் சட்டத்தை தேர்தல் நேரத்தில் கொண்டு வந்தது; முசாபர் நகர் - அலிகார் கலவரங்களைத் தூண்டி விட்டது.

★ கிறிஸ்தவர்களின் ஓட்டுக்களைக் கைப்பற்ற மிசோராமில் கிறிஸ்தவர்களுக்காக போராடுவதாக தேர்தல் அறிக்கை.

—இவ்வாறு காங்கிரஸ் தனது ''மதச் சார்பின்மையை'' அமுலாக்கி வருகிறது. இக்கட்சிதான் 'வகுப்புவாத சக்திகளை முறியடிப்போம், மத ஒற்றுமைக்கு வழிவகுப்போம்' என்ற முழக்கத்தை தேர்தலுக்கு முன் வைக்கிறது.

ஆயுத பேர ஊழல் அம்பலம், விலைவாசி ஏற்றம் இவற்றிலிருந்து திசை திருப்ப, இந்தி பேசும் மாநிலங்களில் 20 சதவீதத்திற்கு மேலான முஸ்லிம் ஓட்டுக்களைக் கொண்ட பெருமளவு தொகுதிகளைக் கைப்பற்ற இ.காங்கிரஸ் மதக்கலவரங்களில் இறங்கியுள்ளது. தேர்தலை திட்டமிட்டதற்கு இரு மாதங்கள் முன்னே நடத்த அறிவித்திருப்பதும் மத கலவரச் சூழ்நிலையில் ஆதாயம் தேடத்தான்.

அடுத்து, எதிர்க்கட்சி வரிசையில் பிரதானமானது ஜனதா தள். இ.காங்கிரஸுக்கு மாற்றாக ஆட்சியைக் கைப்பற்றும் ஒரே அம்சத்திட்டத்திற்காக ஒரே கட்சியில் இணைந்த பதவி வேட்டைக்காரர்களின் மற்றுமொரு முகாம். காங்கிரஸ் மூன்றே ஆண்டுகள் தவிர 40 வருடங்கள் ஆண்டு வந்திருப்பதும், ஜனதா தளத்தின் பல தலைவர்களும் காங்கிரஸ் - காந்தீயப் பின்னணி கொண்டிருப்பதும் வகுப்பு வாதக் கொள்கைகளில் இவர்கள் சற்றும் மாறுபட்டவர்கள் அல்ல எனத் தெளிவாக காண முடியும்.

சாதி, மத, பிராந்திய அடிப்படையில் வோட்டுக் கணக்குகளை போட்டு செயல்படுகிறது ஜனதா தளம்.

1986ல் துக்ளக் 'சோ'வுக்கு ஜனதா தளத் தலைவர்களில் ஒருவரான சந்திரசேகர் அளித்த பேட்டியில் ஜாதி அரசியல் தான் சரியான 'ராஜதந்திரம்' என்று கூறினார்.

இந்து மதவெறியை முற்றாக நம்பி அரசியல் நடத்தும் பாரதீய ஜனதா - ஆர். எஸ்.எஸ். கும்பலுடன் முஸ்லிம் வோட்டுக்களை யாரிடம் விற்று சலுகைகள் 'பாதுகாப்பு' பெறலாம் என்றுள்ள முஸ்லிம் மதத் தலைவர்கள் மற்றும் மதவெறி அமைப்புகளுடனும் ஜனதா தளம் பேரம் பேசி வருகிறது. இ.காங்கிரசிற்கு எதிரான ஓட்டுக்களை சிதறாமல் ஒருமுனைப்படுத்தி கைப்பற்றுவது என்ற கணக்கில் சந்தர்ப்பவாத சாகசம் புரிந்து ஆதாயம் தேட அவர்களுடன் கூடிக் குலாவுகிறது.

சரியாக 10 வருடங்களுக்கு முன்னால் ஜனதா தளத்தின் ஒரு கூறாக இருந்த ஜனதா கட்சி, தனது உறுப்பினர் ஆர்.எஸ் எஸ்.இலும் உறுப்பினராக இருக்கலாமா என தொடக்கத்திலேயே தீர்க்காமல் சந்தர்ப்பவாதமாக இருந்து இறுதியில் பிளவு பட்டது. ஆட்சியை இழந்தது.

இக்கட்சி ஆட்சியில் அமர்ந்தாலும், மதவெறிச் சக்திகள் புதுத் தெம்புடன் கிளம்புவர். ஜனதா தள சந்தர்ப்பவாதம் உயர்ந்த கட்ட ஒரு நெருக்கடிக்கும் மதக்கலவரங்களுக்கும் இட்டுச் செல்லக்கூடியதே.

''பாபரி மசூதி இடிக்கப்படக் கூடாது; இராமர் பிறந்த இடத்தில் இராமர் கோயிலை கட்டும் இந்து மத உணர்வை மதிக்க வேண்டும். இரு தரப்பும் ஏற்றுக் கொள்ளும்படி பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண வேண்டும் என்றுதான் ஜனதா தளம் கூறுகிறது.

நாடாளுமன்ற தேர்தலில் முன்னிற்கும் பிரதான கட்சிகளான இ.காங்கிரஸ், ஜனதா தளம் இரண்டுமே தெளிவான கறாரான முடிவுகளை முன்வைக்க விரும்பவில்லை. பிரச்சினை தீர்க்கப்படுவதையும் விரும்பவில்லை. இழுத்து பறித்து இரு மதத்தினரிடமும் பகைமை, குரோதத்தை உருவாக்கும் மதவெறிச் சக்திகளுக்கு துணை போகின்றன. இவ்வணுகுமுறை இறுதியில் மதவெறிச் சக்திகளின் விசேட சலுகை, கோரிக்கைகளுக்கு இணங்குவதிலும் அபாயகரமான மதக்கலவரங்களிலும், ஜனநாயக விரோதமான அடக்குமுறைகள் மற்றும் மத ரீதியான பிரிவினை வாதத்திலும் கொண்டு போய்விடும்.

**மதவெறியை யார் தூண்டுகின்றனர்? ஏன்?**

மதவெறிக்கு அடித்தளமாக இருப்போர் வியாபாரிகள், கந்துவட்டிக் காரர்கள், பதுக்கல் - கள்ள மார்க்கெட் காரர்கள், மாஃபியா - கடத்தல் கும்பல்கள், மற்றும் தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ வர்க்கங்கள் தான். இந்து பொருட்களை இந்து கடைகளில் வாங்குவீர் என்பது இந்த மதவெறி வியாபாரிகளுக்கான முழக்கமாகும். உள்ளூர் நகரச் சந்தையின் கணிசமான பகுதி தமக்கே வேண்டும் என்ற முறையில் அவர்களுக்கானதாகிறது. கந்துவட்டி, கள்ள மார்க்கெட், கடத்தல்காரர்களுக்கு உள்ளூரில் ஒரு நம்பகமான அடியாட்படையை தோற்றுவித்துக் கொள்ளவும் தமது தொழிலால் சமூக ரீதியான அந்தஸ்து கோர இயலாத இவர்கள் மத ரீதியில் சமூக அந்தஸ்து கோரவும் மத வெறி நிறுவனம் அவசியமாகிறது. மக்களைப் பிரித்தாளுவது, அரசியல் ஆதிக்கம் பெறுவது, மதத்தின் பெயரால் சிறப்பு சலுகைகள் பெற்றுத் தந்து செல்வாக்குத் தேட



படிப்பகம்

முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ வர்க்கங் களும் மதவெறியை தூண்டுகின்றனர். இவ் வர்க்கங்கள் மதவெறி நிறுவனங்களுக்கு பெருமளவு நிதியை கொட்டியளிக்கின்றன. கலவர ஏற்பாடுகளுக்கும் ஈடுபடுவோருக்கு பாதுகாப்பாகவும் மற்றும் பாதிக்கப்படுவோருக்கு நிவாரணம் அளிக்கவும் உதவுகின்றன.

ஏகாதிபத்தியங்கள், பணபலம் படைத்த அந்நிய நாட்டினர் தமது மதத்தைப் பரப்பவும், தமது கலாச்சாரத்தை ஏற்க வைத்து ஒரு சமூக அடிப்படையைத் தோற்றுவித்துக் கொள்ளவும், மத நிறுவனங்களுக்கும் மதவெறி நிறுவனங்களுக்கும் நிதி உதவி செய்கின்றனர். இது உள்நாட்டில் பரஸ்பர நம்பிக்கையின்மை, வெறுப்பைத் தூண்டி விடுகின்றது. இவ்வாறும் மதவெறிக்கு அடித்தளம் ஏற்படுகிறது.

மதம் சம்பந்தமாக பின்கண்ட கொள்கைகளை கடைபிடிப்பதே உண்மையான ஜனநாயகமாக இருக்கும்.

... பது: எந்த மதத்தினரையும் மதம் சாராதோரையும் புண்படுத்துவது துன்புறுத்துவது தண்டனைக்குரியது.

★ மதப் பிரசாரம் செய்யவும் நாத்திகப் பிரச்சாரத்திற்கும் உரிமை உண்டு.

★ அரசு, மக்களுக்கு மூட நம்பிக்கை ஒழிப்பு போதனை - விஞ்ஞான பூர்வமான கண்ணோட்டம் அளிக்க பாடுபடும்.

—இத்தகைய திட்டம், அணுகுமுறை' தான் மத ஒற்றுமையை சாதிக்க முடியும். மதங்களுக்கிடையிலான ஜனநாயகத்தை நிலைநாட்ட முடியும். மதவெறியையும் மத ரீதியான பிரிவினை வாதத்தையும் முறியடிக்க முடியும். இத்தகைய கொள்கைகளை பின்பற்றுவது இன்றைய அரசியல் அமைப்பில் சாத்தியமா?

முடியாது என்பது நமது பதில்.

ஏனெனில் அரசே சாதி, மத இனவெறித் தன்மை கொண்டதாக உள்ளது.



இந்து வெறியர்களால் படுகொலை செய்யப்பட்ட முஸ்லீம் மக்கள். உ.பி. மாநிலத்தில் உருது மொழியை ஆட்சிமொழி ஆக்கியதற்காக இந்த அக்கிரமம்.

★ அரசுக்கும் மதத்திற்கும் இருந்து வரும் உறவை அறுத்தெறிவது - மத நிறுவனங்களுக்கு நிதி அளிப்பதோ அவற்றின் நிதி விவகாரங்களைக் கையாளுவதோ அரசு விவகாரமல்ல.

★ மதத்திற்கும் கல்விக்கும் உள்ள உறவை அறுத்தெறிவது - கல்வியளிப்பது அரசின் கடமையாக ஏற்பது.

★ மதநிறுவனங்கள் முற்றிலும் சுயமாக பெறும் நன்கொடைகளால் நிர்வகிக்கப்பட வேண்டும்; அதன் தொழில் வர்த்தகம் அடிப்படையிலான வருமானங்களை தடை செய்வது; நிலவுடமையைப் பறிமுதல் செய்ய உழைக்கும் குத்தகைதாரர்களுக்கு சுவாதீனமாக்குவது.

★ வரதட்சணை தடுப்பு, சாதி ஒழிப்பு ஒருதார மணமுறை, பெண்களுக்கு சொத்துரிமை, ஜீவனாம்ச உரிமை போன்ற சீர்திருத்தங்களை ஏற்றுக் கொள்ளும் மத நிறுவனங்களையே அங்கீகரித்தல்.

அரசு,

★ சாதிய முறையை ஒழிப்பதற்குப் பதில் ஒவ்வொருவரும் பதிவு செய்து முத்திரை குத்தி அங்கீகரித்து ஏற்கும் படி மக்களைக் கட்டாயப் படுத்துகிறது.

★ மதங்களை ஆதரித்து மத நிகழ்ச்சிகளை நடத்தி மதச் சடங்கு பூர்வமாக இயங்குகிறது.

★ சிறிய தேசிய இனங்களை ஒருபுறம் ஒடுக்கியும் பெரும் தேசிய இனவெறியைத் தூண்டியும், மொழியைத் திணித்தும் இன வெறிக்குத் தூபம் போடுகிறது.

★ சாதி, மத இனவெறி படுகொலைக் குற்றவாளிகளை எந்த வழக்கிலும் தண்டிக்காது மன்னித்து அடைக்கலமளிக்கிறது.

★ கல்வி நிறுவனங்களையும் அறக்கட்டளைகளையும் சாதி, மத, இன ரீதியில் நடத்துவதற்கு அனுமதியளிக்கிறது. அவற்றுக்கு விசேச உரிமைகளும் சலுகைகளும் கூட அளிக்கிறது.

... ரத்துக் கழகங்கள், சாலைகள், மாவட்டங்கள் போன்றவற்றுக்கு அவர்களது பெயர் சூட்டுவது.

மேலும்,

★ அரசின் முக்கிய அங்கமான ராணுவமே சாதி, மத, இன ரீதியாக பிரிக்கப் பட்டு இயங்குகிறது.

★ அரசு அதிகாரிகள் வாரியத் தலைவர்கள், அமைச்சர்கள் கூட சாதி, மத, இன ரீதியில் நியமிக்கப்படுகிறார்கள்.

இத்தனையும் செய்யும் அரசு நிறுவனம் சாதி, மதவெறி எங்கு எப்படி தோன்றினாலும் அதனைத் தடுக்குமா? தடுக்காது. ஒரு பிரிவுக்கு சாதகமாக இருந்து இன்னொன்றிற்கு ஜனநாயக உரிமை மறுக்கும்.

மதவெறி சக்திகளை இன்றைய அரசியல் அமைப்பில் முறியடிக்க முடியுமா?

தேர்தலில் வோட்டுப் பொறுக்கும் அரசியல் கட்சிகள் சாதி, மத, இன பிராந்திய அடிப்படையில் வோட்டு பொறுக்குவதால், அவர்களை நம்பிப் பயனில்லை. அவர்களால் முறியடிக்க முடியாது புறக்கணிக் வேண்டும்.

மதம் சம்பந்தமான உண்மையான ஜனநாயக கோரிக்கைகளைக் கொண்டோரால் இன்றைய அரசியல் அமைப்பில் சாதிக்க முடியாது. ஏனெனில் அரசு நிறுவனமே சாதி, மத வெறியைத் தூண்ட வளர்ப்பதாக உள்ளது. எனவே போலி ஜனநாயகத் தேர்தலை நம்பி பயனில்லை. புறக்கணிக்க வேண்டும்.

எனவே அரசு நிறுவனத்தை அறவே நிராகரித்து தூக்கியெறிந்து புதியதொரு ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட அரசு நிறுவனத்தை நிறுவ வேண்டும்.

இன்றைய அரசு நிர்வாக, இராணுவ பலம் பொருந்திய வன்முறை அமைப்பாகவும், தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ வர்க்கங்களின் நலன்களுக்காகவும் இருந்து வருகிறது.

இத்தகைய நிறுவனத்தை ஆயுதங்கிய ஒரு புரட்சியிலேயே தூக்கிறெிந்து புதிய ஜனநாயகத்தை நிறுவ வேண்டும்.

எனவே,

★ மதவெறி, தேசவிரோத சக்திகளை ஊட்டி வளர்ப்பது நிலப்பிரபுக்கள், தரகு முதலாளிகள், அன்னிய வல்லரசுகளே!

★ பதவி பிடிக்க இவர்களை உசுப்பி விடுவது முதலாளித்துவ அரசியல்வாதிகளே!

★ போலீசும் கோர்ட்டும், நாடாளுமன்றமும் மதவெறி - தேச விரோத சக்திகளைப் பாதுகாக்கும் கேடயங்களே!

★ உழைக்கும் மக்களே, வர்க்க அடிப்படையில் ஒன்று சேருவோம்! புரட்சித் தீ மூட்டுவோம்! இந்த புல்லர்களை அதில் சுட்டெரிப்போம்!

★ போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்! புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிவகுப்போம்!



படிப்பகம்

www.padippakam.com

றத (அதாதலால்) காங்கிரசு கும்பலின் முக்கிய பிரச்சார முழக்கமாக இருப்பது. "மக்களுக்கே அதிகாரம்!" எனும் பஞ்சாயத்து ராஜ், நகரபாலிகா ஆகிய ஆட்சிமுறை சீர்திருத்தங்கள்தான். நாடாளுமன்றத்தில் ஆகப் பெரும்பான்மையாக இம்மசோதா நிறைவேறிய போதிலும், மேலவையில் எதிர்க்கட்சிகள் இம்மசோதாவைத் தோல்வியுறச் செய்து "மக்களுக்கு அதிகாரம் கிடைக்காமல் தடுத்துவிட்டன. எனவே மக்களிடம் செல்கிறோம்" என்று முழங்கிக் கொண்டு, அரசு நிதியை வாரியிறைத்து, அரசு பிரச்சார சாதனங்களை முடுக்கி விட்டுக்கொண்டு களத்தில் இறங்கியுள்ளது, காங்கிரசுக் கட்சி.

"மக்களுக்கு அதிகாரமளிக்கும் பஞ்சாயத்து ராஜ் சட்டம் நல்லதுதான். ஆனால் மாநில அரசுகளின் அதிகாரத்தைப் பிடுங்கி மத்தியிலே அதிகாரத்தைக் குவித்துக் கொள்ளும் நோக்கத்தோடு இச்சட்டங்களை ராஜீவ் கொண்டுவர முயற்சிக்கிறார். மேலும், தேர்தல் நேரத்தில் இச்சட்டத்தை நிறைவேற்றி காங்கிரசார் ஆதாயம் தேட முயல்கின்றனர். இம்மோசடிகளை முறியடித்து உண்மையான பஞ்சாயத்து ஆட்சியை நிறுவி மக்களுக்கு அதிகாரத்தை வழங்குவோம்" என்று எதிர்க்கட்சிகள் முழங்குகின்றன.

புரட்சியுமல்ல; எதிர்க்கட்சிகள் வாதிடுவது போல அவசர கோலத்தில் கொண்டு வரப்பட்ட சட்டமுமல்ல. ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்டதுதான் பஞ்சாயத்து ஆட்சிமுறை. மாநில அரசுகளின் பொறுப்பில் இயங்கிய இப்பஞ்சாயத்துகள் விரைவிலேயே செயலிழந்து நிலைகுலைந்து தேக்கநிலையை அடைந்தன. அதன் பிறகு 1973ல் அசோக்மேத்தா கமிட்டி அறிக்கையின்படி புதிய திருத்தங்களைச் சேர்த்து மீண்டும் பஞ்சாயத்து ஆட்சியை உயிருட்ட முயன்றனர். ஆனால் அது எதிர்பார்த்ததற்கு எதிர்திசையில் போய் உள்ளூர் நிலப்பிரபுக்கள் — சாதி வெறியர்கள் ஆதிக்கத்திற்கான கருவியாகச் சீரழிந்து தடம்புரண்டு நின்றது. இத்தனை காலமும் செத்த பிணமாக கிடந்த பஞ்சாயத்து ஆட்சிமுறையை, தனது பரம்பரை ஆட்சிக்கு நெருக்கடி வந்துவிட்டதை அறிந்து பீதியில் இப்போது மீண்டும் உயிருட்டி, மக்களுக்கு அதிகாரம் வழங்கப் போவதாக மாய்மாலம் செய்கிறது ராஜீவ் கும்பல்.

குஜராத், மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் பஞ்சாயத்து ஆட்சிமுறை வெற்றிகரமாக உள்ளதாக ராஜீவ் கும்பல் பெருமையாகக் குறிப்பிடுகிறது. ஆனால் அங்கெல்லாம் நிலப்பிரபுக்க

# ஏட்டுச் சுரைக்காய் மக்களுக்கு! முழுப்பூசணிக்காய் ஆதிக்க சக்திகளுக்கு!

"இது ராஜீவின் — காங்கிரசின் திட்டம் மட்டுமல்ல; காந்தி கண்ட கனவு; கிராமப்புறங்களிலே ஏற்படப் போகும் பெரும்புரட்சி; கிராமப்புற நாட்டாண்மை, நிலப்பிரபுத்துவ சக்திகளுக்கு எதிராக ஏழை எளிய விவசாயிகளின் அரசியல் ஆயுதம். அதிகாரத் தரகர்களையும், ஊழலையும் முறியடிக்கும் மாமருந்து; அடிமட்டம் வரை ஜனநாயகத்தைக் கொண்டு செல்லும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த புரட்சிகர நடவடிக்கை" என்று பெருமையாக வர்ணிக்கிறது காங்கிரசு கும்பல்.

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் கமிஷன் மூலமாக அனைத்து பஞ்சாயத்துக்களுக்கும் தேர்தல்களை நடத்துவது; பஞ்சாயத்துக்களைக் கலைத்தால் அதற்கு சட்டமன்ற அங்கீகாரம் பெறவேண்டும்; மீண்டும் 6 மாதங்களுக்குள் தேர்தல் நடத்தவேண்டும். பஞ்சாயத்துக்களின் வரவு — செலவுகளை மத்தியத் தணிக்கை — கட்டுப்பாட்டு அதிகாரி மூலம் கண்காணித்து தணிக்கை செய்வது; இதன்மூலம் ஊழல் — மோசடிகளை ஒழிப்பது; தாழ்த்தப்பட்டோர் — பெண்களுக்கு 30% இடஒதுக்கீடு அளிப்பது — ஆகியவைதான் ராஜீவ் அரசு கொண்டு வந்துள்ள பஞ்சாயத்து சட்டத்தின் சாரமாகும்.

ளும், வர்த்தக சூதாடிகளும், சாதிவெறியர்களுமே பஞ்சாயத்துகளில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். பால், கரும்பு, கடலை முதலான விவசாய கூட்டுறவு சொசைட்டிகள் — வங்கிகள் உள்ளிட்ட அனைத்திலும் இவர்களே ஆதிக்கத்தில் உள்ளனர் என்பதை ஹிர்வே, ஜார்ஜ் மாத்யூ, குருமூர்த்தி ஆகிய முதலாளித்துவ சமூகவியலாளர்களது ஆய்வுகள் நிரூபித்துக்காட்டின.

பல மாநிலங்களிலும் பஞ்சாயத்துக்கள் கலைக்கப்பட்டு நீண்டகாலமாக தேர்தலே நடக்கவில்லை. கேரளத்தில் 22 முறை பஞ்சாயத்து தேர்தல்கள் தள்ளிவைக்கப்பட்டன. தமிழகத்தில் எம்.ஜி.ஆரும், கருணாநிதியும் ஏறத்தாழ 15 ஆண்டுகளாகியும் பஞ்சாயத்துகளுக்கு தேர்தல் நடத்தவில்லை. இருப்பினும் அவசர அவசரமாக இச்சட்டத்தை ராஜீவ் கும்பல் முன்தள்ளுகிறது. ஏன்?

- லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகளால் அம்பலப்பட்டு தனிமைப்பட்டுப் போயுள்ள ராஜீவ் கும்பல் தனது நேரடி அதிகாரத்தின் மூலம், பஞ்சாயத்து அமைப்புகளை உருவாக்கிக் கொள்வதன் மூலம் தனது பரம்பரை ஆட்சியைத் தொடரமுடியும் என நம்புகிறது.
- மேலும் தனது கட்சிக்குள்ளே உள்ள அதிருப்தியாளர்கள் மற்றும் எதிர்க்கட்சியி

...டிச் சென்று, தனக்கு சாதகமான நிர்வாக அமைப்புமுறை இருப்பது அதற்கு அவசியமாக உள்ளது. எனவேதான் மாநில உரிமைகளைப் பறித்து மத்திய அரசின் அதிகாரப் பட்டியலில் பஞ்சாயத்து நிர்வாகத்தை இணைத்துள்ளது. இம்மசோதா சட்டமாவதற்கு முன்னரே நாடு முழுவதும் உள்ள இரண்டரை லட்சம் பஞ்சாயத்து தலைவர்களுக்கு, மாநில அரசின் மூலமாக அல்லாமல் தாமே நேரடியாக கடிதம் எழுதி பாசிச ராஜீவ் இதை நிரூபித்தார்.

- ஆந்திரா, பீகார் மாநிலங்களில் தாழ்த்தப்பட்டோர் மலைவாழ் மக்களிடையே வளர்ந்துவரும் புரட்சிகர இயக்கங்களின் செல்வாக்கு, இதர சில மாநிலங்களில் நவீன விவசாயத்தில் ஈடுபட்டுள்ள பணக்கார விவசாயிகளின் போராட்டங்கள், நாட்டின் பல பகுதிகளில் ஆங்காங்கே பெருகிவரும் தேசிய இனங்கள் — பழங்குடி மக்களின் போராட்டங்கள் முதலானவற்றை பஞ்சாயத்து சீரமைப்பு மூலம் சாந்தப்படுத்தி, அப்போராட்டங்களை நிறுவனமயமாக்க ராஜீவ் கும்பல் எத்தணிக்கிறது.
- எல்லாவற்றுக்கும் மேலாக, இந்திரா வீட்டு வசதி திட்டம், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம், 18 வயதினருக்கும் வாக்குரிமை முதலான தேர்தல் கவர்ச்சித் திட்டங்களோடு பஞ்சாயத்து ஆட்சி சீரமைப்பையும் காட்டி ஒட்டுப் பொறுக்குவதற்கான கவர்ச்சி உத்தியாகக் கையாள்கிறது. தேர்தல் வெற்றிக்கு மட்டுமல்ல, மக்களுக்கு எதிரான பாசிச சக்தியாக — தொண்டர்படையாக இருந்து செயல்படவும், அதிகாரத் தரகர்களுக்கும் உள்ளூர் ஆதிக்க சக்திகளுக்கும் கூடுதல் அதிகாரமளிக்கும் பஞ்சாயத்துக்கள் பாசிச ராஜீவ் கும்பலுக்கு அவசியமாக உள்ளது.

காலனிய ஆட்சிக்கு எதிராக பொங்கியெழுந்த இந்திய மக்களின் போராட்டத்தை திசை திருப்பி ஏய்க்கவும், உள்ளூர் நிலப்பிரபுக்களுக்கும், தரகு முதலாளிகளுக்கும் பதவிகள் கொடுத்து கௌரவிக்கவும், கிராமப்புற மக்களுக்கு அடிப்படை மராமத்து வசதிகள் செய்து தரவேண்டிய பொறுப்பைத் தட்டிக் கழிக்கவும் ஆங்கிலேய காலனியாதிக்கவாதிகள் பஞ்சாயத்து — உள்ளூராட்சி அமைப்பு முறையைத் தோற்றுவித்தனர். இதற்காக, "ரிப்பன் எங்கள் அப்பன்" என்று இன்னமும் நமது பள்ளிக்குழந்தைகளுக்கு வெட்கமின்றி பாடம் சொல்லிக் கொடுக்கின்றனர். இப்போது "ராஜா ராஜீவ்" கொண்டு வரும் பஞ்சாயத்து சீரமைப்பும் இதே நோக்கங்களைக் கொண்டதுதான்!

பாசிச ராஜீவ் கொண்டுவரத் துடிக்கும் இப்பஞ்சாயத்து சட்டங்களாகட்டும், எதிர்கட்சியினர் வாதிடும் 'உண்மையான' பஞ்சாயத்து சீர்திருத்தங்களாகட்டும், அவர்கள் பீற்றிக் கொள்வதைப் போல மக்களுக்கு அதிகாரத்தை வழங்கிவிடுமா? ஒருக்காலும் முடியாது என்பதே உண்மை. ஏனெனில் இப்பஞ்சாயத்துகள் அதிகார வர்க்கத்தின் உடும்புப்பிடியிலே சிக்கிக் கொண்டுள்ளன. மக்களுக்கோ, மக்கள் பிரதிநிதிகளுக்கோ நிர்வாக அதிகாரம் துளியும் கிடையாது. கிராமப் பஞ்சாயத்து தலைவர்கள், நிர்வாகப் பொறுப்பேற்கும் செயலர்கள் அனைவரும் கோட்ட வளர்ச்சி அதிகாரிக்கு கட்டுப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com

வர்கள். பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு தீர்மானங்களை முடிவு செய்யும் உரிமை மட்டும்தான் உண்டு. அவற்றை அமுலாக்குவது உட்பட, ஒன்றியத்தின் அனைத்து நிர்வாக அதிகாரமும் கோட்ட வளர்ச்சி அதிகாரிகளிடம் சிக்கியுள்ளன. இதேபோல மாவட்ட ஒன்றியங்களுக்கு ஆலோசனை கூறும் உரிமை மட்டும்தான் உள்ளது. வளர்ச்சித் திட்டங்களை அமுலாக்கும் மேற்பார்வையிடும் அதிகாரம் மாவட்ட கலெக்டர்களிடம் தான் உள்ளது.

இந்த அதிகார வலைப்பின்னலைத் தாண்டி மக்களுக்கோ, மக்கள் பிரதிநிதிகளுக்கோ எவ்வித அதிகாரமும் கிடையாது. சட்டசபைகளும், நாடாளுமன்றமும், பஞ்சாயத்துகளும் இல்லாவிட்டாலும்கூட அதிகாரிகளின் ஆட்சி நடக்கும்; நடக்கிறது. ஆனால் அதிகாரிகளின் கூட்டமும் அது இயக்கும் அரசு எந்திரமும் இல்லாமல் நிர்வாகம் இயங்கவே முடியாது. இப்போது கொண்டு வரப்படவுள்ள பஞ்சாயத்து புரட்சிகூட, மத்திய அரசிலிருந்து மாவட்டக் கலெக்டர்களுக்கு வந்து அவர்கள் மூலமாகத்தான் கிராமப் பஞ்சாயத்துகளுக்குப் போய்ச் சேரும். இத்தகைய நிர்வாக சீரமைப்பைக் கருத்தில் கொண்டுதான் பஞ்சாயத்து மாநாடுகளுக்கு முன்னோடியாக மாவட்டக் கலெக்டர்கள் — நீதிபதிகளின் மாநாடுகளைக் கூட்டி ராஜீவ் உரையாற்றினார்.

மாவட்டக் கலெக்டர் மாநாட்டில் உரையாற்றிய ராஜீவ், வளர்ச்சித் திட்டங்கள் ஏழைமக்களுக்குப் போய்ச் சேருவதில்லை என்று அங்கலாய்த்துவிட்டு இதற்கான காரணங்களை மனந்திறந்து விவாதிக்குமாறு கேட்டுக்கொண்டாராம். ஒரு கலெக்டர் "எனக்கு 2 லட்சம் மரம் நடும் திட்ட இலக்கு ஒதுக்கப்பட்டது; நான் அரசுக்கு அளித்த அறிக்கையில் இரண்டரை லட்சம் மரம் நட்டுவிட்டதாக கூறினேன்" என்றாராம். அதிசயித்த பிரதமர் ராஜீவ், இது எப்படி சாத்தியம் என்றாராம். "இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? நான் எப்படி அறிக்கை கொடுத்தாலும் நீங்கள் என்னை சோதிக்கவா போகிறீர்கள்?" என்று அந்த கலெக்டர் கூறினாராம். காரைக்குடியில் நடந்த பஞ்சாயத்து ராஜ் கருத்தரங்கில் மந்திரி சிதம்பரம் ஒப்புக்கொண்ட உண்மை இது! அதிகார வர்க்கமும், ஆளும் கும்பலும் எவ்வளவு அலட்சியமாகவும் மோசடித்தனமாகவும் செயல்படுகின்றன என்பதற்கு இன்னுமொரு சாட்சி இது! இந்த லட்சணத்தில், இத்தகைய அதிகார வர்க்கத்தின் மூலம் பஞ்சாயத்துகளில் புரட்சி செய்யப்போவதாக மாய்மாலம் செய்கிறது ராஜீவ் கும்பல்

பஞ்சாயத்துகளுக்கு கூடுதல் அதிகாரமளிப்பதன் மூலம் எந்ததடையுமின்றி திட்டங்கள் நேரடியாகவும், விரைவாகவும் நிறைவேறிவிடும் என்று காதில்பூ சுற்றுகிறது ராஜீவ் கும்பல். கிராமப்புற வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு, குடிநீர், சாலை — மின்வசதி திட்டங்களும் குறிப்பாக, நிலமற்ற கூலிவிவசாயிகளுக்காக அறிவிக்கப்பட்ட சட்டங்களும் திட்டங்களும் வாக்குறுதிகளும் சீர்திருத்தங்களும் கணக்கின்றி உள்ளன. ஆனால் அவை அத்தனையும் பொய்யாகிப் போய்விட்டன. இப்போது அதே



பழங்கள்ளாகிப்போன திட்டங்களைத்தான் பஞ்சாயத்து சீரமைப்பு என்ற புதிய மொந்தையில் ஊற்றிவந்து ஏய்க்கிறது ராஜீவ் கும்பல்.

இது ஒருபுறமிருக்கட்டும்! பீகாரில் கூலி உயர்வு கேட்கும் தாழ்த்தப்பட்ட சாதியினரை நிலப்பிரபுக்கள் உயிரோடு கொளுத்தும்போது அவர்கள் பஞ்சாயத்துகளில் பங்கேற்க முடியுமா? கோயில்களில் தாழ்த்தப்பட்டோரும் நுழைய அனுமதி கோரி நாதுவாராவில் ஊர்வலம் நடத்தியோர் மீது சாதி வெறியர்கள் மிருகத்தனமாக தாக்கும்போது, அவர்கள் பஞ்சாயத்துக்களில் பங்கேற்க உரிமை கிடைக்குமா? 'சதி' எனும் நிலப்பிரபுத்துவ காட்டுமிராண்டித்தனமும், தேவதாசி முறையும, பெண்கள் விபச்சாரத்திற்காக கடத்தப்படுவதும், வரதட்சிணை கொடுமைகளும் தொடரும்போது பெண்கள் பஞ்சாயத்துகளில் பங்கேற்கத்தான் முடியுமா? கோர்ட்டுகள் விடுவித்த கொத்தடிமையை, ஒதுக்கப்பட்ட நிவாரணத் தொகையுடன் சேர்த்து கைப்பற்றி, காண்டிராக்டர்கள் மீண்டும் அடிமையாக்கும்போது, அவர்கள் பஞ்சாயத்து உறுப்பினராகிவிட முடியுமா? முடியாது! ஒருக்காலும் முடியாது!

இந்நிலையில், பஞ்சாயத்துகளுக்கு கூடுதல் அதிகாரம் என்றால், உள்ளூர் நிலப்பிரபுக்கள், சாதிவெறியர்கள், காண்டிராக்டர்கள், அதிகாரத்தரகர், ஓட்டுப்பொறுக்கிகள் முதலான ஆதிக்க சக்திகளுக்கு கூடுதல் அதிகாரம் என்பதுதான் யதார்த்த உண்மை. பஞ்சாயத்துகளுக்கு கூடுதல் நிதி என்றால் இந்த ஒட்டுண்ணிகள் உறிஞ்சுவதற்கு கூடுதல் நிதி என்றுதான் பொருள். சுருக்கமாகச் சொன்னால், பஞ்சாயத்து ராஜ்ஜியம் என்பது நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்துக்கும் கிரிமினல் அரசியலுக்கும் பொருத்தமான புதிய ஆட்சி வடிவம்! இவர்களது சமூக பொருளாதார அரசியல் ஆதிக்கத்தை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்கான புதிய ஏற்பாடு!

எல்லாவற்றுக்கும் மேலாக, இன்று நாம் காணும் நாடாளுமன்ற — சட்டமன்ற அராஜகம், ரௌடித்தனம், ஆபாசங்களுக்கு முன்னோடியாக விளங்கியவை பஞ்சாயத்து அமைப்புகள்தான்! சாதி — மத அடிப்படையில் பஞ்சாயத்து தேர்தல் நடப்பதும, உறுப்பினர்களைக் கடத்துவது, பணம் — பெண் — சீமைச்சாராய போதையில் குளிப்பாட்டி பேரம் பேசி பதவிகளைப் பிடிப்பது, கவிழ்ப்பது முதலானவை துவங்கிய இடமே பஞ்சாயத்துகள்தான். ஓட்டுக்கட்சித் தலைவர்களது பினாமிகள் மற்றும் உள்ளூர் நிலப்பிரபுத்துவ பிரமுகர்களுக்கு வழங்கப்படும் அதிகார சன்மானமாகத்தான் இன்றைய பஞ்சாயத்துக்கள் உள்ளன. இத்தகைய பஞ்சாயத்துகளுக்கு கூடுதல் நிதி, அதிகாரமளிப்பதன் மூலம் சாதி — மத — நிலப்பிரபுத்துவ ஆதிக்க சக்திகளோடு, பொறுக்கி அரசியல் பிழைப்புவாதிகள் ஆதிக்கம் செலுத்துவதற்குத்தான் வழிவகுக்கும். பாசிச ஆட்சிக்குப் பொருத்தமான உள்ளூர் அதிகார அமைப்புகளாக மாறி, மக்கள் மீது சர்வாதிகார சவாரி செய்யும்.

எனவே நமது கிராமிய சமுதாயத்தின் ஒட்டு மொத்த சமூக பொருளாதார அமைப்பையும் மாற்றாமல் — நிலப்பிரபுக்களின் சமூக, பொருளாதார, அரசியல் ஆதிக்கத்தை வீழ்த்தி, நிலப்பங்கீடு செய்யாமல் — வேறு எந்த சீர்திருத்தமும் பலனளிக்காது. தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும், திருப்பி அழைக்கவும், தவறிழைத்தால் உடனடியாக தண்டிக்கவும் மக்கள் கரங்களில் அதிகாரத்தைக் குவிக்கும் புதிய ஜனநாயகப் புரட்சியில் மலரும் உள்ளூராட்சி அமைப்புகள் மட்டும்தான் உண்மையானதாக இருக்க முடியும்.

எனவே,

**பாசிஸ்டுகளின் ஆயுதமாகும் பஞ்சாயத்துகளை உருவாக்கும் போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்!**

**மக்கள் கரங்களில் அதிகாரத்தைக் குவிக்கும் புதிய ஜனநாயகப் புரட்சியைச் சாதிக்க பெரும்படையாய் திரண்டெழுவோம்!**

படிப்பகம்

www.padippakam.com



# பாசிசத்தை சுமந்து வரும் பிழைப்புவாத கும்பல்கள்

வழக்கம்போல் அ.தி.மு.க.வும் தி.மு.க.வும் நாடாளுமன்ற தேர்தலில் ஆளுக்கொரு தேசீய கட்சியை முதுகில் ஏற்றிக் கொண்டன. வழக்கமான கூலிதான்! காங்கிரசு வெற்றி பெற்றால் ஜெயலலிதாவுக்கு முதல்வர் பதவி! தேசீய முன்னணி வெற்றி பெற்றால் கருணாநிதி முதல்வர் பதவியில் மீதி காலத்தை கவலையின்றி ஓட்ட அனுமதி

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 39 நாடாளுமன்ற தொகுதிகளில் ஜெயலலிதாவுக்கு 11; மீதி காங்கிரசுக்கு! கருணாநிதி, ஜனதாதள் கட்சிக்கு 2 தொகுதியை ஒதுக்கியிருக்கிறார். தேர்தல் சூதாட்ட கும்பலை நோக்கி குறுக்கும் நெடுக்குமாக பல பழைய அரசியல் கேடிகள் பரபரப்பாக இணைவதும் விலகுவதுமாக இருக்கிறார்கள்.

கடைசியாக வந்த தகவலின்படி ஜெயலலிதாவின் ஆரம்பக்கால விசுவாசி சேலம் கண்ணன் கருணாநிதி கும்பலிடம் ஓடிப்போனார். அரசியல் அநாதைகளான நெடுஞ்செழியனும், ப.உ.சண்முகமும் ஜெயலலிதா முகாமில் தஞ்சம் புகுந்தனர். குள்ளநரி பண்ருட்டி ராமச்சந்திரன் வெளியில் இருந்தபடியே காங்கிரசுக்கு தரகு வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்.

கடைசி காலத்தில் கருணாநிதி கட்சிக்கு ஓடிப்போன ஆலடி அருணா தென் சென்னை தி.மு.க. வேட்பாளராகிவிட்டார். தி.மு.க.வுக்கு தூதுவிட்டு தோற்றுப்போன ஜெயலலிதாவின் காலடியில் வீழ்ந்த காளிமுத்துவை டில்லிக்கு மூட்டைக்கட்ட சிவகாசி தொகுதியில் நிறுத்தியிருக்கிறார் ஜெயலலிதா!

### கடைசிவரை கருணாநிதி ஊசலாட்டம்!

தேசீய முன்னணியின் ஆரம்ப விழாவை முன்னின்று சென்னையில் நடத்தினார் கருணாநிதி. காங்கிரசை குறுக்குவழியில் பயமுறுத்தினார் கருணாநிதி. காங்கிரசு கருணாநிதியை சட்டை செய்வதாக இல்லை.

தனிநபர் கவர்ச்சியின் மூலம் கட்சி என்ற பெயரில் பெரும் மந்தைக்கு தலைவியாக இருக்கும் ஜெயலலிதாவை காங்கிரசு உடும்புப்பிடியாக பிடித்துக் கொண்டது. இதன்மூலம் சிக்கலே இல்லாமல் தமிழகத்தின் ஓட்டுக்களை தனது தலைமையின் கீழ் பொறுக்கிக் கொள்ளும் தந்திரத்தில் காங்கிரசு வெற்றி பெற்றிருக்கிறது.

கருணாநிதி தேசீய முன்னணியில் அங்கம் வகித்தாலும் கடைசிவரையில் காங்கிரசின் கூட்டுக்கு தவமிருந்தார். ராஜீவ் அரசு கர்நாடக பொம்மை ஆட்சியை கவிழ்த்ததற்கு அதிகாரபூர்வமாக எதிர்ப்பு தெரிவிக்காமல் பின் வாங்கினார். தேசீய முன்னணியின் நிர்வாக குழு கல்கத்தா கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் சொந்த ஊருக்கு சாமி கும்பிட போகும் சாக்கு சொன்னார். "ராஜீவே ராஜினாமா செய்" முழக்கத்தின் கீழ் தேசீய முன்னணி நடத்திய 'பாரத் பந்த்'தில் கலந்து கொண்டு "ராஜீவின் ஜனநாயக விரோத போக்குகளை எதிர்ப்பது" என்பதாக குறுக்கிச் சுருக்கினார். உணவுப் பொருட்கள் வழங்க மறுத்த ராஜீவ் அரசுக்கு எதிராக மனித சங்கிலி போராட்டத்தை நடத்திய போது ராஜீவ் என்று பெயரிட்டு தாக்கக்கூடாது என்று நேரடியாக உத்திரவு இட்டார். உணவுப் பொருட்கள் வழங்க மறுத்ததைப் பற்றி பத்திரிக்கையாளர்களிடம் விளக்கும் போது, "உணவுப் பொருட்கள் கட்டுப்பாட்டிற்கு மத்திய அரசு மட்டும் காரணமல்ல; மாநிலத்திலும் மத்தியிலும் பருவமழை தவறியதும் ஒரு காரணம்" என அடக்கி வாசித்தார்.

மேலும் தமிழக காங்கிரசில் இருக்கும் வலுவான எதிர்க் கோஷ்டி மூப்பனாரை வளைத்து போட்டு ராஜீவுக்குத் தூதுவிட்டார். அப்படியும் முடியவில்லை. கடைசியில், வேறுவழி இல்லாமல் தேசீய முன்னணியோடு செயல்பூர்வமாக இணைத்துக் கொண்டார்.

### பாசிச ராஜீவுக்கு காவடி!

குறிப்பாக அ.தி.மு.க. கட்சி கடந்த 5 ஆண்டில் பாசிச ராஜீவ் கொண்டுவந்த எந்த கறுப்பு சட்டத்திற்கும் துளி அளவும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. பஞ்சாப் மக்களின் மீது பல தவணைகளில் கறுப்பு சட்டங்களைப் போட்டு அரசு பயங்கரவாதத்தை ஏவிய போதெல்லாம் ராஜீவ் கும்பலுக்கு இவர்கள் கை உயர்த்தி விசுவாசம் தெரிவித்தனர்.

இந்திரா படுகொலையை அடுத்து காங்கிரசுக் கட்சி சீக்கியர்களின் மீது நாடு முழுக்க குறிப்பாக, டில்லியில் கட்டவிழ்த்துவிட்ட கலவரம், போபால் விஷவாயு படுகொலை, ஷாபானு ஜீவனாம்ச வழக்கு, காங்கிரசின் போபர்ஸ் பீரங்கி ஊழல், கர்நாடகா ஆட்சிக் கவிழ்ப்பு - இவைப்பற்றி நாடாளுமன்றத்தில் விவாதங்கள் வந்த போதெல்லாம் இவர்கள் ராஜீவுக்கு விசுவாசமாக அமர்ந்திருந்தனர். பஞ்சாயத்துராஜ் — நகர்பாலிகா அதிகாரபறிப்பு சட்டங்களை அ.தி.மு.க. முழுமையாக ஆதரித்தது. மாநில அதிகாரத்தில் ராஜீவ்காந்தி மூக்கை நுழைப்பதற்கு முன்னோட்டமாக, நேரிடையாக பஞ்சாயத்து அமைப்புகளிடம் கடிதம் மூலம் தொடர்பு கொண்டார்.

அரியானா முதல்வர் தேவிலால் இதை தடுத்து திருப்பி அனுப்பியபோது, கருணாநிதி அதை தம் மாநிலத்தில் அனுமதித்தார். ஜனநாயகபூர்வமாக தானும் உள்ளூராட்சி அமைப்புகளுக்கு கடிதம் எழுதிவிட்டதாக சமாளித்தார். மத்திய அரசு எதிர்ப்பில் அவர் ஜனதாதள் நிலைப்பாட்டை பூரணமாக ஆதரிக்காமல் மதில் மேல் பூனையாக நோட்டமிட்டுக் கொண்டிருந்தார். அதை மறைக்க அடுக்கடுக்காக வார்த்தை ஜாலங்களில் இறங்கினார்.

தேசீய அரசியலில் தமிழகத்தின் பிரதிநிதித்துவத்தை கௌரவமான முறையில் நிலைநாட்டுவது, விமர்சனபூர்வ ஆதரவு தருவது, அரசியல் ரீதியில் தோலுரிப்பது என்பவையெல்லாம் கழகங்களின் அகராதியில் காணக் கிடைக்காதவை. மற்ற தேசீய இனங்களின் மீது மத்திய அரசு அடக்குமுறையை கட்டவிழ்த்துவிடும் போது, கறுப்புச் சட்டங்களை திணிக்கும்போது, தேசீய அவமானங்களை அரங்கேற்றும்போது குறைந்தபட்சம் ஒரு பாமரனுக்கு எழும் உணர்வுகூட இந்த கழகங்களுக்கு கிடையாது. சொந்த தேசீய இன மக்களின் மீதே அடக்குமுறை, அவமானங்களை திணிக்கும் மத்திய அரசை எதிர்க்க திராணியற்ற இந்த கோழைகளிடம் அதை எதிர்பார்க்க முடியாது.

மைய அரசியலில் மட்டுமல்ல; மாநில அரசியலிலும் பிழைப்புவாதம், காரியவாதம், கவர்ச்சி வாதம், கருங்காலித்தனம், சுயவிளம்பரம், அடிமைத்தனம் - சுருக்கமாகச் சொன்னால் பொறுக்கி அரசியல் தான் இவர்களின் ஒரே ஆயுதம். திராவிட பாரம்பரியம், பகுத்தறிவு பகலவன்கள், சுயமரியாதை வாரிசுகள், உண்மையான கம்யூனிஸ்ட்டுகள் என்று ஒளிவட்டம் அமைத்துக் கொண்டு பிழைப்பு நடத்தும் அரசியல் கேடிகள்.

### கழகங்களின் பிறப்புக்குறி!

"அடைந்தால் திராவிட நாடு இல்லேயேல் சுடுகாடு. உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு" என்று கடைவிரித்து களத்தில் இறங்கியவர்கள்; இவர்களுடைய அரசியல் பிதாமகன் அண்ணாதுரை பிரிவினை தடைசட்டம் வதந்தி வந்தவுடனே கொள்கையை உடைப்பில் போட்டு, 'மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி' என்று ராகம்பாடி நாற்காலியை தக்க வைத்துக் கொண்டார்.

இந்தி திணிப்பு எதிர்ப்பு பேசி, அதனிடத்தில் அடிமைப் புத்தியுடன் ஆங்கிலத்தை ஏற்றுக்கொண்டார். கடவுள் மறுப்பு கொள்கையை தலையை சுற்றிபோட்டுவிட்டு "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற ஓரிறை கொள்கையை ஏற்றுக் கொண்டார். இந்து மத சனாதன கொள்கை வெறியன் ராஜாஜியை 'சகலமும் அறிந்தஞானி! மூத்த வழிகாட்டி' என்று ஏற்றி போற்றி அவரது சீட



படிப்பகம்

www.padippakam.com

ரானார். இதன்மூலம் அரசு எந்திரத்தின் சூத்திரதாரிகளாக இருந்த பார்ப்பன மேல்சாதி கும்பலின் ஆதரவு பெற்றார். ''மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு'' 'அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை, நிரந்தர எதிரிகளும் இல்லை'' என்று அரசியல் அலித்தனத்திற்கும் பேடித்தனத்திற்கும் புது விளக்கமளித்தார். ''ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம்'' என்று இலவச கவர்ச்சித் திட்டங்களுக்கு புதுப்புது வண்ணம் பூசினார். சுயவிளம்பர போதையில் மூழ்கி சுற்றியிருக்கும் கும்பல்களுக்குப் பட்டங்கள் கொடுத்து அதன்மூலம் தானும் 'அறிஞர்' ஆனார். அறிவுத் துறையில் ஒரு மண்ணும் செய்யாமல் வெட்கமில்லாமல் இந்த பட்டத்துடன் சுற்றி திரிந்தார். தமது ஆட்சியில் கீழ்வெண்மணியில் தாழ்த்தப்பட்ட கூலி ஏழைகள் அரைப்படி நெல் அதிகம் கூலி கேட்டதற்கு 43 பேரை உயிரோடு கொளுத்திய நிலப்பிரபுக்களை இந்த ஏழைப் பங்காளன் தண்டிக்கவே இல்லை.

### பாசிசத்தை சுமந்துவரும் பல்லக்காக கழகங்கள்

அவரது நேர்வாரிசு, கருணாநிதியும், எம்.ஜி.ஆரும் பிதாமகன் கற்றுக் கொடுத்த பிழைப்பு வாதத்தை இன்னும் ஆழமாகவும் அகலமாகவும் அளைத்து அரங்குக்கும் விரிவாக்கினார்கள். அதிலும் எம்.ஜி.ஆர். 40 ஆண்டுகால தன்னுடைய தொழில்முறை சினிமா அறிவையும் அதில் புகுத்தினார்.

அரசியல் ஞானசூன்யமும், தற்குறியுமான எம்.ஜி.ஆர் தன்னை சுற்றி ஒரு மந்தையை கவனமாக தேத்தெடுத்தார். முகஸ்துதி, அடிமைத்தனம் இரண்டு மட்டுமே, கழக தலைவர்களுக்கு தேவையான தகுதிகளாக்கப்பட்டது. இதேபோல் இக்கட்சிகளின் கீழ் திரட்டப்படும் மக்கள் திரள் அமைப்புகளும் போர்க்குணம் காயடிக்கப்பட்டு கழக தலைவர்களின் ரசிகர் மன்ற அமைப்புகளாக திட்டமிட்டு இயக்கப்படுகிறது.

தலைவர் கைது செய்யப்பட்டால் தீக்குளிப்பது முதல், தேன் அழிப்பவனுக்கு புறங்கையை நக்க உரிமை உண்டு என்று தலைவர்களின் ஊழலை நியாயப்படுத்துவது வரை, இளப்பற்றாக சித்தரிக்கப்படுகிறது.

ரௌடித்தனம், சுயமரியாதையை காத்துக் கொள்வதற்கான ஒரு வடிவமாகவும்; போராட்டம், கஞ்சிக்குக்கு இல்லாதவன் நடத்தும் கலாட்டாவாகவும் கழக தலைமைகள் மூளைச்சலவை செய்கிறது. கழகங்களின் எந்த ஒரு கட்சியும் ஆட்சியிலிருந்தாலும், மக்களது போராட்டங்கள் வெறித்தனமாக ஒடுக்கப்படுகிறது. மக்கள் பார்த்துக் கொள்வார்கள் என்ற போர்வையில் அக்கட்சி குண்டர்களே போலீசுடன் சேர்ந்து கொண்டு போராடும் மக்களைப் படுகொலை செய்கிறார்கள்.

### பிற்போக்கு ஊதாரிகளின் கூடாரம்!

★ இக் கழகங்களின் தலைமை தானே சாதிமத, பிற்போக்கு கும்பல்களின் கூடாரமாக இருப்பதோடு, பகிரங்கமாக சாதி, மத வெறி பிற்போக்கு கும்பல்களுடன் கூட்டு வைத்து ஓட்டு பொறுக்குவதில் நாயாய் அலைகின்றன.



★ கட்சி - ஆட்சிகளில் பதவி கிடைத்தால் தங்களது சாதி சங்கங்களின் பெயரில் கட்சித் தலைவருக்கு நன்றி அறிவிப்பு போஸ்டர் ஒட்டுவது, பாராட்டுவிழா மற்றும் கூட்டங்கள் நடத்துவது, சாதிமத சடங்கு நிகழ்ச்சிகளில் பெருமையாக கலந்துக் கொள்வது. மதப் பண்டாரங்களை கௌரவிப்பது, ஆலோசனை கேட்பது நடக்கிறது.

★ மக்களின் உயிராதாரமான அரசியல் பொருளாதார பிரச்சினைகளை திசைதிருப்ப கொச்சையான ஆபாச வக்கிர லாவணி நடத்துவது; உதாரணத்திற்கு தேசத்தை சூறையாடிய பாசிச ராஜீவ் கும்பலின் பீரங்கி பேர ஊழல் அம்பலமாகிக் கொண்டிருந்தபோது, தமிழக மக்களின் கவனம் துரை முருகன் ஜெயலலிதாவின் சேலை உருவிய விவகாரத்திலும் செய்தியிலும் மூழ்கடிக்கப்பட்டது.

★ மக்கள் பஞ்சம், பட்டினியில் தவிக்கும்போது, குடிநீருக்கும் போராடிக் கொண்டிருக்கும்போது சாதி கலவரங்களினால் மடியும் போதும் கூட அக்கரையற்று கழகங்களின் தலைவர்கள் உல்லாச வாழ்க்கையிலும், சுய விளம்பர போதையிலும் மூழ்கி கிடப்பது; ஊட்டியில் படகுவிழா; போடி சாதி கலவரத்தின்போது, மகன் ஸ்டாலினுக்கு பாராட்டுவிழா என்று பெரும் பொருட்செலவில் கூத்தடித்தது.

### உரிமைகளை தாரை வார்க்கும் கும்பல்!

வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது தமிழகம் புறக்கணிக்கப்படுகிறது என்று ஆரம்பகாலம் முதல் மேடையில் முழங்கும் இக்கழகங்கள் தங்கள் ஆட்சியில் பல உரிமைகளை தாரை வார்த்துக் கொடுத்திருக்கின்றன. அதில் ஒன்று மாநிலத்தின் உயிராதாரமான காவிரி நீரில் தமிழகத்தின் உரிமை.

இருகழகங்களும் தங்களுடைய லாவணிக்குதான் இப்பிரச்சினையை பயன்படுத்தி வருகின்றன. 'ட்ரிபூனல்' அமை, பேச்சுவார்த்தை நடத்து என்று கோரிக்கை வைத்து உரிமையை பாசிச கும்பலுக்கு திட்டமிட்டு தாரை வார்க்கின்றன.

74 ஆம் ஆண்டோடு முடிவடைந்த ஆங்கிலேயேன் ஆட்சியில் போடப்பட்ட ஒப்பந்தத்தை சீரமைத்து புதுப்பிக்க மறுக்கிறது, கர்நாடகா அரசு. காவிரியின் நீர்வரத்தை புது அணைகள் எழுப்பி மேலும்மேலும் சுருக்கிவிட்டது. '74 ஆம் ஆண்டு ஒப்பந்த முடிவின்போது கருணாநிதிக்கும் இந்திராவுக்கும் இருந்த லட்சி உறவால் தமிழகத்தின் உரிமையை கிடப்பில் போட்டார் கருணாநிதி. அதன்பிறகு வந்த எம்.ஜி.ஆர். மின்சாரத்தை கொடுத்து தண்ணீருக்கு கெஞ்சினார். தமிழகத்தின் உரிமையை தாரை வார்த்தார். தஞ்சை விவசாயிகள் தொடர்ந்து பஞ்சம் பட்டினியில் மடிந்துவருகிறார்கள். ஆனால் தஞ்சை நரிமணத்தில் தரமான 'பெட்ரோலியம்' கச்சா எண்ணெய்யை தாராளமாக வாரி செல்கிறது மத்திய அரசு.

தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளை மட்டுமல்ல; ஈழத் தமிழர்களின் உரிமைகளையும் தங்கள் ஓட்டுக்கு பயன்படுத்திக் கொண்டு அவர்களை பாசிச ராஜீவ் கும்பலுக்கு காட்டிக் கொடுத்த கருங்காலிகள்தான் கழகங்கள்! குறிப்பாக, இலங்கைக்கு இந்திய ராணுவத்தை அனுப்ப சொல்லி பாசிச ராஜீவ் கும்பலுக்கு பக்க பலமாக இருந்தவர்கள், அதன்பிறகு இந்திய ராணுவத்தின் அட்டூழியங்களுக்கு நீலிக்கண்ணீர் வடித்து தமிழர்களை ஏமாற்றினார்கள். அ.தி.மு.க. அரசு நேரடியாகவே தமிழகத்தில் தங்கியிருந்த ஈழப்போராளிகளை பாசிச ராஜீவ் கும்பலுக்கு பிடித்துக் கொடுத்தது.

### கழகங்களின் அடித்தளம்

கழகங்களின் துரோகங்கள், பித்தலாட்டங்கள், பிழைப்பு வாதங்களைப் பட்டியல் போட்டு மாளாது. இருந்தும் அவர்கள் இன்னும் தமிழகத்தில் கொடிகட்டி பறக்கிறார்கள். அதற்கு முக்கிய காரணமே இந்த நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு முறையும் அது கட்டிக் காக்கும் சமுதாய அமைப்பு முறை தான். நிலப் பிரபுத்துவ கொடூர சுரண்டலுக்கும் அதன் இரும்புப் பிடியிலும் சிக்கித் தவிக்கும் விவசாயிகள், குறிப்பாக வறிய, கூலி ஏழைகள், கழகங்களின் கவர்ச்சி முழுக்கங்களைக் கண்டு, அதை தங்களை மீட்டெடுக்க வந்த தேவ தூதனாகவும், அதன் தலைவர்களை தெய்வங்களாகவும் மதிக்கின்றனர். நிலப்பிரபுத்துவத்தின் ஈவிரக்கமற்ற கொடூர சுரண்டலின் தளையிலிருந்து தப்பிக்க நகர்புறங்களுக்கு ஓடிவந்து இங்கும் புறந்தள்ளப்பட்ட வறிய ஏழைகளும் தரகு முதலாளித்துவ தொழிற்சாலைகளின் நவீனப்படுத்தலால் கழித்துக்கட்டப்படும் தொழிலாளர்களும் பெருந்தொகையிலான உதிரிப் பாட்டாளிகளாக மாறுகின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com

நாளும் பெருகிவரும் இந்த வேலையில்லா பட்டாளத்தை அடித்தளமாகக் கொண்டு தான் கழகங்கள் தழைத்தோங்குகிறது. இவர்களின் வர்க்கக் கோபத்தை சீரழித்து, பிழைப்புவாத அரசியலின் பின்னால் அவர்களையும் இழுத்துச் செல்கின்றன. தங்களைப் போலவே இவர்களையும் பாசிசத்தை சுமந்துவரும் பல்லக்காக உருமாற்றி பாசிசத்திற்கு பரந்த அடித்தளத்தை உருவாக்கி தருகின்றன.

### வரலாறு சொல்லும் பாடம்

வரலாற்றில் இவ்வாறான பிழைப்புவாத கட்சிகளின் பாத்திரம் மிகப் பெரும் நாசகார விளைவுகளை தோற்றுவித்திருக்கின்றன. பிரான்சில் 19ஆம் நூற்றாண்டின் 40ஆம் ஆண்டுகளில் நிலப்பிரபுத்துவத்தை அடித்து வீழ்த்தி முதலாளித்துவம் அதனிடத்தில் உட்கார்ந்து மக்களைச் சுரண்ட தயாரிப்பில் ஈடுபட்டிருந்த காலம்; அதனிடத்தில் திமிறிக் கொண்டு ஜனரஞ்சகமான முழக்கங்களை முழங்கிக் கொண்டு அரசியல் அரங்கில் இடை புகுந்தது போனப்பார்ட்டிஸ்ட் என்ற ஒரு பிழைப்புவாத கும்பல். நிலப்பிரபுத்துவ அழிவும், முதலாளித்துவத்தின் தோற்றமுமான கொந்தளிப்பான காலகட்டம் அது. மக்கள் இருந்ததையும் இழந்து முதலாளித்துவ அமைப்பாலும் உட்சிரகிக்கப்படாமல் தத்தளித்துக் கொண்டிருந்தனர். பஞ்சை பராரிகளாகிப் போன மக்களின் வாழ்வை கரை சேர்க்கும் தகுதி தமக்கு மட்டுமே உண்டு என்று கவர்ச்சி சவடால் முழக்கங்களை மக்கள் முன் வைத்து ஆட்சியைக் கைப்பற்றியது போனபார்ட்டிஸ்ட் கும்பல். பிறகு தேசத்தையும், மக்களையும் வரலாறு காணா வகையில் சூறையாடியதோடு, சிறிய எதிர்ப்பையும் பெரும் ரத்த வெள்ளத்தில் மூழ்கடித்து தனது ஆட்சியை நிலைநிறுத்திக் கொண்டது. உலகில் முதன்முதலில் ஒளிக்கீற்றாய் பிறப்பெடுத்த பாரிஸ் கம்யூன் - பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் தான் அதற்கு மரண அடி கொடுத்து சவக்குழியில் தள்ளியது.

பல லட்சம் உழைக்கும் மக்கள் தங்கள் ரத்தத்தை சிந்தி வரலாற்றில் நமக்கு பாதை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அமைத்துக் கொடுத்த பாதையில் வர்க்க ரீதியில் ஒன்றுதிரண்டு இந்த பிழைப்பு வாத கும்பலின் உயிர் நிலையை நாம் தாக்குவோம்.

பிழைப்புவாத பொறுக்கி அரசியல் தலைவர்களை தமது அரசியல் தலைமையாக தேர்ந்தெடுத்து தனது இறுதிநாட்களை நீட்டித்துக் கொண்டிருக்கும் நாடாளுமன்ற ஜனநாயகத்தை சிதறடிப்போம்!

★ பொறுக்கி அரசியலையும், கிரிமினல் அரசியலையும் பல்லக்காக பயன்படுத்தி படர்ந்துவரும் பாசிச அபாயத்தை முறியடிப்போம்!

★ தி.மு.க., அ.தி.மு.க. போன்ற பிழைப்புவாத பொறுக்கி அரசியல் கட்சிகளை வேரறுப்போம்!

★ கிரிமினல் அரசியலையும், பொறுக்கி அரசியலையும் பெற்றெடுத்து, பேணிப் பாதுகாத்து வரும் போலி ஜனநாயகத் தேர்தலை முற்றாக புறக்கணிப்போம்!

# வாக்குச் சீட்டு விலையேற்றத்தை தடுக்குமா?

கல்யாண பத்திரிக்கையில் மஞ்சளை தடவிக் கொடுப்பது மாதிரி அனைத்து ஓட்டுப் பொறுக்கிகளும் தங்களது தேர்தல் அறிக்கையில் ''விலைவாசியை கட்டுப்படுத்துவோம்'' என்பதை மைய முழக்கமாக்கி இருக்கிறார்கள். ராஜீவின் விலைவாசி குறைப்புப் பற்றி மக்கள் நன்றாகவே உணர்ந்து விட்டார்கள். ராஜீவ் ஊழல் அரசியல் மட்டுமல்ல அரிசி அரசியலும் நடத்துகிறார்! கருணாநிதி இதை எதிர்த்து கடந்த இரண்டு மாத காலமாக கடுதாசி போர் நடத்துமாறு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். இப்போது அவர் அங்கம் வகிக்கும் தேசிய முன்னணியும் விலைவாசி குறைப்புப் பற்றி தனது தேர்தல் அறிக்கையில் மக்களுக்கு உறுதி கொடுத்திருக்கிறது. ''உற்பத்திசாரா செலவினங்கள் குறைக்கப்படும். பற்றாக்குறை பட்ஜெட்டும், பணவீக்கமும் கட்டுப்படுத்தப்படும். இதன் மூலம் விலைவாசி கட்டுப்படுத்தப்படும்'' என்கிறது.

இது தேர்தல் நேரம். இன்பக் கனவுகளை ஏராளமாக தேர்தல் கட்சிகள் விற்கும் நேரம்! ஆனால் நாங்கள் அப்படியல்ல ''செய்வதை சொல்கிறோம்'' என்று கருணாநிதி பாணியில் சொல்கிறார் வி.பி.சிங்.

ஆனால், விலைவாசி உயர்வுக்கும், அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தட்டுப்பாட்டிற்கும் பற்றாக்குறைக்கும் இவை மட்டுமா காரணம்? வறட்சியும், வெள்ளமும், மகசூல் குறைவுக்கு முக்கிய காரணம் என்கிறது அரசு. பணவீக்கமும், திட்ட செலவு விரயமும் மிக முக்கிய காரணம் என்கிறார் வி.பி.சிங். கடப்பாறை விழுங்கியவனுக்கு சுக்கு கசாயம் வைத்தியமா? விலைவாசி உயர்வுக்கான இந்த காரணங்களும் அதுபோல்தான்!

### விலையேற்றத்திற்கு அரசே காரணம்

சேவைத் துறைகள் என்று பெரும்பாலான அத்தியாவசிய துறையை அரசே ஏகபோகமாக்கிக் கொண்டுள்ளது. இரும்பு, எஃகு போன்ற கனரகத் தொழில்கள், மின்சாரம், ரயில்வே, தபால் தந்தி, செய்தித் தொடர்பு போன்ற தொழில் அடிப்படை மற்றும் சேவைத் துறைகள்; பெட்ரோலியம் எண்ணெய், நிலக்கரி போன்ற தொழில் வியாபாரங்கள், இன்னும் பல மூலதன மற்றும் உபயோகப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்கள், அரசின் ஏகபோகக் கட்டுப்பாட்டுக்கு வந்து விட்டன. இவற்றில் எல்லாம் அரசு வைத்ததுதான் சட்டம். ஒவ்வொரு பட்ஜெட்டிலும் விலையேற்றத்தை இத்துறைகளில்தான் ஆரம்பித்து வைக்கிறது அரசு. சங்கிலித் தொடராக இது அனைத்து துறைகளுக்கும் பரவுகிறது.

இரும்பு, எஃகு, மின்சாரம், ரயில்வே போன்ற மிகப்பெரிய மூலதனத் தொழில்களை அரசே துவங்கி நடத்துகிறது. ஒப்பீட்டளவில் இதைவிட குறைவான மூலதனத்தில் அதிக லாபம் தரக்கூடிய தொழில்கள் அனைத்தையும் தனியார் முதலாளிகளுக்கு தாரை வார்த்துக் கொடுக்கிறது அரசு. அவர்களின் தொழிலுக்கு அரசுத்துறையின் உற்பத்தி பொருட்கள் ஊற்று மூலங்களாகிறது. இது தவிர அரசு அவர்களுக்கு கடன் சலுகை, வரி விலக்கு மான்யங்கள் கொடுத்து அவர்களின் லாபத்தை பல மடங்காக்குகிறது. இவற்றை எல்லாம் ஈடுகட்ட உழைக்கும் மக்களின் மீது வரியாக சுமத்துகிறது அரசு.

''ஜனநாயக சோசலிசம்'' என்ற மூடு திரையின் பின்னே தரகு முதலாளிகளின் நிலப்பிரப்புக்களின் சர்வாதிகாரம்தான் இங்கு நடக்கிறது. அதாவது, அமெரிக்கா, ரஷ்யா போன்ற ஏகாதிபத்திய நாடுகளின் கொள்ளைச் சுரண்டலுக்கான வேட்டைக்காடாக இந்தியா விளங்குகிறது. அதற்குத் தேவையான அரைக் காலனிய அரை நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பு முறை இங்கு கட்டிக்காக்கப்படுகிறது.



படிப்பகம்

நமது நாட்டின் வளர்ச்சிக்கு உதவி பெறுவது என்ற பெயரில் நமது நாட்டில் தொழில் துவங்க அவர்களுக்கு அனுமதி அளிக்கிறது அரசு. நமது நாட்டு மக்களின் உழைப்பையும் மூலாதாரங்களையும் கொள்ளை மலிவுக்கு வாரிச் செல்ல அவர்களுக்கு உரிமம் தருகிறது. காலாவதியாகிப் போன தொழில் நுட்பங்களையும் இயந்திரங்களையும் கடனாக பெற்றுக் கொண்டு அதற்கு ஈடாக ஏகாதிபத்தியங்களின் சந்தைக்கு தேவையான உற்பத்தி நடத்த அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

மேலும் அந்நாடுகளின் பொருட்களுக்கு நம் நாட்டின் சந்தையையும் திறந்து விடுகிறது. ஆக நமது நாட்டு மக்களின் தேவைக்கான உற்பத்தி நமது நாட்டில் புறக்கணிக்கப்பட்டு ஏகாதிபத்திய சந்தைக்கு தேவையான உற்பத்தி தான் இங்கு நடக்கிறது. மக்கள் உயிர் வாழ்வதற்கு தேவையான உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு விவசாய உற்பத்தியின் வளர்ச்சிக்கு முதலிடம் கொடுப்பது என்பதற்கு மாறாக, தரகு முதலாளிகளின் தொழில் நிறுவனங்களுக்கு அரசின் நிதி அனைத்தும் திருப்பி விடப்படுகிறது.

பல ஆயிரம் ஏக்கர்களை வளைத்துப் போட்டுக் கொண்டிருக்கும் நிலப் பிரபுக்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் விவசாய உற்பத்திக்கு விலை நிர்ணயம் செய்யும் உரிமையை அக்கும்பலே கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. ஒருதலைபட்சமாக தானே தீர்மானிக்கிறது. மகாராஷ்டிர மாநில 'வெள்ளை கோட்டை'கள் என்றழைக்கப்படும் கரும்பு உற்பத்தி - சர்க்கரை ஆலை ஏகபோக நிலப்பிரபுக்கள், ஒரிசாவின் பீடி சுல்தான்கள், கர்நாடகம், பெல்ஹாம் வெங்காய சந்தை, ஆந்திரா புகையிலை சந்தையை ஆட்டிப் படைக்கும் நிலப்பிரபுக்கள் போன்றவர்கள்தான் விலை நிர்ணயத்தை ஏகபோகமாக கையில் எடுத்துக் கொண்டுள்ளனர்.

மறுபுறம் நாட்டின் மொத்த நுகர் பொருட்கள் கொள்முதல் உபயோகத்தை வர்த்தக சூதாடிகள், கள்ள மார்க்கெட் பேர் வழிகள் கட்டுப்படுத்துகின்றனர். பதுக்கலின் மூலம் செயற்கையான பற்றாக்குறையை உருவாக்கி விலையேற்றி கொழுக்கின்றனர். ஆளும் கட்சியும் அதிகார வர்க்கமும் அவர்களுடன் கள்ளக் கூட்டு கொண்டுள்ளது.

**எஜமானனாக ஏகாதிபத்தியங்கள்**

உணவு பற்றாக்குறைக்கும், விலைவாசி உயர்வுக்கும் அடிப்படைக் காரணங்கள் இவைதான். நம் நாட்டுக்கு தேவையான, தேசிய மூலதனம், தேசிய பொருளாதாரம் தேசிய சந்தை என்று ஒன்று இல்லை. ஏகாதிபத்திய சந்தைக்கான உற்பத்தி நடப்பதால், ஏகாதிபத்திய நாடுகளில் உருவாகும் நெருக்கடிகள் அனைத்தும் நமது நாட்டில் இடிபோல் இறங்குகிறது. அதன் பாதிப்பு மொத்த மக்களையும் தாக்குகிறது. ஏகாதிபத்திய நாடுகள் நம் நாட்டு அரசியலிலும், பொருளாதார திட்டமிடுதலிலும் நேரடியாக தலையிடுகிறது.

அரசால் அளிக்கப்பட்டு வரும் உணவு உற்பத்திக்கான மான்யங்கள், கடன்

[illegible]
உயர்[illegible] ஆணையிடுகிறது. அந்நிதிகளை ஏற்றுமதிக்கான உற்பத்திக்கு சலுகைகள், மான்யங்கள், வரி குறைப்புக்கு பயன்படுத்த நிர்பந்திக்கிறது. இவ்வாறு நமது நாட்டில் பொருளாதார திட்டமிடுதலையும் இயல்பான சமூக வளர்ச்சியையும் பிடுங்கி எறிகிறது.

www.padippakam.com

**விரயங்கள்—தண்டச் செலவுகள்**

மறுபுறம் ஒவ்வொரு ஆண்டு பட்ஜெட்டின் போதும் போடப்படும் புதிய வரிகளும், அதன் மூலம் நிரப்பப்படும் பெருந்தொகையான அரசு வருமானமும் அத்தியாவசியப் பொருட்களின் உற்பத்திக்கோ, அதைச் சார்ந்த தொழில்களின் விரிவாக்கத்திற்கோ பிரதானமாக பயன்படுத்தப்படுவதில்லை. அரசு அடக்குமுறை எந்திரத்தின் விரிவாக்கத்திற்கு கொட்டப்படுகிறது. குறிப்பாக ராணுவத்திற்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் செலவிடப்படுகிறது. மேலும் அக்னி ஏவுகணை, போர் ஒத்திகை, அண்டை நாடுகளின் மீதான ராணுவ மிரட்டல், ஈழப் போர் இவற்றுக்கு திருப்பி விடுகிறது.

உலக வங்கி மற்றும் ஏகாதிபத்திய நாடுகளிடம் வாங்கிய கடன்களுக்கு வட்டி, எழுப்பிய கடன்களை பயன்படுத்தாமலிருக்கும் போதே அதற்கான 'சர்வீஸ்' கட்டணம் என்று மக்களின் வரிப்பணம் தண்டம் செலுத்துவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

மேலும் நாட்டு நலன் மக்கள் நலன் பற்றி சிறிதும் அக்கரையற்ற ஆட்சியாளர்கள் வளர்ச்சித் திட்டங்களை முற்றாக புறக்கணித்து விட்டு, அதனிடத்தில் தான தர்மங்களையும், இலவச திட்டங்களையும் ஏராளமாக அறிவிக்கின்றனர். இதன் மூலம் அரசுக்கெதிரான மக்களின் கோப ஆவேசங்களை தணிப்பதிலும், தங்கள் ஆட்சியை நீடித்துக் கொள்வதிலும் தற்காலிகமாக வெற்றி பெறுகின்றனர்.

திட்டமிடுவதில் குளறுபடி, நிதி அராஜகம் இவற்றால் மட்டும், அரசு எந்திரம் ஆண்டொன்றுக்கு 20,000 கோடி ரூபாயை விரயமாக்குகிறது. இன்னும் கலைவிழா, அரசு விழா எவன்று சட்டப்பூர்வமான ஊதாரி செலவுகள் ஆண்டுதோறும் பட்ஜெட்டில் மேற்கூறிய வகையில் உற்பத்தி சாரா செலவுக்கு 80 சதவீதம் செலவிடப்படுகிறது. ஆனால், ஓட்டுப் பொறுக்க களத்தில் நிற்கும் வி.பி.சிங் உள்பட ஓட்டுப்


[illegible]
களை ஏமாற்றுகின்றனர். வெளிப்படையாக தெரியும் அரசு எந்திரத்தின் ஒருசில ஊதாரி செலவுகளை மட்டுமே தேவையற்ற செலவுகள் என்று வரையறுக்கின்றனர். ஆக, நாட்டின் வளர்ச்சி திட்டங்களுக்கோ, மக்களின் தேவைக்கான உற்பத்திக்கோ பயன்படாமல் ஆண்டுதோறும் பட்ஜெட்டில் 80 சதவிகிதம் தொகை அதிகாரிகளால், அரசியல்வாதிகளால், அரசின் அடக்குமுறை எந்திரங்களால், ஏகாதிபத்தியங்களால் சூறையாடப்படுகிறது.

இதனால் பற்றாக்குறை பட்ஜெட் ஆண்டுதோறும் நிரந்தரமாகிப் போனதோடு, பற்றாக்குறையின் அளவு செங்குத்தாக உயர்ந்துக் கொண்டே போகிறது. பண வீக்கம் யானைக் காலாக உப்புகிறது. விலைவாசி விண்ணை முட்டுகிறது. அதாவது சட்டியில் ஒன்றுமில்லாமலேயே அகப்பையின் அளவு பெருத்துக் கொண்டே போகிறது. அரசு காகித நோட்டுக்களை அச்சடித்து குவிக்கிறது.

**வாங்கும் சக்தி யாருக்கு?**

ஏகாதிபத்தியங்களின் சந்தைக்காக ஏற்றுமதிக்கான நவீன உற்பத்தியில் ஈடுபடும் இயந்திரங்களை, கம்ப்யூட்டர்களை இயக்கும் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களும், நவீன விவசாய உற்பத்தியில் ஈடுபடும் நிலப்பிரபுக்களும், புதிய வகைப்பட்ட பணக்கார விவசாயிகளும், வர்த்தக சூதாடிகளும், கள்ள மார்க்கெட், கந்துவட்டி பேர் வழிகள் மட்டுமே வாங்கும் சக்தியுடையவர்களாக எஞ்சி நிற்கின்றனர்.

நுகர் பொருட்கள், ஆடம்பர பொருட்களுக்கான சந்தை திரும்ப திரும்ப இவர்களையே சுற்றி வருகிறது. இப்பொருட்கள் சாதாரண மக்களை சென்றடைவது இல்லை. உதாரணத்திற்கு பால், முட்டை, மீன் போன்ற உணவுப் பொருட்களை அரசே ஏகபோக கொள்முதல் செய்து சாதாரண மக்களுக்கும் கிடைக்க வழிவகை செய்யப் போவதாக தம்பட்டம் அடித்தது. இதற்காக நூற்றுக்கணக்கான விற்பனை நிலையங்களை திறந்தது. 10 சதவிகித மக்களின் சந்தைக்கு மேல் அதன் விற்பனை எட்டவில்லை. கொள்முதல் அனைத்தும் தேங்கி அழுகியது. திரும்பவும் அப்பொருட்களை அந்த 10 சதவிகித மக்களிடமே தலையில் கட்டுவதற்கு அதையே கவையூட்டியும், வறுத்தும், பொறித்தும் கொடுகக்கும்



படிப்பகம்

கள், நிலப்பிரபுக்கள், வர்த்தக சூதாடிகள், கந்துவட்டி பேர்வழிகள், ஓட்டுப் பொறுக்கிகள், ஊதிப் பெருகும் அரசு எந்திரம் இவை யாவும் நம்மையும் நமது நாட்டையும் போட்டி போட்டுக் கொண்டு குறையாடுகின்றன. இவற்றின் தளையிலிருந்து நாம் முற்றாக விடுதலை பெற ஓட்டுச் சீட்டு நமக்கு உதவாது. மாறாக கீழ்கண்ட கொள்கைகளை அமுல்படுத்தும் ஒரு புதிய அரசு மட்டுமே அதை சாதிக்கும்.

★ விவசாய விளை பொருட்கள் கமிஷன் மண்டி, ஏலம் போடும் முறைகள், கந்துவட்டி லேவாதேவி அறவே தடை செய்யப்பட வேண்டும்.

★ விவசாய விளைபொருட்கள் ஆண்டு முழுவதும் நிர்ணயிக்கப்பட்ட ஒரே சீரான

www.padippakam.com

முக வரிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட வேண்டும்.

★ இலாப அடிப்படையில் இல்லாமல் தேவை அடிப்படையிலான உற்பத்தி நடத்தப்பட வேண்டும்.

**என்ன செய்ய வேண்டும்?**

விலைவாசி உயர்வுக்கு பிரதான ஊற்று மூலமான ஏகாதிபத்திய சந்தைக்கான உற்பத்தியை முதலில் தடுத்து நிறுத்த வேண்டும். அதனிடத்தில் சொந்த நாட்டு மக்களின் தேவைக்கான உற்பத்தியை கட்டவிழ்த்து விட வேண்டும். இதற்கு நாட்டின் தொழிற்துறையை ஏகாதிபத்தியங்களின் தளையிலிருந்தும், உள்நாட்டில் அவர்களுக்கு சேவகம் செய்யும் தரகு முதலாளிக

நிறுவனங்கள் அனைத்தையும் நட்ட ஈடு இன்றி பறிமுதல் செய்ய வேண்டும். ஏகாதிபத்திய நாடுகள், அதன் நிறுவனங்களின் கடன்கள் அனைத்தையும் ரத்து செய்ய வேண்டும்.

உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு உள்நாட்டில் சந்தையை உருவாக்க மக்களிடம் வாங்கும் சக்தியை அதிகரிக்க வேண்டும். அதற்கு உழைப்பவர்கள் அனைவருக்கும் நிரந்தர வேலைக்கு அரசு வழிவகை செய்ய வேண்டும். பிரதானமாக நம் நாட்டின் 70 சதவிகித மக்கள் தொகைக்கும் அதிகமான விவசாயிகளுக்கு வேலைக்கு உத்திரவாதம் செய்ய வேண்டும். அதற்கு 15 சதவிகிதத்திற்கு குறைவான பண்ணைப் பிரபுக்களிடம் குவிந்திருக்கும் நாட்டின் 50 சதவிகிதத்திற்கும் மேலான நிலங்களை கூலி ஏழை, வறிய விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும். இதன் மூலம் விவசாய உற்பத்தி பெரும் பாய்ச்சலில் முன்னேறும். இடல்பாகவே அதைச் சார்ந்த துணை தொழில்கள் வேகமாக விரிவடையும். மற்ற அரங்குகளிலும் வேலைவாய்ப்பு பெருகும்.

மையப்படுத்தப்பட்ட பொருளாதாரம், திட்டமிட்ட உற்பத்தியின் மூலம் அத்தியாவசிய நுகர்ப் பொருட்கள் உற்பத்தி, அதைச் சார்ந்த தொழில்களுக்கு முதலிடம் கொடுக்கும். அதனுடைய வளர்ச்சிக்கு இணையாக லேசுரகம், மற்றும் கனரக தொழில்கள் முக்கியத்துவத்தை விரிவுபடுத்தும். அத்தியாவசிய நுகர் பொருட்கள் கொள்முதல் விநியோகத்தை மக்கள் அரசாங்கம் ஏற்று நடத்தும். தனியார் வியாபாரிகளையும் அது அனுமதிக்கும். ஆனால் விளைபொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யும் உரிமை, உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளின் கரங்களிடம் அவர்களை பிரதிநிதிப்படுத்தும் விவசாய கமிட்டிகளிடம் ஒப்படைக்கப்படும். அத்தியாவசியப் பொருட்களின் விலையை கண்காணிக்கும் கட்டுப்படுத்தும் அதிகாரம் நுகர்வோரிடம், உள்ளூர் உழைக்கும் மக்கள் கமிட்டிகளிடம் ஒப்படைக்கும்.

நமது தாய் திருநாட்டின் பெருமைக்குரிய வளர்ச்சிக்கும், நமது அன்பிற்குரிய உழைக்கும் மக்களின் சுபிட்ச வாழ்விற்கும் உத்திரவாதம் அளிக்கும் மேற்கூறிய புதிய ஜனநாயக அரசின் பொருளாதார திட்டத்தை உழைக்கும் மக்களின் ஒன்றுபட்ட ஆயுத போராட்டத்தில் மலரும் புதிய ஜனநாயக அரசு மட்டுமே சாதிக்கும். மக்களை ஓட்டுப் பொறுக்கிகள் மேலும் 5 ஆண்டு காலம்சுரண்டவும் விலைவாசி உயர்வில் மக்களின் குரல்வளையை நெறிக்கவே ஓட்டுச்சீட்டு உரிமம் தரும்.

★ அத்தியாவசிய உணவுப் பொருட்களைக் கூட வழங்க வக்கற்ற நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி அமைப்பு முறையை தூக்கியெறிவோம்!

★ மக்களின் நல்வாழ்வை முற்றாகப் புறக்கணித்து உழைக்கும் மக்களின் மீது மேலும் மேலும் சுமைகளை ஏற்றும் போலி ஜனநாயகத் தேர்தலை முற்றாக புறக்கணிப்போம்!

## போலிக் கம்யூனிஸ்டுகளின் அண்டப் புளுகு!

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த உசிலம்பட்டி, தேனி, தேவாரம், கம்பம், போடி, கூடலூர் போன்ற பகுதிகளில் சில ஆண்டுகளாக விவசாயிகள் விடுதலை முன்னணியினர் புரட்சிகர அரசியல் பிரசாரத்தை வீச்சுடனும், பரவலாகவும் நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

அதுவரை அந்த பகுதியில் புரட்சி 'பந்தா' செய்து கொண்டிருந்த 'சந்தா' சாஹிப்புக்களான இடது 'கம்யூனிஸ்ட்'களின் சாயம் வெளுக்க ஆரம்பித்ததால் அரண்டு போயினர். நேருக்கு நேர் விவாதங்களில் தெருவுக்கு தெரு இவர்களை அம்பலப்படுத்தியதால் வாயை மூடிக் கொண்டனர். வாய்ப்பூட்டு சட்டத்தையும் போட்டு அணிகளை தக்க வைக்க முயன்றனர். இது தோற்றுப் போகவே, இப்போது பச்சைப் புளுகு எழுதி அணிகளை தக்க வைக்க முயன்றுள்ளனர்.

போடி, தேனி, பகுதியில் நடந்த கலவரம் பற்றி மதுரை மாவட்டச் செயலாளர் பி.எம்.குமார் 18.10.89 தேதியிட்ட தீக்கதிரில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதில் கலவரத்திற்கு 'பின்னால் உள்ள சக்திகள்' என்ற தலைப்பில் பின்வருமாறு எழுதியுள்ளார்:

"தேவாரம், சின்னமனூர், தேனி இ[illegible] ற இடங்களிலும் நடந்த கலவரத்தில் விவசாய விடுதலை முன்னணி, ஆர்.எஸ்.எல்., நக்சலைட்டுகளின் கைவரிசை இருக்கிறது என நம்பப்படுகிறது"

இதில் விவசாய விடுதலை முன்னணி நக்சலைட்டுகளின் கைவரிசை என்பது அப்பட்டமான புளுகாகும்.

சாதிக்கலவரம் நடந்த போது தே.மீனாட்சிபுரத்தில் ஊர் கமிட்டி அமைத்து சாதி மோதல் வராமல் தடுத்து வர்க்க ஒற்றுமையை நிலைநாட்டினர், விவசாயிகள் விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்கள். உசிலம்பட்டி வி.வி.மு. தோழர்கள் மோதலைத் தடுக்க தாங்கள் இருந்த கிராமங்களில் பிரச்சாரம் செய்தனர். சாதிவெறியர்களைத் தடுத்துநிறுத்தினர். வர்க்க ஒற்றுமையை வலியுறுத்தி 7000 துண்டு பிரசுரம் அச்சிட்டு உசிலம்பட்டியிலிருந்து தேவாரம் வரை விநியோகித்தனர். சுவரொட்டிகள் மூலம் சாதிக் கலவரத்திற்கு எதிராகச் செயல்பட்டனர். கம்பம் நகரில் வர்க்க ஒற்றுமையை வலியுறுத்திய சுவரொட்டிகளை ஒட்டிய போது, சாதி வெறியர்கள் தடுத்து, சுவரொட்டிகளை கட்சிக்காரர்களிடம் காட்டச் சொன்னார்கள். அங்கி குந்த சி.ஐ.டி.யு செயலாளர் நைனாரிடம் காட்டிய போது 'அப்புறம் ஒட்டுங்கள்' என்று சொல்லியுள்ளார். அவர்களது விவசாய சங்கத்தலைவர் கருப்பசாமி 'ஒட்ட வேண்டாம்' என்று விரட்டினார்.

உண்மை நிலவரம் இப்படியிருக்க கலவரத்தில் விவசாய விடுதலை முன்னணி கைவரிசை இருக்கிறது என்று கூசாமல் புளுகியுள்ளார், இடது 'கம்யூனிஸ்ட்' கட்சிகளின் மாவட்டச் செயலாளர் பி.எம்.குமார்.

சிவப்புத்துண்டு தோளில் தொங்க, தோல்பையை கக்கத்தில் இடுக்கிக் கொண்டு போலீஸ் ஸ்டேசனுக்கும் தாலுகா ஆபீசிற்கும் சென்று கூழைக்கும்பிடு போட்டு பம்மிளித்து நடத்தும் பிழைப்பை விவசாயிகள் விடுதலை முன்னணியினர் அம்பலப்படுத்தி கெடுக்கின்றனர் என்று தானே இவ்வளவு ஆத்திரமும் அவதூறும்; இல்லையா திரு.குமார் அவர்களே?

இந்தக் கட்டுரையிலேயே நிவாரண உதவிகளை வழங்க கருணாநிதி வந்ததைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார் குமார். கலவரத்தில் தி.மு.க காரர்கள் ஈடுபட்டனர் என்பது அப்பகுதி மக்கள் அறிந்த உண்மை. ஆனால் கருணாநிதி அவர்களைக் கண்டிக்கவில்லை. இதைப்பற்றி குமார் கருணாநிதியை விமர்சிக்கவில்லை. அதுமட்டுமல்ல கலவரத்தில் தி.மு.க.காரர்கள் ஈடுபட்டதைப் பற்றிக் குறிப்பிட்டு குமார் எங்குமே கண்டித்து விமர்சிக்கவில்லை. ஏன்? கூட்டணிதான்! விமர்சித்தால் வோட்டு போய்விடும். அதுமட்டுமா; கலவரத்தின் பாதிப்புகளைப் போக்க கருணாநிதி அக்கறையுடன் செயல்பட்டதாக வேறு சித்தரிக்கிறார். இவர்கள் வைத்த "அனேகமாக எல்லா வேண்டுகோளையும் அரசு ஏற்றுக் கொண்டது" என்றும் "இதனை ஏற்ற முதல்வர் அவர்களும் பல்வேறு உத்திரவுகளைப் பிறப்பித்து உள்ளார்" என்றும் கருணாநிதியையும் தமிழக அரசையும் பாராட்டித் தள்ளியுள்ளார்.

வோட்டுப் பொறுக்குவதற்கு ஆபத்து என்றால் வி.வி.மு. மேல் அவதூறு;

வோட்டுப் பொறுக்க தயவு வேண்டும் என்பதால் கருணாநிதிக்கு முதுகுத் தண்டு வளைத்து சலாம்!

சபாஷ் குமார்! 'மார்க்சிஸ்ட்' கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினராக ஆகுமளவிற்கு உங்களுக்கு தகுதி வந்து விட்டது; முயற்சி செய்யுங்கள்!

— விவசா[illegible]கள் விடுதலை முன்னணி, தமிழ்நாடு



படிப்பகம்

www.padippakam.com

# ஓட்டுப் பொறுக்கிகளின் உதவாக்கரை வாக்குறுதிகள்!

தேர்தலைச் சந்திக்கும் போதெல்லாம் ஓட்டுப் பொறுக்கி அரசியல் வாதிகள் ஏராளமான கவர்ச்சித் திட்டங்களை மூட்டை கட்டி வந்து தள்ளுவர். 'இவரைப் போல உண்டா, இனி என்ன வேண்டும் எல்லாமே தருகிறாரே' என்ற பிரமிப்பில் ஆழ்த்தி மக்களிடம் எஞ்சி இருக்கும் கோவணத்தையும் பிடுங்கிச் செல்வதே அவர்களது நோக்கம். அன்று இந்திரா; எம்.ஜி.ஆர். இன்று ராஜீவ்.

ராஜீவின் இன்றைய கவர்ச்சித் திட்டங்களில், கிராமப்புற வேலைவாய்ப்பு மற்றும் கிராம மக்கள் நல்வாழ்வு; தாழ்த்தப்பட்டோர் ஆதிவாசிகள், மலைவாழ், பழங்குடி மக்கள் மேம்பாடு; பெண்கள் முன்னேற்றம்; நகர்ப்புற வேலைவாய்ப்பு ஆகியன முக்கியமானவை.

♦ ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் - ஒதுக்கீடு ரூ.2650 கோடி; இந்திரா வீட்டுவசதித் திட்டம்; அனைத்து கிராமங்களுக்கும் குடிநீர் வசதி; இதில் 15% தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்கும், 30% பெண்களுக்கும் பயன்படும் வகையில், கூலி ஏழை விவசாயிகள் அதிகமாக உள்ள, பின்தங்கிய பகுதிகளுக்கு கூடுதலான நிதி.

♦ தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்காக ஒதுக்கப்பட்டு நிறைவு செய்யப்படாமலுள்ள 30,000 பதவிகளை ஆகஸ்ட் '89க்குள் அவர்களைக் கொண்டே நியமிப்பது;

◆ மாநாடுகள், பயிற்சி முகாம்கள், பாராளுமன்ற சிறப்புக் கமிட்டிகள்; மலைவாழ் மக்களுக்கு நிலப்பங்கீடு.

♦ பஞ்சாயத்துக்களில் தேர்ந்தெடுக்கும் பதவிகளில் பெண்களுக்கு 30% ஒதுக்கீடு.

♦ நகர்ப்புறத்தில் நேரு வேலைவாய்ப்புத் திட்டம் - ஒதுக்கீடு ரூ.650 கோடி; ஒவ்வொரு குடிசைக்கும் மின் இணைப்பு.

எதிர்த்தரப்பு அணியான ஜனதா தளமும் அதன் தலைமையிலான தேசிய முன்னணியும் ஒரு வருடத்திற்கும் மேலாகவே தேர்தலை உத்தேசித்து தயாரிப்பு செய்துவந்தன. அவையும் கவர்ச்சித் திட்டங்களால் ஆட்சிக்கு வந்தவையே; ராஜீவ் முன் கையெடுத்ததும் தாமும் பின்பற்றி ஓடின.

♦ அரியானாவில் ஜனதாதளம் விவசாயிகளுக்கு விவசாயக் கடன் ரத்து உட்பட பல்வேறு சலுக்கைகளை அறிவித்து அமுலாக்கத் தொடங்கியது.

♦ ஓட்டுப்பிளவில் ஆட்சிக் கட்டிலேறிய கருணாநிதி, என்று கவிழ்க்கப்படுமோ என்ற பீதியில், தேர்தலுக்கு சொன்ன கவர்ச்சித் திட்டங்களை கன வேகமாக நிறைவேற்றத் தொடங்கினார். சத்துணவுடன் முட்டை, ரூ.300க்கு குறைந்த வருமானமுள்ள குடும்பங்களுக்கு வருடம் 5 முறை, ஐந்து கிலோ இலவச அரிசி; ரூ.200க்கு குறைந்த வருமானமுள்ளவருக்கு இலவச வேட்டி, சேலை;

◆ ஆதரவற்றோருக்கு மாதாந்திர உதவி அதிகரிப்பு; 5வது வரை படித்த பெண்களுக்கு திருமண உதவி ரூ.5000. பெண்களுக்கு 30% இட ஒதுக்கீடு; அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு ஆகிய திட்டங்களை அமுலாக்கியது.



ஆந்திராவில் தெலுங்குதேச ஆட்சி, குழந்தைகளுக்கு சத்துணவுடன் வைட்டமின் மாத்திரைகள்; 50000 இளைஞர்களுக்கு உடனடி அரசு வேலை; கி.பி. 2000 வரை இட ஒதுக்கீடு நீட்டிப்பு; நகர்ப்புற வீட்டு வசதிக்கு தனிக்கழகம் ஆகிய திட்டங்களை அறிவித்து அமுலாக்கியது.

நாடாளுமன்ற தேர்தலுக்கான அறிக்கையில் ஜனதா தளம் இப்பிரச்சினைகளில் முன்வைத்துள்ள திட்டங்கள்:

★ வேலை செய்ய அரசியல் சட்டப்படி உரிமை; விவசாய அடிப்படை கொண்ட தொழில்கள், கிராமப்புற கைவினைஞர்களின் தொழில்கள் குறிப்பாக பெண்களுக்கான தொழில்கள் ஆகியவற்றுக்கு உதவிகள்;

★ 60 வயதானோருக்கு ஓய்வூதியம்.

★ பெண்களுக்கான அகில இந்திய கமிஷன்.

★ சுயவேலைவாய்ப்புக்கு பயிற்சியுடனும் உதவியுடனும் ரூ.50000; குறைந்த வட்டிக் கடன்.

— இவ்வாறு ஒருவரையொருவர் விஞ்சும் போட்டியில் இறங்குகின்றனர். கொள்கை - கோட்பாடு - நடைமுறை சாத்தியப்பாடு பற்றி இவர்களுக்கு அக்கறையில்லை.

இக்கட்சிகளின் திட்டங்கள் எல்லாம் ஒன்றை அப்பட்டமாக ஒத்துக் கொள்வதைப் பார்க்க முடியும்: பெரும்பான்மை கிராமப்புற மக்கள், தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்கள், பழங்குடிகள், பெண்கள் மற்றும் நகர்ப்புற ஏழைகள் படுமோசமான நிலைக்கு ஆளாகியுள்ளனர் என்பதே அது.

இதுவரை, வறுமையை ஒழிப்போம் (இந்திரா) இன்னும் 10 ஆண்டுகளில் வேலையின்மையை ஒழிப்போம் (மொரார்ஜி), கடையனுக்கும் கடையருக்கு வேலை (இந்திரா) என்ற முழக்கங்களுடன் கொண்டுவந்த ஐ.ஆர்.டி.பி.; நிலமற்றோர் வேலை உத்திரவாதத் திட்டம் என்று ஏராளமான திட்டங்கள் என்ன பலனைத் தந்தன?

இதோ, இவர்கள் இந்த நலிவுற்ற மக்கள் போராடினால் எங்ஙனம் எதிர் கொள்கிறார்கள் என்று பார்ப்போம்.

## சிறுபான்மையினர் — தாழ்த்தப்பட்டோர் — பெண்கள் நலம்:

கண் தெரியாத குருடர்கள் வேலை கேட்டு உண்ணாவிரதம் இருந்தனர் டெல்லியில். ராஜீவ் ஆட்சியில் இவர்களுக்கு கிடைத்தது போலீஸ் தடியடி. இவர்தான் 4.5 கோடி பேருக்கு 4 மாதங்களில் வேலையின்மையை போக்குவாராம்!

தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த பெண்ணை மணந்த பிராமண சாதியைச் சேர்ந்த, கலப்பு மணம் புரிந்து அரசு வேலை பெற்றவர் கீலானந்த் ஜா. இவரது வேலையை பிடுங்கிக் கொண்டனர் பீகாரின் சாதி வெறிபிடித்த அதிகாரிகள். 5 வருடமாக போராடியும் வேலை தரவில்லை. பாராளுமன்றத்தில் எழுப்ப முயன்றும் அனுமதிக்கப்படவில்லை. பீகாரில் ஆளுவது இ.காங்கிரஸ் கட்சி.

கிராமப்புற மக்கள், மலைவாழ் பழங்குடிமக்களுக்கு எதிராக நிர்வாகம், போலீஸ்,



படிப்பகம்

அரசியல் வாதிகள் நடத்தியுள்ள எவ்வளவோ சித்திர வதை, தீவைப்பு, கொலை, கொள்ளை குற்றங்கள் நிருபிக்கப்பட்டும் கூட, அவர்கள் தண்டிக்கப்பட்டதில்லை. தமிழகத்தில் தி.மு.க., அ.தி.மு.க. இருகட்சிகளுமே விவசாயிகள் போராட்டங்களை அடக்கி ஒடுக்கின.

சமீபத்தில் உ.பி.யில், பாரதீய கிசான் யூனியன் தலைமையில் நடந்த ஒரு லட்சம் பேருக்கு மேலாக கலந்துக் கொண்ட மீரட், டெல்லி போராட்டங்களை அடக்கி ஒடுக்க முனைந்தது பாசிச ராஜீவ் கும்பல்.

பெண்கள் பிரச்சினைகளை எடுத்துக் கொண்டால், ஆதிவாசிகள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடிகள், மலைவாழ் மக்கள், கிராமப்புற பெண்கள் விசயத்தில் அரசியல் வாதிகள், காண்ட்ராக்டர்கள், அதிகாரிகள், நிலப்பிரபுக்கள், போலீஸ், இராணுவம் என்ற பெரும் அதிகாரக் கும்பலே கற்பழிப்பு, கடத்திச்சென்று கற்பழித்து கொலை செய்வது, பணியாதவர்களை சித்திரவதை செய்வது, கடத்திசென்று விற்பது என்றவாறெல்லாம் ஈடுபடுகின்றனர். இவர்கள் எவரும் அம்பலப்பட்டாலும் தண்டிக்கப்பட்டதே இல்லை.

கேரளத்தில் அப்பாப்பாரா என்னும் எஸ்டேட்டில் ஆதிவாசிப் பெண்களை இழுத்துவந்து சாராயத்தை ஊற்றி நிர்வாணப்படுத்தி நிலவொளியில் ஆடச் செய்து ரசித்தனர், முதலாளிகளும் அதிகாரிகளும். பின்னர் செய்தியறிந்து ஆதிவாசிமக்கள் போராட்டம் நடத்தினர். இ.காங்கிரஸ் ஆட்சியில் அதிகாரிகள் தண்டிக்கப்படவில்லை. இந்த பாசிச கும்பல்தான் பெண்கள் மேம்பாட்டுககு கண்ணீர் வடிக்கிறது.

www.padippakam.com

ஆபாச வெறியர் வெறி பிடித்தலையும் ஒரிஸ்ஸா காங்கிரஸ் முதல்வர் பட்நாய்க், 14 வயது மகளுக்கு கட்டாய சிறுவயது திருமணம் செய்த ராஜஸ்தான் காங்கிரஸ் மந்திரி ராம்சிங் மன்ஷோய், சக ஐ.ஏ.எஸ். பெண் அதிகாரியை குடிபோதையில் பலர் முன்னிலையில் கையை பிடித்திழுத்த போலீஸ் அதிகாரி கே.பி.எஸ். கில் தண்டிக்கப்பட்டார்களா? இல்லை.

அரக்கத்தனமான உடன்கட்டை ஏறும் (சதி) பழக்கத்திற்கு அரசே உடந்தையாக உள்ளது. இ.காங்கிரஸ், ஜனதாதளம், பி.ஜே.பி. கட்சித் தலைவர்கள் சதி மாதா கோயில்களுக்கு சென்று வழிபடுகின்றனர். சதி ஒழிப்புச் சட்டங்களை அமுலாக்காமல் வழக்குகளை கிடப்பில் போட்டது அரசு. முஸ்லீம் பெண் ஷா பானுவுக்கு ஜீவானாம்சம் தரக்கூறிய உச்சநீதிமன்ற தீர்ப்பை திருப்பிவிட முஸ்லீம் தனிமனித சட்டத்தை திருத்தியது பாசிச ராஜீவ் கும்பல்.

போலி கம்யூனிஸ்டுகளும் இத்தகைய நடைமுறைகளுக்கு விதிவிலக்கல்ல. கேரளத்தில் பஸ் வசதி கோரிப் போராடிய தங்கமணி கிராமத்தில் கொள்ளையடித்து, பாலியல் வன்முறைகளை நடத்திய போலீஸ் மீது நடவடிக்கை எடுப்போம் என தேர்தல் வாக்குறுதி அளித்தனர். ஆட்சிக்கு வந்தபின்னர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே இந்த விவரங்களிலிருந்து நாம். அறிவதென்ன? இந்த தேர்தல் கட்சிகள்,

- கிராம மக்கள், தாழ்த்தப்பட்டோரைச் சுரண்டுவோர், ஆதிவாசிகள், மலைவாழ், பழங்குடி மக்களை ஏமாற்றி கொள்ளையடிப்போர், ஆணாதிக்கம் மற்றும் பாலியல் வன்முறை மேற்கொள்வோர் — இத்தகையவர்களை கொண்டதாக இருக்கின்றன; இத்தகையவர்களுக்கு கூட்டாளிகளாக இருக்கின்றன.
- மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பதிலாக அவற்றின் மூலமாக தமது தேர்தல் அரசியலுக்கு என்ன ஆதாயம் என பார்க்கிறார்கள்.

ஆட்சியில் இருக்கும்போது போராடும் மக்களை அடக்கி ஒடுக்குவது; அரசின் அடாவடித்தனமான செயல்களை நியாயப்படுத்துவது; போராடுபவர்களை பிளவுபடுத்துவது; நிவாரணம் அளிப்பது; விசாரணை கமிஷன் அமைத்து இழுத்துப் பறிப்பது, நிறுவனமயமாக்குவது; பிழைப்புவாதத் தலைமையை உருவாக்குவது; மக்கள் விரோதிகளை — மக்கள் மீது கொடுமை இழைத்த குற்றவாளிகளை பாதுகாப்பது என்ற நடைமுறைகளை மேற்கொள்கின்றனர். எதிர்க்கட்சியாக இருந்தால் மக்கள் போராட்டங்களை ஆதரிப்பது, நீலிக்கண்ணீர் வடிப்பது, விசாரணைக் கமிஷன், நிதி உதவி கோருவது; தாமே நிவாரண முகாம் மற்றும் உதவி அளிப்பது என்று நடந்து கொள்கினறனர்.

அடுத்து, சாதிய அடக்குமுறைக்கு நிலவுடைமை உறவுகளே அடிப்படையாகும் இன்று கூடுதலாக வேலைவாய்ப்பு, கல்விச் சலுகைக்களுக்கான போட்டி, வெறியூட்டி தூண்டப்படுகிறது.

பெண்கள் அவலநிலைக்கு பொதுவாக உழைக்கும் மக்கள் மீது திணிக்கப்படும் நிலப்பிரபுத்துவ வர்க்க ஒடுக்குமுறை; மக்கள் ஜனநாயக ரீதியில் திரட்டப்படாதது ஆகியன காரணமாகும்.

ஆதிவாசிகள், மலைவாழ், பழங்குடி மக்கள் இயற்கை, தாது வளங்கள் நிறைந்த பகுதிகளில் உள்ளனர். இவற்றை கொள்ளையடிக்கும் வெறியில் வணிகர்கள், காண்ட்ராக்டர்கள், தரகு அதிகார வர்க்க முதலாளிகள் இறங்குகின்றனர். இம்மக்களது மொழி, மரபு, கலாச்சாரத்தை ஒடுக்கவும் சிலரை சீரழிக்கவும் இறங்குகின்றனர். எனவே இக்காரணங்களைக் களைவதே மக்களது பிரச்சினைகளைத் தீர்க்கும்.

- உழுபவருக்கு நிலம் சொந்தமாக்க வேண்டும். நிலப்பிரபுக்களின், கோவில்களின், அரசின் நிலங்கள் அவற்றில் பாடுபடும் கூலி, ஏழை, நடுத்தர விவசாயிகளுக்கு இலவசமாக தரப்படவேண்டும்.
- நிலம் மட்டுமின்றி பிற உதவிகளும், சமூகநல திட்டங்களும் அமுலாக்கப்பட வேண்டும்.
- கிராமப்புற முழு அதிகாரம் தேர்ந்தெடுத்த உழைக்கும் மக்கள் கமிட்டிகளின் கையில் இருக்க வேண்டும். இதுதான் விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய உயர்ந்தபட்ச முழு வகை ஜனநாயகமாகும்.
- சாதி பாராட்டுவது அறவே தடை செய்யப்பட வேண்டும். தனிக்குடியிருப்புகள் என்பது ஒழிக்கப்பட வேண்டும். நிலமும் அதிகாரமும் உழைப்பவர்கள் அனைவருக்கும் முழு ஜனநாயகத்தை அளிப்பதால் சாதி அடிப்படைச் சலுகைகள் என்ற கோரிக்கை





படிப்பகம்

www.padippakam.com

எழவே அவசியமில்லை.

♦ தொழிற்துறை மற்றும் ஒட்டுமொத்தத்தில் அரசியல் பொருளாதார துறைகளில் ஏகாதிபத்தியங்கள், தரகு அதிகாரவர்க்க முதலாளிகள், நிலப்புரபுக்கள் ஆகியவற்றின் அனைத்து நிறுவனங்களும் உடைமைகளும் நட்ட ஈடின்றி கைப்பற்றப்பட வேண்டும்.

♦ நடுத்தர, சிறு, தொழில்கள் மற்றும் கைத்தொழில்கள் சுயேச்சையான, தனியார் முதலாளிகளிடமும், கூட்டுறவுத் துறைகளிலும், தனி உற்பத்தியாளர்களிடமும் விடப்பட வேண்டும். இதன்மூலம் கிராம நிலவினியோகத்திற்குப் பிறகும் எஞ்சும் வேலையின்மை அடியோடு ஒழிக்கப்படவேண்டும்.

♦ அனைத்து கிராமப்புற, நகர்ப்புற உற்பத்தி கிளைகளின் சகலதுறைகளிலும் பெண்கள் பங்கேற்க ஊக்குவிக்கப்படவேண்டும். அதற்காக முறையாக பயிற்றுவித்தல், உதவிகளை அளித்தல் வேண்டும். இது பெண்ணடிமைத்தனத்திற்கான அடித்தளத்தை போக்குகிறது.

♦ நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ வகைப்படும் பெண்ணடிமைக் கலாச்சாரங்களுக்கு பதிலாக, ஆண் - பெண் பரஸ்பர உதவி, சமத்துவம் மற்றும் பெண்களுக்கான தனிச்சிறப்பு சலுகைகள் - உரிமைகள் கொண்ட புதிய ஜனநாயக கலாச்சாரம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

♦ ஆதிவாசிகள், மலைவாழ், பழங்குடி மக்களை அவர்கள் விருப்பங்களுக்கு மாறாக நிர்ப்பந்தப்படுத்துதல் அறவே மேற்கொள்ளப்படக்கூடாது. அவர்களது பிரதேச வளங்களையும் மொழி, மரபு, கலாச்சாரத்தையும் பாதுகாத்து பேணும் உரிமை, சுயாட்சி உரிமை, தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை அளிக்கப்பட வேண்டும். அவர்களது நல்வாழ்வு, மொழி, கலாச்சார மேம்பாடு ஆகியவற்றுக்கான சிறப்பு உதவியும் தரப்படவேண்டும்.

இத்தகைய கொள்கைதான் நலிவுற்ற மக்களுக்கான பிரச்சினைகளைத் தீர்க்கும். இந்த கொள்கையை இந்த தேர்தல் ஓட்டு கட்சிகளால் அமுலாக்க இயலாது. இதற்கு எதிரானவர்க்கங்களை அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்; அவர்களில் சிலர் அவற்றுக்கு சேவைசெய்கின்றனர். இவர்கள் நிராகரிக்கப்பட வேண்டியவர்கள்.

இந்த கொள்கையை இந்த அரசு எந்திரத்தை கொண்டு அமுலாக்க முடியுமா? முடியாது. ஏனெனில் இந்த கொள்கைக்கு எதிரான வர்க்கங்களுக்காக கட்டப்பட்டுள்ள பலாத்காரமான, வன்முறை கருவியாகும். சொல்லப்போனால், இந்த அரசு எந்திரத்தை தூக்கியெறிவதுதான் மையக் கடமை. அது ஆயுதந்தாங்கிய புதிய ஜனநாயக புரட்சியால் தான் சாத்தியம். இந்தப் புரட்சியினால் ஆட்சிக்கு வருகின்ற புதிய ஜனநாயக அரசே இக்கொள்கைகளை நிறைவேற்ற முடியும். எனவேதான் இன்று,

♦ **போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்!**

♦ **புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணி திரள்வோம்!!**

# பாசிச அபாயம் நீங்கிவிடவில்லை; தீவிரமடைந்துள்ளது

மக்களின் போராட்டங்களையும் அரசியல் எதிரிகளையும் ஒடுக்க பல்வேறு பாசிச அடக்குமுறை நடவடிக்கை - கருப்புச் சட்டங்களை அடுக்கடுக்காக போட்டு வந்தார் பாசிச ராஜீவ். நிலைமை முற்றினால் பாசிச ஆட்சியைக் கொண்டு வரவும் தயாராகவே இருந்தார்.

எனினும், போபார்ஸ் ஊழலில் மேலும் அம்பலம், மதக்கலவரங்களினால் வோட்டு பலம் குறையும் என்ற பயம், தன்னையும் மீறி கோஷ்டிகள் வெளியேறலாம் என்ற பீதி ஆகியவைகள் தோற்றுவித்த நெருக்கடிகளிலிருந்து தப்பிக்க திடீரென்று தேர்தலில் குதித்திருக்கிறது பாசிச ராஜீவ் கும்பல். இதனால் ராஜீவ் கும்பல் பாசிசத் தன்மையை இழந்து விட்டது என்று அர்த்தமாகாது. பாசிச ஆட்சியைக் கொண்டு வராததற்கு பின்வரும் காரணங்கள் இருக்கின்றன.

✶ ஜனநாயகம் நடக்கிறது என்ற மாயையை மக்களுக்கு ஊட்டுவதற்கு ராஜீவ் காந்தி மற்றவர்களை விட பொருத்தமானவர் என்ற நம்பிக்கையை ஆளும் வர்க்கத்தினர் இழந்ததோடு கூட, போபார்ஸ் ஊழல் விவகாரம் இந்த மாயையை உடைக்கும் விவகாரமாக ஆகிவிடுவோமே என அஞ்சுகின்றனர். இதனால் ராஜீவை ஆதரிக்கும் ஆளும் வர்க்கப் பிரிவினரில் கூட கணிசமானோர் பழைய அளவு ராஜீவை உறுதியாக நம்பவில்லை. இது ராஜீவ் கும்பலுக்கு தெரிந்திருப்பது.

✶ கட்சியைப் பொருத்தவரை பல மாநிலங்களில் செல்வாக்கு பெற்ற தலைவர்கள் ராஜீவ் தலைமை மீது நம்பிக்கை இழந்துள்ளனர்.

இந்த நிலையில் அவசர நிலை பிரகடனத்திற்கு கட்சியை தன்னோடு கொண்டு செல்ல முடியாது என ராஜீவ் உணர்ந்துள்ளது இரண்டாவது காரணமாகும்.

✶ ரசிய சமூக ஏகாதிபத்தியம் தனது உள்நாட்டு நெருக்கடி, கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் நெருக்கடி காரணமாகவும் அவைகளைத் தணிக்க பொதுவாக தற்காப்பு நிலையும் அமெரிக்க, மேற்கு ஐரோப்பிய முகாமோடு சுமுகமான உறவு ஏற்படுத்திக் கொள்வதில் அக்கறையுடன் இருப்பதாலும் 1975-ல் இந்திராவின் பாசிச ஆட்சியை ஆதரித்து பாதுகாத்தது போல தற்போது வராது. வராது இருப்பது மட்டுமல்ல, அவசரநிலை பிரகடனத்தை வாபஸ் பெறுவது நல்லது என்று உபதேசம் கூட செய்யலாம். இலங்கையிலிருந்து இந்தியப்படை வாபஸ் பெறுவது நல்லது என்று ரசியா அறிவுரை கூறியது நினைவிருக்கும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடு ராஜீவ் கும்பலுக்கு பலமான உறவில்லை. அமெரிக்காவும் ராஜீவை தகுதியான நபராகக் கருதவில்லை.

இவற்றை எல்லாம் ராஜீவ் கும்பல் அறிந்திருந்ததனால் தான் பாசிச ஆட்சியைக் கொண்டு வருவது என்ற முடிவை எடுக்கவில்லை. பாசிச தன்மையை இழந்து விட்டதனால் அல்ல.

'மக்களுக்கு அதிகாரம்' என்று முழக்கத்தையே ராஜீவ் கும்பல் மையமாக கொண்டு பிரச்சாரம் செய்யலாம்; தேசிய முன்னணியோ, 'எங்கும் எதிலும் பரவியுள்ள ஊழல், ஜனநாயக நிறுவனங்கள் மீதான திட்டமிட்ட தாக்குதல் காரணமாக நாட்டிற்கு ஏற்பட்டுள்ள தலைகுனிவை போக்கி தேசத்தின் கண்ணியத்தை நிலை நாட்டுதலே எங்களது பிரதான பணி' என்று பிரகடனப்படுத்தியுள்ளது.

கருணாநிதி, போன்ற லஞ்சலாவண்ய பெருச்சாளிகளையும், சர்வதேச ஆயுதபேர கும்பல்கள், கிரிமினல்களுடன் கூடிக்குலாவுகின்ற தேவிலால், சஞ்சய்சிங், சந்திரசேகர் போன்றவர்களையும், புரட்சியாளர்களை கொன்றும் ஜனநாயக உரிமைகளை நசுக்கியும் வருகின்ற ராமாராவையும் தனது தலைவர்களாகக் கொண்டுள்ள தேசிய முன்னணி லஞ்சத்தை ஒழித்து, ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டி தேசத்தின் கண்ணியத்தைக் காப்பாற்ற போவதாக சொல்வது பச்சைப்புளுகு; ஏமாற்று; வோட்டுப் பொறுக்க இன்னொரு கவர்ச்சி முழக்கம்!

இந்த இரு அணிகளின் கூட்டாளிகளான பி.ஜே.பி, வலது, இடது 'கம்யூனிஸ்ட்' கட்சிகள், அ.தி.மு.க போன்றவைகளும் தங்களது கொள்கை அறிக்கைகளை வெளியிடும்.

தேவிலால் சொன்னது போல, இந்த தேர்தல் அறிக்கைகளின் மேலட்டையை நீக்கிவிட்டுப் பார்த்தால் வேறுபாடே தெரியாது என்பது முழு உண்மையாகும்.

காந்தியம், கம்யூனிசம், தேசியம், திராவிடம், இந்து ராஷ்ட்ரம் - இப்படி இலட்சியம், கொள்கை பேசி இவர்கள் வோட்டு பொறுக்கிய காலம் மலையேறி விட்டது.

இப்போது பொறுக்கி அரசியலும் கிரிமினல் அரசியலும் தான் தேர்தல் களத்தில் கொடிகட்டிப் பறக்கின்றன.

காந்தியம், தேசியம், போலி சோசலிசம், திராவிடம் போன்ற தங்களது பிற்போக்கு சித்தாந்தங்களை வெளிப்படையாக வைத்து பரந்துபட்ட மக்களை இனி மேலும் ஈர்க்க முடியாது என்ற அரசியல்



படிப்பகம்

www.padippakam.com

ஓட்டாண்டித்தனம் தேர்தல் அரசியல் கட்சிகளுக்கு ஏற்பட்டு விட்டன. இலவசத் திட்டங்களும் கவர்ச்சி முழக்கங்களுமே எல்லா தேர்தல் அறிக்கைகளுக்கும் கச்சாப் பொருட்களாகும்.

ஆபாசம், வக்கிரம், ஆத்திரம் கலந்த வெறித்தனமான தாக்குதல், வசவுகள், அவதூறுகளே இவர்களது பிரச்சார ஆயுதங்கள்; சர்வதேச ரீதியில் போதை மருந்து கடத்துபவர்கள், மஃபியா கும்பல்கள், கிரிமினல் குற்றவாளிகள், கள்ளக்கடத்தல்காரர்கள், கள்ளச்சாராய வியாபாரிகள், ஆயுதபேர தரகர்கள் எல்லாம் இவர்களின் கூட்டாளிகள்.

ஆனால் ஏதோ கொள்கை, ஒழுக்கத்திற்காக பாடுபடுபவர்கள் போல உருகுவார்கள்.


கவர்ச்சி முழக்கங்கள், இலவசத் திட்டங்களை வைத்து, தனிநபர் சினிமா கவர்ச்சிகளைக் காட்டி அரசியல் பிழைப்புவாதிகளைக் கொண்ட அமைப்புகளைக் கட்டி தேர்தல் வெற்றிகளை ஈட்டுகின்ற பொறுக்கி அரசியல் பிரதானமாக தென்மாநிலங்களிலும்,

கிரிமினல் மஃபியா கும்பல்களை வைத்து, பலாத்காரமான முறையில் எதிரிகளை வீழ்த்தி, தேர்தல் தில்லுமுல்லுகள், அராஜகங்களை அரங்கேற்றி வெற்றிகளை ஈட்டுகின்ற கிரிமினல் அரசியல் பிரதானமாக வடமாநிலங்களிலும்,

தேர்தல் களத்தில் ஆட்சி செலுத்தும். மூர்க்கமும் அரக்கத்தனமும் பலாத்காரமுமே இங்கு மோதல் வடிவங்கள்; பிரச்சார பலமும் பணபலமும் அடியாள் பலமுமே இங்கு வெற்றி தோல்விகளைத் தீர்மானிக்கப் போகின்றன.

'உலகிலேயே சிறந்தது நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறை; சில பிழைப்புவாதிகள் அரசியலில் புகுந்து கெடுத்து விட்டார்கள்; அரசியல் தரம் தாழ்ந்து போய் விட்டது. இந்தியாவில் தான் இந்த நிலைமை; இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் பாருங்கள்; இரு கட்சிகள் மட்டும் உள்ள ஜனநாயகம் எவ்வளவு ஆரோக்கியமாக இருக்கிறது; இங்குள்ள மக்கள் முட்டாள்களாக இருப்பது தான் இதற்குக் காரணம்' என்று அறிவார்ந்த தோரணையில் சில 'பழுத்த ஜனநாயகவாதிகளும்' படித்த சில முட்டாள்களும் சொல்லி வருகின்றனர். இது அப்பட்டமான பொய்யாகும்.

ஏனெனில் முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகம் என்பதே ஒரு மோசடியாகும். ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடத்தப்படுகின்ற தற்காலிக அமைப்புகளான நாடாளுமன்றம், சட்டமன்றங்களுக்கு வரம்புக்குட்பட்ட அதிகாரம் தான் இருக்கிறது. போலீஸ் துறை, கோர்ட், இராணுவம் போன்ற நிரந்தர அமைப்புகளிடம் தான் உண்மையான அதிகாரம் உள்ளது. திரைமறைவிலிருந்து கொண்டு அரசு என்னும் இந்த ஆயிரங்கால் பூதத்தின் காலும் கையுமாக, கண்ணும் காதுமாக, மூக்கும் மூளையாக இருந்து கொண்டு ஆளுகிறார்கள் அதிகாரிகள். சட்டசபைகளும் நாடாளுமன்றமும் தேர்தல்களும் இருந்தாலும் இல்




லாவிட்டாலும் அதிகாரிகள் ஆட்சிதான் நடக்கும். ஆனால் அதிகாரிகளின் கூட்டம், இது இயக்கும் அரசு எந்திரம் இல்லாமல் நிர்வாகம் நடக்கவே நடக்காது. இதன் செயல்பாடே உழைக்கும் மக்களை ஒடுக்குவதுதான்.

இந்த அரசு எந்திரம் லஞ்சம், ஊழல் போன்ற ஆயிரமாயிரம் இழைகளால் ஆளும் வர்க்கங்களான தரகு அதிகார வர்க்க முதலாளிகளாலும் நிலப்பிரபுக்களாலும் ஆட்டுவிக்கப்படுகிறது. இவர்களின் நலன்களுக்கு எதிரான, கட்சித் தேர்தலில் வெற்றி பெற்றால் நிரந்தர அமைப்பைக் கொண்டு அந்த ஆட்சியை வீழ்த்தி விடுவார்கள். உண்மையில் ஆளும் வர்க்கங்களின் சர்வாதிகாரம்தான் நாடாளுமன்ற ஜனநாயகத்தில் நடக்கின்றது. இதை மூடி மறைத்து மக்களாட்சி தான் நடக்கிறது என்ற மயக்கத்தை ஏற்படுத்துவதற்காகத் தான் தேர்தல் நடத்தப்படுகிறது. இன்னொரு பக்கம் இந்த மயக்கத்தை ஏற்படுத்துவதற்காக முதலாளித்துவ அரசியல் கட்சிகள் செயல்படுகின்றன. ஆளும் வர்க்கத்திற்குள் பிரிவுகளும் போட்டியும் இருப்பதால் அதற்கேற்ப பல கட்சிகள் இருக்கின்றன. இந்த முதலாளித்துவ அரசியல்வாதிகளில் எந்தப் பிரிவினர் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஆளும் வர்க்கத்தின் சார்பில் மக்களை அடக்கி ஒடுக்கியாள வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்கு அவர்கள் தங்களுக்குள் ஒப்புக் கொண்ட வழக்கம்தான் தேர்தல்.

தொகுப்பாக பார்த்தால், பொறுக்கி அரசியலும் கிரிமினல் அரசியலும் தோன்றி வளர கீழ்க்கண்ட காரணங்கள் இருக்கின்றன.

i) மக்களாட்சி என்ற மோசடியை மக்களிடையே ஏற்படுத்த வேண்டியிருப்பது.

ii) அரசு அதிகாரத்தை யார் கையில் வைத்துக் கொண்டு ஆண்டு அனுபவிப்பது என்பதில் ஆளும் வர்க்கப் பிரிவினருக்குள் உள்ள போட்டா போட்டி.

தரகு, அதிகார வர்க்க முதலாளிகளுக்குள்ளேயே அசுர வேகத்தில் வளர்ந்து வரும் புதியவர்களான அம்பானி, இந்துஜா, சபிரியா, கோயாங்கோ ஆகியோர்களுக்கும் பழையவர்களான டாடா, பிர்லா, மஃபத்லால், மோடி, கைத்தான், வாடியா ஆகியோருக்கும் இடையிலான முரண்பாடுகள். நிலப்பிரபுகளுக்குள்ளேயே பஞ்சாப், அரியானா, மேற்கு உத்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா ஆகிய பகுதிகளில் புதிய நவீன விவசாயத்தில் ஈடுபட்டுள்ள நிலப்பிரபுக்களுக்கும் பழைய நிலப்பிரபுக்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் நிலவுகின்றன. அத்துடன் இந்தியாவை மேலாதிக்கம் செய்யும் ரசிய, அமெரிக்க வல்லரசுகளின் அடிவருடிகள் என்ற அடிப்படையிலும் இவர்களுக்கிடையே முரண்பாடுகள் இருக்கின்றன. பொருளாதார நெருக்கடி முற்ற முற்ற இவர்களுக்கு இடையிலான முரண்பாடுகள் முற்றுகிறது. இது அவர்களின் அரசியல் பிரதிநிதிகளை கட்சிகளுக்கு இடையிலான பகிரங்க மோதலாக பதவிச் சண்டையாக வெடிக்கிறது.

போலிக் கம்யூனிஸ்டுகளின் துரோகம் காரணமாக விவசாயிகள் - தொழிலாளர் இயக்கமும், புரட்சிகரப் போராட்டங்களும் மந்தமாக இருந்த போதும், தன்னெழுச்சியான மக்கள் போராட்டங்களும், தேசிய இனங்கள் - பிராந்திய மக்களின் போராட்டங்களும், சாதி - மத வெறி சக்திகளின் கலவரங்களும் கட்டுப்படுத்த முடியாதவாறு கிளம்புகின்றன.

இவைகளின் விளைவாக,

★ மக்களின் போராட்டங்களையும் அரசியல் எதிரிகளையும் ஒடுக்குதவற்காக ஆட்சியில் இருக்கும் கட்சி பல பாசிச அடக்குமுறை நடவடிக்கை - கருப்புச் சட்டங்களை ஏவி விடுகிறது. நிலைமை முற்றுமானால், இறுதியாக பாசிச ஆட்சியைக் கொண்டு வரவும் தயாரிப்பில் ஈடுபடுகிறது. இப்படித்தான் பாசிச ராஜீவ் கும்பல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது; ஆட்




படிப்பகம்

www.padippakam.com

சிக்கு வந்தால் மீண்டும் இப்போக்கு தொடரும்.

★ அரசு சன்மானங்களை பகிர்ந்து கொள்வதற்கான நாய்ச்சண்டை தீவிரமாகின்றது. இதையொட்டி சாதி, மத, இனக் கலவரங்களும், தேசிய இனப் போராட்டங்களும் தீவிரமடைகின்றன. அரசியல் எதிரிகளை வீழ்த்த சாதி, மத வெறி, இன வெறி சக்திகளை முதலாளித்துவ அரசியல் கட்சிகள் பயன்படுத்துகின்றன. நிலைமையை இது இன்னும் கொதிப்படையவே வைக்கின்றது.

இந்தப் போக்கின் வளர்ச்சிதான் பொறுக்கி அரசியலையும் கிரிமினல் அரசியலையும் உருவாக்கியது. எனவே பொறுக்கி அரசியலும் கிரிமினல் அரசியலும் தோன்றுவது, அயோக்கியர்கள் அரசியலை ஆக்கிரமித்துக் கொண்டதால் அல்ல; மாறாக, நாடாளுமன்ற ஜனநாயக அரசியலின் தர்க்க ரீதியான, தவிர்க்க முடியாத இறுதி இழிந்த நிலைதான் இவை.




இந்த அரசியல் போக்குகளின் விளைவாக இன்று, இரு பெரும் அபாயங்கள் நாட்டின் முன், மக்களின் முன் நிற்கின்றன. (1) பாசிச ஆட்சி அபாயம், (2) மத வெறி அபாயம்.

பாசிச அபாயமும் மதவெறி அபாயமும் இன்று நமது மக்களை எதிர்கொண்டுள்ள தலையாயமான அபாயங்கள் என்று ஏன் சொல்கிறோம்?

பாசிச ஆட்சி வந்தால், இம் என்றால் சிறைவாசம்; ஏன் என்றால் வனவாசம்தான். விலைவாசி ஏற்றத்தை எதிர்த்தோ, தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்தோ, அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கோ வாயைத் திறக்க முடியாது. பஞ்சாயத்துகள் உட்பட மாநில அரசுகள் வரை மத்தியில் இருக்கும் பாசிச கும்பலின் நேரடி தர்பாருக்கு வந்துவிடும். போலீஸ் மற்றும் அதிகாரிகளின் கூட்டாட்சி கேள்வி கேட்பாரின்றி கட்டவிழ்த்து விடப்படும். எந்தப் பிரிவு உழைக்கும் மக்களும் தங்களது சாதாரண உடனடிக் கோரிக்கைகளுக்காக பெருமூச்சுகூட விடமுடியாது.

மதவெறிக் கலவரம் பற்றிப் படர்ந்தால் எந்த நேரத்திலும் என்ன நடக்குமோ என்ற அச்சமே நீக்கமற நிறைந்திருக்குமாதலால் உயிரையும் உடமையையும் பாதுகாத்துக் கொள்வதே உடனடிப் பணியாகிவிடுகிறது. பொருளாதார, உடனடி கோரிக்கைகளை எல்லாம் இப்போது நினைத்துகூட பார்க்க முடியாது; விலைவாசி தாறுமாறாக ஏறும். ஆனால் ஒன்றுமே செய்ய முடியாது. மதக்கலவரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களும் பெண்களும் தான் மிக மோசமாக பாதிக்கப்படுவர். கலவரத்தை அடக்க வரும் இராணுவமும் போலீசும் மதவெறிக் குண்டர்களுடன் சேர்ந்துகொண்டு கொட்டமடிக்கும்.

கோர்ட் உட்பட எந்த 'ஜனநாயக' வழிமுறைகள் மூலமும் இந்த இரண்டு அபாயங்களிலிருந்து பாதுகாப்போ, நிவாரணமோ பெற முடியாது. அரசு பயங்கரவாதம், மத வெறி பயங்கரவாதம் என்ற இந்த இரு அபாயங்களுக்கும் இடையில் அகப்பட்டுக் கொண்டு அல்லற்படும் பஞ்சாபின் உழைக்கும் மக்களே இதற்கு அத்தாட்சி.

பாசிசத்தைக் கொண்டு வரும் பிரதான சக்தியாக ராஜீவ் கும்பல் இருக்கிறது; பாசிச ராஜீவ் கும்பலுக்கு மாற்று சக்தியாகக் கூறிக் கொள்ளும் ஜனதா தளம் மற்றும் தேசிய முன்னணி அவற்றுடன் கூட்டுச் சேர்ந்துள்ள போலிக் கம்யூனிஸ்டுகள் மற்றும் பாரதீய ஜனதா ஆகிய எதிர்த்தரப்பும் கூட உதட்டளவிலேயே ஜனநாயக உரிமைகளுக்கான குரல் எழுப்புகின்றனர். மக்களைத் திரட்டி வலுவான இயக்கங்கள் நடத்துவதில்லை. ஏனெனில் தரகு அதிகார வர்க்க முதலாளிகள் நிலப்பிரபுக்களுக்கு ஊழியஞ் செய்வதற்காக பல்வேறு ஜனதா கலவைகளும் பாசிசத்தைக் கொண்டுவரத் தயங்காது. தேசிய முன்னணியின் தலைவர் ராமராவ் ஆந்திரத்தில் பாசிச காட்டாட்சியையே இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிறார் என்பது இதற்குச் சான்றாகும்.

1977-80 ஆகிய குறுகிய காலத்தில் ஆட்சியிலிருந்தபோது பல 'மினிமிசா'க்களைப் போட்டதோடு, மீண்டும் மிசா சட்டம் கொண்டு வர முயன்றவர்கள் தான் இவர்கள். உள் முரண்பாடுகள், பதவிச் சண்டை காரணமாக அது நடக்காமல் போனது. ரசிய சமூக ஏகாதிபத்திய வல்லரசின் எடுபிடிகளான போலிக் கம்யூனிஸ்டுகள் பாசிச ராஜீவ் கும்பலுக்கு ஐந்தாம் படையாக இருந்து துணை போகும் வகையிலேயே செயல்பட்டு வருகின்றனர்.

மதவெறியை திட்டமிட்டு நடத்தும் பிரதான சக்தியாக இருப்பது ஆர்.எஸ்.எஸ், விஸ்வ இந்து பரிஷத் முதலான இந்து மதவெறி அமைப்புகளும் பி.ஜே.பி.யும் தான். ஜமாத் யி இஸ்லாம் போன்ற முஸ்லிம் மதவெறி அமைப்புகளும் இதற்கு துணைபோகின்றன. பாசிச ராஜீவ் கும்பலாகட்டும், தேசிய முன்னணியாகட்டும் இரண்டு அணியும்ம எப்படி வோட்டுப் பொறுக்க இந்த மதவெறி சக்திகளைத் தூண்டிவிட்டு துணையாக இருக்கின்றன என்பதைப் பற்றி இதே இதழில் இன்னொரு பக்கத்தில் விரிவாக எழுதியுள்ளோம்!

பாசிசத்திற்கு சமூக அடிப்படையையும் அரசியல் தலைமையையும் தேடித் தருவதுதான் இ.காங்கிரஸ், ஜனதா தளம் போன்ற ஆளும் வர்க்கக் கட்சிகள்; பாசிசத்தின் ஊற்று மூலமாக அதிகார மையமாக இருந்து இயங்குவது அரசு எந்திரம்.

மதவெறியை ஊட்டி வளர்ப்பது தரகு முதலாளிகளும் பெரும் வியாபாரிகளும் நிலப்பிரபுக்களும் தான்; வோட்டுப் பொறுக்க மதவெறியைத் திட்டமிட்டுத் தூண்டி விடுவது முதலாளித்துவ அரசியல் கட்சிகள் தான்! அரசு எந்திரமே மதவெறி அடிப்படையில் தான் இயங்குகின்றது. இரண்டுமே வன்முறையை வழிமுறையாகக் கொண்டவை.

எனவே, வோட்டுச் சீட்டு மூலம் இவைகளை முறியடிக்க முடியாது. ஒரு பிரிவு முதலாளித்துவ அரசியல் வாதிகளுக்குப் பதிலாக இன்னொரு பிரிவு வோட்டுப் பொறுக்கிகளை ஆட்சிக்கு கொண்டு வருவதன் மூலமும் முறியடித்து விட முடியாது.

மாறாக,

பொதுவுடமை, பரஸ்பர உதவி, நாட்டு நலன் - மக்கள் நலன் என்ற அம்சங்களைக் கொண்ட மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சித்தாந்தத்தில் வழிகாட்டப்படும்,

பாட்டாளி வர்க்கப் பண்பாடு ஒழுக்க நெறிமுறைகளோடு கூடிய,

புரட்சிகர அரசியல் கட்சியின் - உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியின் கீழ் அணி திரண்டு,

ஆயுதப் போராட்டம் உட்பட்டு பல்வேறு மக்கள் திரள் போராட்டங்கள் மூலம்,

ஆளும் வர்க்கங்களை அதன் அரசியல் தலைமையோடும் நாடாளுமன்ற ஜனநாயக அமைப்புகளை அரசு எந்திரத்தோடும் தூக்கி எறிய அணி திரள்வதே இன்று மக்கள் முன்னுள்ள கடமையாகும்:

☆ படரும் பாசிச அபாயத்தையும் மத வெறி அபாயத்தையும் முறியடிப்போம்!

☆ போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்!

☆ புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணி வகுப்போம்!

படிப்பகம்

www.padippakam.com

## பின்லே பள்ளி மாணவர்களிடம் நன்கொடை வசூல் வேட்டை!

# தலைமை ஆசிரியர் மனோகரனின் மகாத்மியங்கள்!

சுயநிதி கல்லூரி தொடங்கி நன்கொடை என்ற பெயரில் கல்வி வியாபாரிகள் லட்சட்சமாகக் கொள்ளை அடிக்கின்றனர். ஆனால் சாதாரண மேனிலைப் பள்ளியிலேயே அதைவிட அதிகமாக கொள்ளையடிக்க முடியும் என்று நிருபித்து, மோசடியில் புதிய சாதனை படைத்து வருகிறார், மன்னார்குடி பின்லே மேனிலைப் பள்ளி தலைமையாசிரியர்.

தொழில்முறை கல்வி வியாபாரிகளோ இவரது பகற்கொள்ளையைக் கண்டு அதிசயித்து மூக்கின் மேல் விரலை வைக்கின்றனர். இவரது கட்டாய நன்கொடை, கட்டண வசூல் கொள்ளையால் பாதிக்கப்பட்ட ஏழை மாணவர்களும் பெற்றோரும் வேதனையால் விம்முகின்றனர்.

தஞ்சை மாவட்டம் மன்னார்குடியிலுள்ள பின்லே மேனிலைப் பள்ளி, தமிழக அரசின் கல்வித்துறையின் மூலமாக முழு உதவி பெறும் பள்ளியாகும். இப்பள்ளியில் சுமார் 1600 மாணவர்கள் 6ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை பயின்று வருகிறார்கள். இவர்கள் அனைவரும் மன்னார்குடியைச் சுற்றியுள்ள கிராமப்புற விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். கல்விச் சேவகர் என்ற போர்வையில் உள்ள பகற் கொள்ளையரான இப்பள்ளி தலைமையாசிரியர் மனோகரன், கல்வி பயில வரும் இந்த ஏழை மாணவர்களிடம் நன்கொடை என்ற பெயரிலும், ''ஜெனரல் பர்ப்பஸ்'' என்ற பெயரிலும் பல வகையிலும் பலவிதமாக ஆண்டுதோறும் வசூல் செய்து லட்சக் கணக்கில் கொள்ளை அடித்துள்ளார். இப்படி பல ஆண்டுகளாக வசூலித்த தொகையை பல வங்கிகளில் பணமாகவும், நகைகளாகவும் விலை உயர்ந்த பொருட்களாகவும் ரகசியமாக குவித்து வைத்துள்ளார். மதச் சிறுபான்மையினர் நடத்தும் கல்வி நிறுவனம் என்பதால் அரசு பெரிய அளவுக்கு எந்த நடவடிக்கையும் எடுக்காது என்ற தைரியத்தில் அவர் அடிக்கும் கொட்டமும், தில்லுமுல்லு, அடாவடித்தனங்களும் எல்லை மீறிப் போய்விட்டன.

இதர கல்வி வியாபாரிகள் போல கட்டாய நன்கொடை என்ற பெயரில் பகற்கொள்ளையடித்து அம்பலப்பட்டுப் போகும் படுமுட்டாள் அல்ல, திருவாளர் மனோகரன். அவர் ஒருபுறம் கட்டாய நன்கொடை வசூலிப்பதோடு மறுபுறம், விதிமுறைகளோடும், ரசீது கொடுத்தும் கூட நூதனமான முறைகளில் வசூல் வேட்டையாடி வருகிறார். குறிப்பாக 4 முறைகளில் அவரது கொள்ளை தொடர்கிறது.

**1) ரசீது இல்லாமல் நன்கொடை என்ற பெயரில் நடத்தும் வசூல் வேட்டை:** இப்பள்ளியில் புதிதாகச் சேரும் 6-ம் வகுப்பு மாணவர்களிடமும் 11-ம் வகுப்பு (+1) மாணவர்களிடமும் கட்டாய நன்கொடை வசூல் ஆண்டுதோறும் நடைபெறுகிறது. ரூ 300லிருந்து ரூ 800 வரையிலும், ஏன், ரூ 1000/- வரை கூட ஒவ்வொரு மாணவனிடமிருந்தும் பிடுங்கப்படுகிறது. இருப்பினும் சராசரியாக ஒவ்வொரு மாணவனிடமிருந்தும் ரூ 400 நன்கொடையாக வசூலிக்கப்படுகிறது என்று வைத்துக் கொண்டால் கூட, இவ்வாண்டு 6ம் வகுப்பிலுள்ள 276 மாணவர்கள், மற்றும் 11-ம் வகுப்பிலுள்ள 194 மாணவர்கள் — ஆக மொத்தம் 470 மாணவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட மொத்த தொகை (470 x 400) ரூ 1,88,000 ஆகும்.

இது தவிர, இப்பள்ளியிலிருந்து மாற்றல் ரசீது (டி.சி) பெற்றுக் கொண்டு செல்லும் மாணவர்களிடமும் கட்டாய நன்கொடையை கறந்து விடுகிறார், தலைமையாசிரியர் மனோகரன். நன்கொடை கொடுக்காவிட்டால் மாற்றல் ரசீது தர முடியாது என்று அடாவடித்தனமும் செய்கிறார்.

இதோடு, 10ம் வகுப்பு மாணவர் ஒவ்வொருவரிடமிருந்தும் ரூ 50 வீதம், 12ம் வகுப்பு மாணவரிடம் ரூ 80 வீதமும் பொதுத் தேர்வுக்கு முன் பள்ளியில் நடைபெறும் தேர்வுக்கான கட்டணம் பெயரில் கட்டாய வசூல் செய்துள்ளார். இத்தொகையைச் செலுத்தாவிட்டால் பொதுத் தேர்வு எழுத அனுமதிக்க மாட்டேன் என்று மாணவர்களிடம் மிரட்டி இவ்வாண்டு 10ம் வகுப்பிலுள்ள 197 மாணவர்களிடம் தலா ரூ 50 வீதம் ரூ 9850ம், 12ம் வகுப்பிலுள்ள 157 மாணவர்களிடம் தலா ரூ 80 வீதம் ரூ 12560ம் வசூலித்து மொத்தம் 22410 ரூபாய் பகற்கொள்ளையடித்துள்ளார், பள்ளி தலைமையாசிரியர் மனோகரன்.

**2) ''ஜெனரல் பர்ப்பஸ் பண்ட்'' என்ற பெயரில் நூதனக் கொள்ளை:** மாணவர்களது பொதுப் பயன்பாட்டு செலவுகளுக்காக ''ஜெனரல் பர்ப்பஸ் பண்ட்'' என்ற பெயரில் வேறுபட்ட வகுப்புகளுக்கு வேறுபட்ட வகையில் இத்தொகை வசூலிக்கப்படுகிறது. நடப்பு கல்வியாண்டில் மட்டும் இப்பள்ளியின் மொத்த மாணவர்கள் 1628 பேரிடம் இவ்வகையில் வசூலிக்கப்பட்ட மொத்த தொகை ரூ.2,07,268.25 பைசா ஆகும். இது தவிர ஸ்பெஷல் பீஸ் என்று தனியாக வேறு வசூலிக்கப்படுகிறது. இதில் கொடுமை என்னவென்றால் மாணவர்களுக்கு நோட்டுப்புத்தகம் வழங்குவதைத் தவிர வேறு எந்த பயன்பாட்டு செலவுகளுக்கும் இத்தொகை பயன்படுத்தப்படாமல் தலைமையாசிரியரின் பாக்கெட்டுக்குள் பதுக்கப்படுகிறது.

வசூலிக்கப்பட்ட ''ஜெனரல் பர்ப்பஸ் நிதியில் ஒவ்வொரு மாணவனுக்கும் 8 நோட்டுகள், 2 கட்டுரைகள் மட்டுமே வழங்கப்படுகிறது. தலைமையாசிரியரின் கணக்குப்படியே இவற்றின் மதிப்பு ரூ.40 தான்.

ஆக, மொத்தமுள்ள 1628 மாணவர்களுக்கு வழங்கப்பட்ட நோட்டுக்களின் மதிப்பு ரூ.65,120 ஆகும். எனவே மாணவர்களுக்கு வழங்கப்பட்ட நோட்டுக்களின் மதிப்பு போக தலைமை ஆசிரியருக்கு கிடைக்கும் லாபத்தொகை (2,07,263.25 -65,120) = ரூ.1,42,143.25 பைசா ஆகும்.

**3) நோட்டுப் புத்தகம் வாங்கி விநியோகித்ததில் கமிஷன் கொள்ளை:** இப்பள்ளியில் மாணவர் - ஆசிரியர் கூட்டுறவு ஸ்டோர் உண்டு. இந்த ஸ்டோர் மூலமாகத் தான் அரசிடம் நோட்டுப் புத்தகங்கள் வாங்கி, அரசு தணிக்கையின் போது கணக்கும் காட்ட வேண்டும். ஆனால் தலைமையாசிரியர் மனோகரன், தனியார் வியாபாரிகளிடம் நோட்டுப் புத்தகங்களை வாங்கி விநியோகித்து அதன் மூலம் 20% கமிஷன் பெற்று கொள்ளை அடித்துள்ளார். இவ்வாண்டில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட நோட்டுக்களின் மொத்த மதிப்பான ரூ.65,120 ல் தலைமையாசிரியர் சுருட்டிய தொகை மட்டும் 13,024 ரூபாய்களாகும்.

**4) அபராதத்தொகை மூலம் அடித்த கொள்ளை:** மாணவர்கள் பள்ளிக்கு வராத நாட்களுக்கு அபாரதத்தொகை விதித்து அதன்மூலம் பல ஆயிரம் ரூபாய்களை அமுக்குகிறார், தலைமையாசிரியர். இப்பள்ளியில் மொத்தமுள்ள 34 பிரிவுகளிலிருந்தும், ஒவ்வொரு பிரிவிலும் ஒரு மாணவன் வராதிருந்தால் ஒருநாளில் வசூலாகும் அபராதத்தொகை மட்டும் ரூ.25 ஆகும். எனவே பள்ளியின் மொத்த வேலை நாட்களான 200 நாட்களில் வசூலாகும் தொகை (200 X25) =ரூ.5000 ஆகும். ஆனால் ஒவ்வொரு பிரிவுக்கும் குறைந்தது 3 மாணவர்களாவது வராமலிருப்பார்கள். இதன்படி பார்த்தால் மொத்தம் ரூ.15,000 தலைமையாசிரியரின் கையில் குவிகிறது. இதில் கொடுமை என்னவென்றால், அபராதத் தொகையை அந்த மாதத்திற்குள் செலுத்தாவிட்டால், கூடுதல் அபராதமாக இரட்டிப்புத்தொகை அம்மாணவனிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

தொகுப்பாகப் பார்த்தால், மேற்கூறிய நான்கு வழிகளிலும் ஓராண்டில் மட்டும் மொத்தம் ரூ.3,80,577.25 பைசாவை தலைமையாசிரியர் மனோகரன் சுருட்டுகிறார். இப்படி பல ஆண்டுகளாக தலைமையாசிரியர் நடத்திவரும் கொள்ளைக்கு இப்பள்ளியின் கைத்தொழில் (கிராப்ட்) ஆசிரியர் தனபால் என்பவர் உடந்தையாகவும் பங்குதாரராகவும் இருந்து வருகிறார். இக்கூட்டுக் கொள்ளையர்கள் பொய்யான கணக்குகள் எழுதியும், போலி ஆவணங்கள் தயாரித்தும் அரசாங்கத்தை ஏய்த்து தமது மோசடித் தொழிலைத் தொடர்ந்து வருகின்றனர்.

**மனோகரனின் மாயாஜாலங்கள்**

தமது அயோக்கியத்தனங்கள் வெளியில் தெரியாமல் இருக்க, பள்ளியின் மதிற்சுவற்றை உயர்த்திக் கட்டி வெளிப்புறத்தில்



படிப்பகம்

வர்ணம் பூசி பொதுமக்களை ஏய்த்து வருகிறார். இந்த தில்லாடி தலைமையாசிரியர். மேலும் பள்ளிக்கு உட்புறத்தில் பூங்கா அமைக்கிறேன், புறா வளர்க்கிறேன், குருவி வளர்க்கிறேன் என்று மாயாஜாலம் காட்டுகிறார். மேலும் பள்ளியின் உட்புறமே டீ ஸ்டால், ஐஸ்கிரீம் ஸ்டால் போன்றவற்றுக்கு அனுமதி அளித்து அதன் மூலமாக தினமும் 15 ரூபாய்க்கும் குறையாமல் வருவாயைச் சுருட்டுகிறார். கடந்த ஆண்டு மாவட்டக் கல்வி அதிகாரி அலுவலகத்திலிருந்து வந்து தணிக்கை செய்த போது, ''நான் நன்கொடை எதுவும் வாங்கவில்லை'' என்ற கூசாமல் புளுகிய இத்தலைமையாசிரியர், பள்ளியின் மத்தியிலே உள்ள நல்ல ஒரு கட்டிடத்தைப் பிரித்துவிட்டு, நான்குபுறமும் சுவற்றை மட்டும் உயர்த்திவிட்டு, இக்கட்டிடம் பெற்றோர் - ஆசிரியர் கழகம அளித்த பணத்தில வாங்கப்பட்டது என்று விளம்பரம் செய்து தமது மோசடியை மறைத்து விட்டார்.



**கழிசடை மனோகரனின் காமலீலைகள்**

மோசடிப் பேர்வழிகள் ஒழுக்கக்கேடானவர்களாகவும் இருப்பார்கள் என்பதற்கு இன்னுமொரு எடுத்துக்காட்டாகத் திகழ்பவர் தான் மனோகரன். இப்பள்ளியின் மாணவர் விடுதியில் முன்பு வார்டனாகப் பணியாற்றிய மெல்டன் என்பவரது மனைவிக்கும் மோசடிப் பேர்வழி மனோகரனுக்கும் கள்ளத்தொடர்பு இருந்து வந்தது. இதை நேரில் கண்ட வார்டன், அவமானத்தாலும் விரக்தியாலும் தன் உடல் மீது மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டு தற்கொலைக்கு முயற்சிக்க, மாணவர்கள் தடுத்து அவரைக் காப்பாற்றினர். இந்த விவகாரம் [illegible] தணிக்கை [illegible] வார்டனின் ஊழலை கையும் களவுமாக கண்டுபிடித்து விட்டதாகவும் அதனால் அவமானப்பட்ட வார்டன் தற்கொலைக்கு முயற்சித்ததாகவும் கதை கட்டி விவகாரத்தை அப்படியே அமுக்கி விட்டார், கழிசடை மனோகரன்.

மன்னார்குடி பின்லே பள்ளியும் ஜெயங்கொண்டம் அருகிலுள்ள மகிமைபுரத்திலுள்ள பள்ளியும் சி.எஸ்.ஐ. என்ற கிருத்துவ நிறுவனத்தின் கீழுள்ளவை. மகிமைபுரத்து விடுதி வார்டனும், அவர் மனைவியும் சில மாணவிகளை மிரட்டியும் நிர்பந்தித்தும் அப்பள்ளி தலைமையாசிரியர் செல்வராஜின் காம இச்சைக்குப் பலியாக்கியதையும், இதனால் அவமானம் தாங்காமல் 6 மாணவிகள் அரளி விதை அரைத்து குடித்து அதில் 2 பேர் மாண்டதையும் சில மாதங்களுக்கு முன் பத்திரிக்கைகள் அம்பலப்படுத்தியதை பலரும் அறிவார்கள். இக்கிரிமினல் - விபச்சார தரகர்கள் மீது வழக்கு பதிவாகி அது விசாரணையில் உள்ளது. இப்போது இதே வார்டனும் அவரது மனைவியும் பின்லே பள்ளி விடுதிக்கு மாறலாகி வந்து, முன்பு மகிமைபுரத்தில் பயன்படுத்தப்பட்ட பெண்களைத் தேடிச்சென்று மிரட்டிப் பணியவைத்து, அவர்களை தலைமையாசிரியர் மனோகரனின் காமஇச்சைக்கு அனுப்பி, தமது சேவையைத் தொடர்கின்றனர். இதனால் மீண்டும் ஒரு மகிமைபுரம் மன்னார்குடியில் உருவாகும் அபாயம் உள்ளது.

**ஊழலை மறைக்க உல்லாசப் பயணம்**

மலைமுழுங்கி மனோகரனின் ஊழலும் கொள்ளையும் அயோக்கியத்தனங்க[illegible]டத் தொடங்கியதும் அவர்களைச் சரிகட்டும் வேலைகள் இப்போது வேகமாக நடக்கிறது.

கடந்த ஆகஸ்ட் மாதம் 22ந் தேதி முதல் செப். 4ந் தேதி முடிய ஊழல் பெருச்சாளி மனோகரன், சில ஆசிரியர்களை டெல்லி, காஷ்மீர் என்று சுற்றுலா அழைத்துச் சென்று அவர்களை உல்லாச போதையில் குளிப்பாட்டி விட்டார். ஏழை மாணவர்களின் வயிற்றலடித்து வசூலித்த பணம் இவ்வாறு களிவெறியாட்டங்களுக்குப் பாழடிக்கப்பட்டுள்ளது. இதனை உணர்ந்து மனசாட்சி உள்ள ஒரு சில ஆசிரியர்கள் மனோகரனின் 'பாசவலை'யில் சிக்காமல் ஒதுங்கி நிற்கின்றனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இப்பள்ளியில் படிக்கும் ஏழை மாணவர்களின் பெற்றோர்கள் வியர்வை சிந்தி அளித்த நன்கொடை மூலம் கட்டப்பட்ட இப்பள்ளியின் மத்தியிலுள்ள கட்டிடத்தின் கல்வெட்டையும், அதே போல பெற்றோர்கள் அளித்த நன்கொடை மூலம் கட்டப்பட்ட மேல்நிலை தண்ணீர் தொட்டியின் கல்வெட்டையும், இப்பள்ளிக்கென சானிடோரியம் கட்ட முடிவாகி, விழா நடத்தி நிறுவப்பட்ட அடிக்கல் - கல்வெட்டையும் அண்மையில் தலைமையாசிரியர் மனோகரன் பெயர்த்து எடுத்து விட்டார். இதன் மூலம் தமது கொள்ளையை மூடி மறைக்க புதிய சதிகளைத் திட்டமிட்டு வருகிறார்.

சுருக்கமாகச் சொன்னால் தலைமையாசிரியர் மனோகரன், ஒரு கிரிமினல் பேர்வழி. அவரது அடாவடித்தனமான பகற்கொள்ளையால் பாதிக்கப்படுவது ஏழை மாணவர்களும் பெற்றோரும் மட்டுமல்ல; பள்ளியின் பெருமையும் கௌரவமும் கூட கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. முனபெல்லாம் பள்ளி இறுதித் தேர்தலில் 100% பெற்றிருந்த மாணவர்களின் தேர்ச்சி விகிதம் இன்று 44% ஆக படுபாதாளத்தில் வீழ்ந்துள்ளது.

மனோகரனது அட்டூழியங்களைக் கண்டு குமுறும் மாணவர்களும் பெற்றோரும் ஆசிரியர்களும் மாவட்டக் கல்வி அதிகாரிக்கு புகார் மனுக்களை அனுப்பி நடவடிக்கை எடுக்குமாறு கோரினர். ஆனால் அவரோ மனோகரனிடம் கையூட்டு பெற்றுக்கொண்டு, அப்புகார் மனுக்களில் உள்ள செய்தியை மனோகரனிடம் தெரிவித்து, ஊழலுக்கு உடந்தையாகச் செயல்படுகிறார்.

இனியும் மாணவர்களும் பெற்றோரும் ஆசிரியர்களும் பகுதிவாழ் மக்களும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று பொறுத்திருப்பதில் பலனில்லை. பகற்கொள்ளை - கிரிமினல் பேர்வழி மனோகரனைத் துரத்தியடிக்கவும், கொள்ளையடித்த பணத்தை மீட்கவும், பள்ளியின் பெருமையை மீண்டும் நிலைநாட்டவும் போராட்டப் பாதையில் கிளர்ந்தெழுவதைத் தவிர வேறு வழியில்லை.

**தகவல்:**
**பின்லே மேனிலைப் பள்ளி**
**மாணவர்கள் - பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள்**

ஆசிரியரும் வெளியிடுபவரும் எஸ்.மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015
அச்சிடுபவர் எம்.கே.சாமி, பிரேம் பிரஸ், 107-ஏ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை - 600 094

www.padippakam.com
படிப்பகம்





www.padippakam.com

ரு[illegible] டாட்டா குருப் இரும்பு மற்றும் எஃகு நிறுவனத்திற்கு 50 ஆண்டுகால சேவையை வழங்கியிருப்பவர் இவர். இவரது பணியை பாராட்டி பெரும் பொருட்செலவில் இவருக்கு விழா எடுத்தார், 'டாட்டா [illegible]ல்' குருப் முதலாளியும், இந்தியாவின் [illegible]கப் பெரும் தரகு முதலாளியுமான ஜே.ஆர்.டி. டாட்டா. பீகாரில் இருக்கும் டாட்டா தொழில் நகரமான ஜாம்ஷெட்ப்பூரில் பெரும் அரசியல் தலைவர் போல் அலங்கார காரில் வரவழைக்கப்பட்டார். ராட்சத உருவில் செய்யப்பட்ட 1.7 டன் (1700 கிலோ) எடை கொண்ட லட்டு உருண்டையை வெட்டி அகமகிழ்ந்தனர் டாட்டா குடும்பத்தினர். 1,200 கிலோ சர்க்கரையும் 43 டின் நெய்யும் கொண்டு தயாரிக்கப்பட்ட லட்டு இது.

இவ்வளவுக்கும் காரணம், 42 ஆம் ஆண்டில் இருந்தே தொழிலாளர் பிரச்சனைகளைக் கையாள்வதில் இவர் கரை கண்டவர் 'டாட்டா எஃகு' நிறுவனத்தின் வரலாற்றில் காணாத தொழிலாளர் போராட்டத்தையும் 'சமாளித்து' உற்பத்தியின் இலக்கை எட்டியவர்! சென்ற ஆண்டு வரை, அரசின் வரி ஏய்ப்பு கறுப்புப்பட்டியலில் இருந்த இந்நிறுவனத்தை 'போராடி' மீட்டெடுத்தவர். 1,862 கோடி ருபாய் மூலதனத்தில் இயங்கும் அந்த ஆலையில் 1,072 கோடி ருபாய் அளவில் அதிநவீன இயந்திரங்களை புகுத்தி உற்பத்தியை பன்மடங்கு பெருக்கியவர்.

இதோ! கோழி குஞ்சு போல் போலீசு மிருகங்களின் காலடியில் கருட்டப்பட்டு குண்டாந்தடியால் குரூரமாக தாக்கப் தொழிலாளியைப் பாருங்கள்!
'டாட்டா ஸ்டீல்' குருப்பின் சகோத
னமான டாட்டா இயந்திரங்கள்
வாகனங்கள் தயாரிக்கும் நிறுவ
(TELCO) தொழிலாளி. டெல்கோ
சங்காத்தனா (TKS) என்ற தொ
தின் உறுப்பினர். நிர்வாகத்தால்
பட்ட டெல்கோ தொழிலாளர்
(TEV)தை நிராகரித்து, நிர்வா
வேலை நீக்கம் செய்யப்பட்ட ச
தொழிலாளியான ராஜன் நாயர்
யில் TKS சங்கத்தில் ஒன்று திரண்
சம்பள உயர்வு பொய் வழக்
வாபஸ் பெறுவது. வேலை நீக்கம் செ
பட்ட தொழிலாளர்களை மீண்டும்
அமர்த்துவது. பிடித்தம் செய்யும் தொ
ளர்களின் சம்பளமான 40 லட்சம் [illegible]
உடனடியாக கொடுக்க வேண்டு[illegible]
செப்டம்பர் மாதம் 29ந்தேதி, 9ஆ[illegible]ாக
உண்ணாவிரதத்தை தொடர்ந்த[illegible]

29ந் தேதி லாரி[illegible]ம்
வேன்களிலும் வந்திறங்கிய ரிசர்வ் பாலீ
சும், பம்பாய் நகர போலீசும் த[illegible] யில்
இறங்கியது. துப்பாக்கி கட்டையா[illegible]மூ
டித்தனமாக தொழிலாளர்களை [illegible]
கூண்டோடு வேனில் வாரிப்[illegible]
கொண்டு பறந்தது. தொழிலா[illegible]
பிரித்து பல சிறைகளில் தள்ளிய[illegible]
இந்தத் தொ[illegible]
விரோத. தரகு முதலாளித்துவ
ரத்தை நாம் ஒன்று சேர்ந்து அ
வது எப்போது?



# இதுதான் இன்றைய இந்தியா

படிப்பகம்